விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 15 வெள்ளிக்கிழமை (31.08.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 255

# சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்த வேண்டும்

## பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுத்து மாகாணசபையில் பிரேரணை சமர்ப்பிப்பு

**(யாழ்ப்பாணம்) இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையை கோரி வடக்கு மாகாணசபையில் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர அரசியல் தீர்வின் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்புடன் கூடிய பொது வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்க வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளது.**

மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கொண்டு வந்த மேற்படி பிரேரணை சபையில் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பிரேரணையில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டு திருத்தங்களுடன் அடுத்த அமர்வில் தீர்மானமாக நிறைவேற்றப்படவுள்ளது.

வடக்கு மாகாணசபையின் 130 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலக சபா மண்டபத்தில் அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதன் போதே மேற்குறித்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரேரணை முன்மொழியப்பட்ட பின்னர் அது தொடர்பான விவாதம் இடம்பெற்ற போது அனைத்து உறுப்பினர் 23

## அனந்தி சசிதரனுக்கு மாகாணசபை அமர்வில் கண்டனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையை கடுமையாக விமர்சித்த அமைச்சர் அனந்தி சசிதரனுக்கு மாகாண சபை அமர்வில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 23

## அரசு தமிழரை ஏமாற்றி சிங்களவரை வடக்கில் குடியேற்றுகின்றது!

டிலான் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

நல்லிணக்கத்தை செயற்படுத்துவதாக கூறும் அரசாங்கம், தமிழ் மக்களின் கண்களை மூடிவிட்டு வடக்கில் சிங்களவர்களை குடியேற்றி வருவதாகவும் அரசா 23

அமைச்சர்கள் விவகாரம்

## சபை அமர்வில் மீண்டும் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண அமைச்சர் விவகாரம் தொடர்பில் நேற்றைய சபை அமர்வில் மீண்டும் குழப்ப நிலை ஏற்பட்டதுடன், 23

## முச்சக்கரவண்டியில் திடீரென தீ பரவல் யாழ் நகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலைக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த முச்சக்கரவண்டி ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்தது. தீப்பிடித்தற்கான காரணம் கண்டறியப்பட 23

## காணாமல் போனோர் தொடர்பில் அரசு விசேட கவனம் வேண்டும்

வடமாகாண சபையில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காணாமலாக்கப்பட்டோர்களது உறவினர்கள் தமது உறவுகளை மீட்டுத் தர வலியுறுத்தி தொடர்ச்சியாக போராடி வருகின்ற நிலையில் அவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்ற மக்கள் சார்பாக அரசாங்கம் காலம் தாழ்த்தாது விசேட கவனமெடுத்து உறவுகளுக்குரிய தீர்வை வழங்க வேண்டுமென வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.

வடக்கு மாகாணசபையின் 130 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலக சபா மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதன் போது நேற்று சர்வதேச காணாமல் போனோர் தினம் என்ப 23

## 5 மாத கர்ப்பிணியான பெண் கழுத்து நெரித்தே படுகொலை

உடற்கூற்று பரிசோதனையில் தெரிவிப்பு

(பரந்தன்)

கிளிநொச்சியில் சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பப் பெண் கழுத்து நெரித்தே கொல்லப்பட்டுள்ளதாக உடற்கூற்று பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடற்கூற்று பரிசோதனைக்காக நேற்று முன்தினம் இரவு சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட நிலையில் உடற்கூற்று பரிசோதனை அறிக்கையிலேயே அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில் இறப்புக்கான காரணம் கயிறு ஒன்றினால் கழுத்தை நெரித்தே கொல்லப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப் 23

## உழவு இயந்திரத்தின் தண்ணீர்த் தாங்கிக்குள் சிக்குண்டு சாரதி பலி

(பூநகரி)

உழவு இயந்திரத்தில் பொருத்தப்பட்ட தண்ணீர் தாங்கி சரிந்து வீழ்ந்ததில் அதற்குள் நசியுண்டு சாரதி பரிதாபமாக உயிரி 23

## ஜனநாயகம், சுதந்திரத்தை உறுதிப்படுத்த மைத்திரி அர்ப்பணிப்புடன் செயற்பாடு

இந்திய பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு



(காத்மண்டு)

இலங்கையின் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தி, நல்லிணக்கம், நிலைபேறான சமாதானம் என்பனவற்றை கட்டியெழுப்பும் பதவியேற்ற நாள் முதல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றும் பணிகளைப் பாராட்டுவதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

நேபாளத்தின் காத்மண்டு நகரில் இடம் 23

## மாகாணசபையை புறந்தள்ளி மத்திய அரசு செயற்பட முடியாது!

சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

மாகாணசபைக்குட்பட்ட விடயங்களில் மாகாணசபையை புறந்தள்ளி மத்திய அரசாங்கம் செயற்படக்கூடாது. அவ்வாறான செயற்பாடுகளை ஜனாதிபதி, பிரதமர் கவனத்திலெடுக்க வேண்டும் 23

## காற்றாலையால் மாகாணசபைக்கு நிதி இழப்பு

(யாழ்ப்பாணம்)

பளையில் அமைக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தில் இரு வருடங்களில் 23

## நிலையான சமாதானத்தை உறுதிப்படுத்த வேண்டும்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் யுத்தம் முடிவடைந்த பின்னர் ஏற்பட்ட சமாதானத்துடன் அரசியல், பொருளாதாரம், தொழில்நுட்பம் ஆகிய அனைத்து துறைகளிலும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற 23

## வவுனியா மடுகந்த குளப்பகுதியில் கைக்குண்டு மீட்பு



(குருமன்காடு)

வவுனியா, மடுக்கந்த குளத்தில் அபிவிருத்தி பணிகள் மேற்கொண்ட போது நேற்று பிற்பகல் வெடிக்காத நிலையிலிருந்த கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக 24

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உட்கட்சி அரசியலாலேயே மாகாணசபையில் குழப்பம்

எதிர்க்கட்சி உறுப்பினர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருக்கின்ற உட்கட்சி அரசியல் பிரச்சினைகளே வடக்கு மாகாண சபையின் தற்போதைய குழப்ப நிலைமைகளுக்கு காரணமென வடக்கு மாகாணசபை, எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடக்கு மாகாணசபையின் 130 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. அதில் அமைச்சரவை 23

# ஈழம் என்ற சொல்லை பாவித்தமையால் கரைச்சிப் பிரதேச சபை தவிசாளரை

## பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவு விசாரணைக்காக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழம் என்ற சொல்லை பாவித்ததால் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளரை எதிர்வரும் திங்கட்கிழமை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைக்காக அழைத்துள்ளது என தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, தற்போதும் நாம் இவ்வாறான விசாரணைக்குள் தான் வாழ்கிறோம் என்பதை சர்வதேசத்துக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 130ஆவது அமர்வில் நேற்று சிவாஜிலிங்கம் கொண்டு வந்த பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறி தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்வை கோரும் வகையில் சிவாஜிலிங்கம் முன்வைத்துள்ள பிரேரணையை வரவேற்கின்றோம். அதனை இழுத்தடிக்காது நிறைவேற்ற வேண்டும்.

ஏனெனில் தற்போதும் எமக்கு பல பிரச்சினைகள் இங்கு இருப்பதை நாங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச சபையில் ஒரு வள்ளுவர் சிலையொன்று கொண்டு வரப்பட்டது. அந்தச் சிலை கொண்டுவரப்பட்ட காலத்தில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடக்கவில்லை. அதனால் பிரதேச சபை செயலாளர் தலைமையிலேயே நிர்வாகம் நடைபெற்று வந்தது.

அந்த நேரத்தில் அங்கு கொண்டு வரப்பட்ட வள்ளுவர் சிலையில் மேற்படி பிரதேச சபை எனக் குறிப்பிடப்பட்டு ஈழம் என்ற சொற்பதமும் பாவிக்கப்பட்டிருந்தது. அதனையறிந்து அங்கு சென்ற புலனாய்வாளர் அந்த ஈழம் என்ற சொற்பதத்தை அழிக்குமாறு கூறியதற்கமைய அது அழிக்கப்பட்டது.

இந்நிலையில் சபை உருவாக்கப்பட்ட பின்னர் அந்த வள்ளுவர் சிலையில் மீளவும் ஈழம் என்ற சொற்பதம் சேர்க்கப்பட்டது. இதனையடுத்து அந்தச் சபையின் தவிசாளரை எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்காக பயங்கரவாதப் பிரிவினர் அழைத்துள்ளனர். இது தான் எமது மக்களின் இன்றைய நிலை ஆகும். இதை சர்வதேசத்துக்கு தெரிவித்து தீர்வை பெற வேண்டும் என தெரிவித்தார்.

இதேவேளை இதன்போது கருத்து வெளியிட்ட உறுப்பினர் சிவாஜிலிங்கம், ஈழம் என்ற விடயத்தில் யாரும் அஞ்சத் தேவையில்லை. இலங்கையின் ஈழம் என்ற சொற்பதத்துடன் நான் சார்ந்த கட்சி உட்பட பல கட்சிகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

அப்போது கருத்து தெரிவித்த அவைத் தலைவர் எமது தேசிய கீதத்திலும் ஈழம் என்ற சொல் உள்ளது. எனவே யாரும் அந்த சொல்லை பாவிக்க அஞ்சத்தேவையில்லை என தெரிவித்தார். (ம-9)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்டு நம்மிடம் விற்கலாம் அல்லது நம்மிடம் அடைவு வைத்துக் கொள்ளலாம்.

**கல்யாண் அடைவு கடை**

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில் வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை மீட்டு நம்மிடம் விற்கலாம் அல்லது 45,000/= ரூபாய்ப்படி அடகு வைத்துக் கொள்ளலாம்.

வட்டி வீதம் மிகமிகக் குறைவு

**கல்யாண் நகை மாடம்**
**கல்யாண் அடைவு கடை**

தொடர்புகளுக்கு: 0777545768, 0772937818

65, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்

(5524)


# மரண அறிவித்தல்

## அப்பையா பாலசிங்கம்



பிறப்பு 20 - 04 - 1947

இறப்பு 28 - 08 - 2018

அரசடி நல்லூரைப் பிறப்பிடமாகவும், பாரதி வீதி, பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பையா பாலசிங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை (28.08.2018) காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2018) வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:-குடும்பத்தினர் 0776035509**

(5140)

# ஈரவிழிகளுடன் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 31 - 12 - 1996

நோயின் பிடியில் 31 - 08 - 2016

## பிரசாந்தி வெற்றிவேலு

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவி
க.பொ.த உயர்தரம்-கணிதப்பிரிவு-2015)



ஈராண்டுகள் இருஜென்மங்கள் போல
ஈரவிழிகளுடன் இருண்டு போனதெம் வாழ்வு
சோர்விலா நடைநடந்து சொர்க்கத்தில் ஆழ்த்தினாயே
சொல்லியழ வார்த்தையின்றிச் சோகத்தில் வாடுகின்றோம்.

நேசம் மிக்கவளே நெஞ்சங்களில் நிறைந்தவளே
நெடும் பயணம் சென்றதேனோ... எங்கள் செல்லக்குட்டி
மென்மையான உன் சிரிப்பால் மேவிநிற்கும் உன்பாசம்
மேதினி உள்ளவரை மேன்மையாய் நிறைந்திருப்பாய்

குடும்ப விளக்கு குவலயத்தில் ஒளிராது
குலமகளே குமுறுகின்றோம் உனையிழந்து
ஆயிரம் உறவுகள் அருகில் இருந்தாலும்
ஆரமுதே அவை உனக்கு ஈடாகுமா?

மறுபிறப்பு உண்டென்றால் மறுபடியும்
மகவாக வந்து மலர்ந்திடம்மா மனையினிலே...
உயிருள்ளவரை உன் நினைவு மாறாது
உயிரானவளே உருக்குலைந்தோம் உன் பிரிவால்...
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்...

"பிரசாந்தி வாசா"
எல்லை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
0212056096

(சி-3677)

# "காணாமல் ஆக்கப்படுவதற்கு இடமளியோம்"









(திருக்கோவில்)

அம்பாறை, திருக்கோவில் பகுதியில் சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தின கவனயீர்ப்புப் பேரணியும் போராட்டமும் நேற்று நடத்தப்பட்டுள்ளன.

குறித்த போராட்டம் "காணாமல் ஆக்கப்படுவதற்கு இடமளியோம்" என்ற தொனிப் பொருளில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதன்போது திருக்கோவில் தபாலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட பேரணி மணிக்கூட்டுக் கோபுரத்தை சென்றடைந்த நிலையில் அங்கு எதிர்ப்பு போராட்டம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.


அம்பாறை மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர்கள் சங்கத்தின் தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் இடம்பெற்ற இப் பேரணி மற்றும் போராட்டத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்ட சங்க தலைவிகள், உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக் கானோர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எங்கள் உறவுகளின் உண்மை நிலை தெரியும் வரை சர்வதேசமே, சர்வதேச நாடுகளே எம்மை கண் திறந்து பாருங்கள், இலங்கை அரசாங்கத்தின் மூலமாக எமக்கு எந்த நீதியும் கிடைக்கப் போவதில்லை, சர்வதேசமே எமக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும் போன்ற வாசங்கள் அடங்கிய பதாகைகளை தாங்கியிருந்தனர். (இ-7)

### 'வடக்கு-கிழக்கில் பிரிவினை ஏற்படாது'

# விடுதலைப்புலிகள் மீண்டும் தலைதூக்கமாட்டார்கள்

## ஜே.வி.பி.எம்.பி.பிமல் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் மீண்டும் விடுதலைப்புலிகள் தலைதூக்க மாட்டார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் வடக்கு, கிழக்கில் எந்த வகையிலும் பிரிவினை ஏற்படாது என நம்பிக்கை இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டைப் பாதுகாக்கும் நாட்டை முன்னேற்றும் சக்தி என்ற தலைப்பில் மக்கள் விடுதலை முன்னணி நாடு முழுவதும் ஏற்பாடு செய்துள்ள தொடர் கருத்தரங்கின், ஒரு கருத்தரங்குதம்புள்ளையில்நேற்றுமுன் தினம் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பிமல் ரத்நாயக்க மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனவாதிகள் போலி யான இனவாதத்தை பரப்பி வருகின்றனர். நாட்டில் மீண்டும் சிவில் போர் ஒன்று ஏற்ப டுவதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. அது மாத்திரமல்ல, முப்படையினரும் மிகவும் வலுவான நிலையில் உள்ளனர். வடக்கு, கிழக்கில் முப்ப டையினருக்கு மேலாக ஒரு குருவிகூட பறந்து செல்ல முடியாதபடி நாட்டில் பாது காப்பு அமுலில் உள்ளது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இந்த நாட்டை முன்னேற்ற முடியாது போயுள்ளது என தெரிவித்துள்ளார்.

அத்துடன், மக்கள் விடுதலை முன்னணி கொள்ளையடிக்கவில்லை, ஊழல், மோசடிகளில் ஈடுபடுவதில்லை, சம்பளம் பெறுவதில்லை என ஒப்புவித் திருந்தலும்மக்கள் விடுதலை முன்னணியால், மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கமுடியவில்லை எனவும் பிமல் ரத்நாயக்க கவலையுடன் தெரிவித் தார். (இ-7)

# திலீபனின் நினைவுத் தூபியில் கட்டப்பட்ட 'புனிதம் காப்போம்' பதாகைகள் அறுப்பு






(நல்லூர்)

நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபியில் "புனிதம் காப்போம்" என மும்மொழிகளில் எழுதப்பட்டு கட்டப்பட்டிருந்த பதாகைகளை இனம் தெரியாத நபர்கள் அறுத்துச் சென்றுள்ளனர்.

நல்லூர் ஆலயப் பெருந் திருவிழா நடைபெற்றுக்கொண்டிருக்கும் காலப் பகுதியில் , தியாக தீபத்தின் தூபியைச் சுற்றியுள்ள பகுதிகளில் தற்காலிக கடைகள் அமைக்கப் பட்டுள்ளன. அதனால் அப் பகுதியில் புனிதத் தன்மைகள் கெடாதவாறு நடந்து கொள்ளும்படி நினைவுத் தூபியில் மும்மொழிகளிலும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபனின் பங்களிப்பில் பதாகைகள் நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு கட்டப்பட்டிருந்தன.

அவற்றை நேற்று வியாழக்கிழமை (பதாகை கட்டி ஒரு சில மணிநேரத்தில்) அதிகாலை 1.32 மணிக்கு இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் வந்த சிவில் உடை தரித்த இருவர் அறுத்துக் கொண்டு தமது மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவமானது நல்லூர் ஆலயச் சூழலில் பொருத்தப்பட்டிருந்த சீ.சீ.ரி.வி. கமராக்களில் பதிவாகியுள்ளன.

அதேவேளை கடந்த 14 ஆம் திகதி மாநகர சபை பணியாளர்கள் நினைவுத் தூபியை சுற்றி வேலி அமைக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அவ்விடத்திற்கு சிவில் உடையில் வந்தவர்கள் தம்மை இராணுவ புலனாய்வாளர்கள் என அறிமுகப்படுத்திக் கொண்டு, "வெளியில் சந்தோஷமா வாழ ஆசையில்லையா?" , "பருப்பும் சோறும் சாப்பிட ஆசையா?" என பணியாளர்களை கேட்டு அச்சுறுத்தியிருந்தனர்.

அதனால் அச்சமடைந்த பணியாளர்கள், வேலி அமைக்கும் வேலையைகைவிட்டு அலுவலகம் திரும்பியவுடன், தாம் அந்த பணியில் ஈடுபடமாட்டோம் என தெரிவித்தனர். அதனால் வேலி அடைக்கும் மிகுதி பணிகளை வெளியில் இருந்து தற்காலிக வேலைக்கு பணியாளர்களை அமர்த்தி முழுமைப் படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-9)


## வாங்கிவிட்டீர்களா?

**அகரம்**

2019இல் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் தரம் - 4 மாணவர்களுக்கானது

### புலமைப்பரிசில் அறிமுக மாதிரி வினாத்தாள் தொகுப்பு

- அறிமுக மாதிரி வினாத்தாள்கள் – 05
- விசேட தமிழ்மொழி வினாத்தாள்கள் – 05
- விசேட கணித வினாத்தாள்கள் – 05
- விசேட சுற்றாடல் வினாத்தாள்கள் – 05
- விசேட ஆங்கில வினாத்தாள்கள் – 04
- விசேட சிங்கள வினாத்தாள்கள் – 02
- அனைத்துக்கும் முழுமையான புள்ளித்திட்டத்துடன் கூடிய விடைகள்

புகழ்

அனைத்து வினாக்களும் புலமைப்பரிசில் இறுதிப் பரீட்சை வினாத்தாள்களில் அமையும் வினாக்களை ஒத்த அமைப்பைக் கொண்டவை.

- தரம் 3, 4 விடயங்களை மீட்டு முழுமையாகத் தயாரான நிலையில் தரம் - 5க்குள் நுழையுங்கள் - அகரம் இதற்குத் துணைபுரியும்.

**பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்**

- நாட்டிலுள்ள அனைத்துப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
- நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா புத்தகசாலையில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூ.500.00


(5137)

தொடர்புகளுக்கு :-
Lanka Book Depot, Colombo.
T.P : 0773911998, 0112341942

L.விஜேந்திரன்
புகழ் பப்ளிகேசன், யாழ்ப்பாணம்.
T.P: 0774118950

# 'புயலாக' பும்ரா 'இடியாக' இஷாந்த்

## இந்தியா அசத்தல் ஆரம்பம்



பும்ரா



சவுத்தாம்ப்டன் டெஸ்டின் முதல் இன்னிங்சில் இங்கிலாந்து அணி 246 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. 'வேகத்தில்' புயலாக சீறிய பும்ரா மூன்று விக்கெட்டுகளும் 'இடியாக' வீழ்ந்த இஷாந்த் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இங்கிலாந்து சென்றுள்ள இந்திய அணி ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதல் இரு டெஸ்டில் இங்கிலாந்து வென்றது. மூன்றாவது டெஸ்டில் இந்தியா வெற்றி பெற்ற போதும் தொடரில் 1-2 என பின் தங்கியுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான நான்காவது டெஸ்ட் நேற்று சவுத்தாம்ப்டனில் ஆரம்பமாகியது.

நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணியின் தலைவர் ஜோ ரூட், துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இந்திய அணியில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

**பும்ரா நம்பிக்கை**

இங்கிலாந்து அணிக்கு அலெஸ்டர் குக், ஜென்னிங்ஸ் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. ஆடுகளத்தில் இருந்த புற்கள் வேகப்பந்து வீச்சிற்கு சாதகமாக அமைய இந்திய 'வேகங்கள்' போட்டுத் தாக்கினர். தனது இரண்டாவது ஓவரின் முதல் பந்தில் ஜென்னிங்சை 'டக்' அவுட்டாக்கினார் பும்ரா.

அடுத்து வந்த ஜோ ரூட்டை 4 ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.மீண்டும் மிரட்டிய பும்ரா, பின் வந்த பேர்ஸ்டோவை (6) விரைவில் பெவிலியன் அனுப்பி வைத்தார். நீண்ட நேரம் தாக்குப்பிடித்த குக், 17 ஓட்டங்கள் எடுத்த நிலையில் பாண்ட்யா பந்தில் அவுட்டாக இங்கிலாந்து அணி 36 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்தது.

**கர்ரான் அரைசதம்**

பட்லர்(24), ஸ்டோக்ஸ்(23) அணியை கைவிட இங்கிலாந்து86/6 என தள்ளாடியது.பின் இந்திய பந்துவீச்சாளர்கள் ஏமாற்ற சரிவில் இருந்து மீண்டது இங்கிலாந்து. மொயீன் அலி (40), ரஷித் (6) அவுட்டான போதும் கர்ரான் அரைசதம் அடித்தார். இவர் 78 ஓட்., அஷ்வினிடம் போல்டாக இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 246 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் பும்ரா 3, மொகமட் ஷமி, இஷாந்த், அஷ்வின் தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய இந்திய அணி முதல் நாள் முடிவில் முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 19 ஓட்டங்களை எடுத்திருந்தது. தவான் (3), ராகுல் (11) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

போட்டியின் 2ம் நாளாட்டம் இன்றாகும்

**இஷாந்த் 250**

சர்மா, டெஸ்ட் அரங்கில் 250 விக்கெட் வீழ்த்தினார். இந்த இலக்கை எட்டிய மூன்றாவது இந்திய வேகப்பந்து வீச்சாளர், ஏழாவது இந்திய பந்துவீச்சாளரர் ஆனார். தவிர இங்கிலாந்து அணிக்கு எதிராக இவர் கைப்பற்றிய 50ஆவது டெஸ்ட் விக்கெட்டாகவும் இது அமைந்தது.

**200**

இங்கிலாந்தின் பட்லரை 'பிடியெடுத்து' அனுப்பிய ஹோலி சர்வதேச டெஸ்ட் அரங்கில் 200ஆவது 'பிடி' செய்து அசத்தினார். இந்த இலக்கை எட்டிய நான்காவது இந்திய வீரர் ஆனார். முதல் மூன்று இடங்களில் டிராவிட் (334), அசார் (261), சச்சின் (256) உள்ளனர்.

**38**

ஹோலி தலைவராக களமிறங்கிய 38 டெஸ்டிலும், லெவன் அணியில் ஏதாவது ஒரு மாற்றம் இருந்தது. முதன் முறையாக அடுத்தடுத்த டெஸ்டில் (நொட்டிங்காம், சவுத்தாம்ப்டன்) மாறாத 'லெவன்' அணியுடன் இந்தியா களமிறங்கியது.

# பெடரர், ஷரபோவா முன்னேற்றம்







யு.எஸ்., ஓபன் டென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு சுவிட்சர்லாந்தின் பெடரர், ரஷ்யாவின் ஷரபோவா உள்ளிட்டோர் முன்னேறினர்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் யு.எஸ்., ஓபன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் 'நம்பர் 2' வீரரான சுவிட்சர்லாந்தின் பெடரர், ஜப்பானின் யசோஹிடோவை (177ஆவது இடம்) சந்தித்தார்.

முதலிரண்டு செட்டை 6-2, 6-2 என எளிதாக கைப்பற்றிய பெடரர், கடைசி செட்டையும் 6-4 என தனதாக்கினார். ஒரு மணி நேரம் 52 நிமிடம் நடந்த போட்டியின் முடிவில் பெடரர் 6-2, 6-2, 6-4 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

மற்றொரு முதல் சுற்றில் செர்பியாவின் ஜோகோவிச், ஹங்கேரியின் மார்டனை எதிர் கொண்டார். சுட்டெரித்த வெயிலால் (38 டிகிரி செல்சியஸ்) தவித்த வீரர்கள் 10 நிமிட இடைவெளி கேட்டு, ஐஸ் ஒத்தடம் பெற்றுக் கொண்டனர். கிராண்ட்ஸ்லாம் அரங்கில் வீரர்கள் இப்படி இடைவெளி கேட்டது இதுவே முதல் முறை. முடிவில், ஜோகோவிச் 6-3, 3-6, 6-4, 6-0 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

மற்றொரு போட்டியில் ஜேர்மனியின் ஜெர்பர் 7-6, 6-3 என ரஷ்யாவின் மார்கரிடாவை தோற்கடித்தார்.

மற்றைய போட்டிகளில் டென்மார்க்கின் வோஸ்னியாக்கி, செக் குடியரசின் கிவிட்டோவா, லத்வியாவின் ஆஸ்டபென்கோ உள்ளிட்டோர் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினர்.

**பாம்ப்ரி தோல்வி**

முதல் சுற்றில் இந்தியாவின் யூகி பாம்ப்ரி, பிரான்ஸின் பியர் ஹியுஸ் மோதினர். முதல் செட்டை 3-6 என இழந்த பாம்ப்ரி, அடுத்த செட்டையும் 6-7 என போராடி பறிகொடுத்தார்.

3வது செட்டிலும் ஏமாற்றிய இவர் 5-7 என இழந்து நேர் செட் கணக்கில் வீழ்ந்தார்.

**ஷரபோவா வெற்றி**

பெண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் தரவரிசையில் 22 ஆவது இடத்திலுள்ள ரஷ்யாவின் ஷரபோவா, சுவிட்சர்லாந்தின் ஸ்கினிடரை (186வது இடம்) சந்தித்தார். முதல் செட்டை 6-2 என கைப்பற்றிய ஷரபோவா, 'ரை பிரேக்கர்' வரை சென்ற அடுத்த செட்டையும் 7-6 என வசப்படுத்தினார்.

முடிவில், ஷரபோவா 6-2, 7-6 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

**3ம் சுற்றில் செரினா**

பெண்கள் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்றில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், ஜேர்மனியின் கரினா வித்தோயப்ட்டை சந்தித்தார். அபாரமாக விளையாடிய செரினா 6-2, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

# போதைப்பொருள் கடத்தல்; 7 மாதத்தில் 49 ஆயிரத்து 676 பேர் கைது

(கொழும்பு)

சட்டவிரோத போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்தும் விசேட வேலைத்திட்டத்திற்கமைவாக இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி வரையில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின்போது 49 ஆயிரத்து 676 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து ஹெரோயின், கஞ்சா, கொக்கெய்ன், அசீஸ் போன்ற சட்டவிரோத போதைப் பொருட்களும் புதிய வகை போதைப் பொருட்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள போதை மாத்திரைகள் பலவும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# குழந்தை உயிரிழப்பு;வைத்தியசாலை மூடல்

(காலி)

கலஹா வைத்தியசாலையை தற்காலிகமாக மூட, மத்திய மாகாண சுகாதார பணிப்பாளர் நடவடிக்கை எடுத்துள்ளார். குறித்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட குழந்தையொன்று உயிரிழந்த சம்பவத்தையடுத்து, ஆத்திரமடைந்த தெல்தோட்டை பகுதி மக்கள், வைத்தியசாலை உபகரணங்களுக்கு பாரிய சேதம் விளைவித்தனர். இதனையடுத்து, நேற்று முன்தினம் தொடக்கம் வைத்தியசாலையில் எவ்வித பணியும் இடம்பெறவில்லை.

இதேவேளை கலஹா வைத்திய சாலையில் பணி யாற்றிய இரண்டு வைத்தியர்கள், மாகாண சுகாதார காரியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் குறித்த வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. (இ-7)

# அலோசியஸ், பலிசேனவுக்கு மீண்டும் விளக்கமறியல்



(கொழும்பு)

பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இருவரையும் எதிர்வரும் செப்டெம்பர் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ-7)

# சரத் குமார குணரத்னவுக்கு வெளிநாடு செல்ல அனுமதி

(கொழும்பு)

முன்னாள் பிரதியமைச்சர் சரத் குமார குணரத்னவுக்கு, வெளிநாடு செல்ல நேற்று அனுமதியளித்துள்ளது.

முதலாம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை இந்தியா சென்றுவர அவருக்கு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

இந்தியாவில் இடம்பெறவுள்ள, மத நிகழ்வொன்றில் பங்குபற்ற, நீதிமன்றில் அனுமதி கோரி அவர் முன்வைத்த கோரிக்கைக்கே, நீதிமன்றம் இவ்வாறு அனுமதியளித்துள்ளது.

நீர்கொழும்பு களப்பு அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட 14 மில்லியன் ரூபாய் நிதியை தவறாக பயன்படுத்தியதாக, முன்னாள் பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்னவுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ள நிலையில், நீதிமன்றம் அவருக்கு வெளிநாடு செல்ல முன்னர் தடை விதித்திருந்தது.

குறித்த வழக்கு, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (இ-7)


# பெறுகை அறிவித்தல்
# பருத்தித்துறை நகரசபை

1.தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2.தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் 30.06.2016 ஆம் திகதிய 04/2016(1) ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின்படி வட மாகாணத்தில் தகுதியுடைய வியாபாரம் அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்டவணையிற் காட்டியபடி வீதிப் புனரமைப்பிற்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் CIDA பதிவுள்ளவராகவும், கறுப்புப்பட்டியலில் பெயரிடப்படாததுமான கேள்வியாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

3.தேவையான தகைமைகள் பெறுகை ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

4.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் மேலதிக தகவல்களையும்,பெறுகை ஆவணங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

5.பெறுகைப் பத்திரம் வழங்கப்படும் திகதி 2018.08.31 ஆம் திகதி தொடக்கம் 2018.09.14 ஆம் திகதி பி.ப.15.00 மணிவரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா 2340/= (VAT, NBT உட்பட) இனை செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

6.பெறுகை ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, பருத்தித்துறை நகரசபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

7.பெறுகைப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 2018.09.17 ஆம் திகதி பி.ப 14.00 மணியுடன் நிறுத்தப்பட்டு உடன் பெறுகைகள் திறக்கப்படும். (பெறுகைப் பத்திரம் திறக்கப்படும் சமயம் பெறுகையினை சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)

8.பெறுகையானது பெறுகை சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று 16.11.2018) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

9.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்தில் 2018.09.07ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும். கேள்விகள் தொடர்பான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவினால் எடுக்கப்படும்.

10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியன் ரூபாவில் (வற் நீங்கலாக) | ஒப்பந்த காலம் | நிதி மூலம் | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 1 | பொது நூலக வாகனத் தரிப்பிடமும் மலசலகூடவசதியும் ஏற்படுத்துதல் | 0.350 Mn | 1 மாதம் | சபை நிதி | C9 | 4000.00 | 29.11.2018 |
| 2 | தும்பளை கிழக்குசிறுவர் பூங்கா புனரமைத்தல் | 1.285 Mn | 2 மாதம் | சபை நிதி | C9 | 13000.00 | 29.11.2018 |
| 3 | நவீன சந்தை துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் அமைத்தலும் மேலதிக வசதிகளை ஏற்படுத்தலும் (மரக்கறிச் சந்தை) | 0.816 Mn | 1 1/2 மாதம் | சபை நிதி | C9 | 8500.00 | 29.11.2018 |
| 4 | மெதடிஸ்ற் மைதான–கல்லூரி வீதி வெள்ளவாய்க்கால் அமைத்தல் | 3.470 Mn | 3 மாதம் | அபிவிருத்தி ஒதுக்கம் - 2017 | C8 | 350000.00 | 14.12.2018 |

**தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக் குழு,**
**பருத்தித்துறை நகர சபை, பருத்தித்துறை. 31.08.2018**

(சி-3682)


# இராசி பலன்

**மீனம்:** தொழிலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**மேடம்:** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கனவு பலிதம் உண்டு, பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுபகாரிய செலவுகள் அதிகரிக்கலாம், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**மிதுனம்:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்:** நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரலாம், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

| சந் | | | |
|---|---|---|---|
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம், சித்திரை | | ராகு |
| கேது, செவ், | | | சூரி, புத |
| சனி, | | குரு | சுக் |

**31.08.2018**

ஆவணி 15, வெள்ளிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு

பஞ்சமி முன்னிரவு 8.05 மணிவரை

அச்சுவினி முன்னிரவு 7.40 மணிவரை

சுபநேரம் 6.05-7.35 மணிவரை

இராகுகாலம் 10.35-12.05 மணிவரை

அமிர்தசித்தம்

வளவன்

**கடகம்:** வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் முன்னேற்றமுண்டு, போசன நன்மையுண்டு.

**மகரம்:** செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**சிம்மம்:** தொழிலில் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்,வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள்.

**தனுசு:** நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வியாபார விருத்தியுண்டு, போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்:** மனக்குழப்பம் அகலும், திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**துலாம்:** உறவினர்களின் வருகையுண்டு, குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி கூடும், வெளியூர் பயணத்தால் ஆதாயமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**கன்னி:** கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.



வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகத்தில் கடந்த 27ஆம் திகதி ஜனாதிபதி மக்கள் சேவையின் தேசிய வேலைத்திட்ட நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் மக்களுடைய பல பிரச்சினைகளுக்கு உடனடித்தீர்வு காணப்பட்டதாக பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். அத்தோடு, பல்வேறு நிகழ்வுகளும் இங்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. இலவச திருமணப்பதிவு நிகழ்வுகள் மற்றும் இரத்ததானம் , விசேட தேவையுடையோருக்கான உதவிகள் வழங்கல், மரக்கன்றுகள் நாட்டல், வாகனப் புகைப்பரிசோதனை, தேசிய அடையாள அட்டை தொடர்பான பிரச்சினைக்கான தீர்வு மற்றும் ஏனைய பல விடயங்களும் இங்கு இடம்பெற்றன. (படங்கள்:-கரணவாய்,பொற்பதி செய்தியாளர்கள்)

# வடக்கு மாணவர்களுக்கான திறன்காண் போட்டி முதன்முறையாக யாழில் பிரமாண்டமாக ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண மாணவர்களுக்கான திறன்காண் போட்டி முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் மிக பிரமாண்டமான முறையில்நடைபெறவுள்ளது. இந்த போட்டி நிகழ்வை Anchor நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஊங்கரன்மீடியா சொலூஷன்இணைந்து நடத்தவுள்ளது.

வடக்கு மாகாண மாணவர்களின் திறமையை இனங்காணும் வகையில் fonterra நிறுவனத்தின் ஏற்பாட்டில் 'Anchor students with talent' மாணவர்களுக் கான திறன்காண் போட்டி நிகழ்ச்சி தொடர்பான ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் யூஎஸ் தனியார் விடுதியில் இடம்பெற்றது. அதன்போதே ஏற்பாட்டாளர்கள் இவ்விடயத்தை அறிவித்துள்ளனர்.

வட மாகாண மாணவர்களின் திறமையை முன்னேற்றும் நோக்கில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடனம் , சங்கீதம், தொழில்நுட்பம் என்ற அடிப்படையில் மாணவர் திறன்காண் போட்டி நடைபெறவுள்ளது.

அந்த வகையில் வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய 5 மாவட்டங்களிலுள்ள பாடசாலை மாணவர்களை தெரிவு செய்வதற்கான முதல்சுற்று இடம்பெறவுள்ளது.

இரண்டாவது சுற்று கிளிநொச்சியிலும், இறுதிச் சுற்று எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் மிக பிரமாண்டமாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இறுதிப்போட்டி நிகழ்வுக்கு அனுமதி இலவசமாக வழங்கப்படவுள்ளது.

அந்தவகையில் இப்போட்டி நிகழ்ச்சி மூன்று சுற்றுகளாக நடைபெறும். இதனடிப்படையில் முதலாம் சுற்று 6 பிரதேசங்களில் நடனம், இசை, தொழில்நுட்பம் என்று மூன்று பிரிவுகளின் கீழ் நடைபெறவுள்ளது.

முதலாம் சுற்றில் கீழ் பிரிவு (தரம் 6.7.8.9) மற்றும் மேற்பிரிவில் (10.11. 12.13) இருந்து, 12 போட்டியாளர்கள் நடனத்திலும் 12 போட்டியாளர்கள் இசைத் துறையிலும் 12 போட்டியாளர்கள் தொழில்நுட்பத்திலும் ஆக, மொத்தம் 36 போட்டியாளர்கள் இரண்டாம் சுற்றுக்கு தேர்வுசெய்யப்படுவர்.

இந்த 36 போட்டியாளர்களில் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு என்று 6 போட்டியாளர்கள் நடனத்திலும் 6 போட்டியாளர்கள் இசைத்துறையிலும், 6 போட்டியாளர்கள் தொழில்நுட்பத்திலுமாக, மொத்தம் 18 போட்டியாளர்கள் இறுதிச்சுற்றுக்கு தெரிவு செய்யப்படுவர்.

இறுதிச்சுற்றில் பங்குபெறும் 18 போட்டியாளர்களும் முதலாம் இடம் , இரண்டாம் இடம் , மூன்றாம் இடம் என தேர்வுசெய்யப்படுவர்.

**முதலாம் சுற்று**

6 பிரதேசங்களில் நடைபெறும் .அதாவது செபடெம்பர் 15 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரியில் காலை 8.30 மணியில் இருந்து மாலை 5 மணி வரையும், 16 ஆம் திகதி புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5. மணிவரையும், 22 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய கல்லூரியில் காலை 8.30 மணியில் இருந்து மாலை 5 மணிவரையும் 23 ஆம் திகதி முல்லைத்தீவு மத்திய மகா வித்தியாலயத்தில்காலை 8.30 மணியில் இருந்து மாலை 5 மணி வரையும் 29 ஆம் திகதி வவுனியா மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 8.30 மணியில் இருந்து மாலை 5 மணி வரையும் 30 ஆம் திகதி மன்னார் சென்.சேவியர் கல்லூரியில் காலை 8.30 மணியில் இருந்து மாலை 5 மணி வரையும் நடைபெறும்.

**இரண்டாம் சுற்று**

ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்திலும் இறுதிச் சுற்று ஒக்டோபர் 13 ஆம் திகதி யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்திலும் இடம்பெறும்.

முதலாம் சுற்றில் பங்குபெறும் அனைத்து மாணவர்களுக்கும் பங்குபெற்றமைக்கான சான்றிதழ்கள் போட்டி தினத்தன்று பாடசாலைப் பொறுப்பாசிரியர் அல்லது அந்த பாடசாலைக்குரிய மாணவ தலைவர் கையில் ஒப்படைக்கப்படும்.

இரண்டாம் சுற்றில் இறுதிச்சுற்றுக்கு தகுதிபெறும் வெற்றியாளர்களைத் தவிர்த்து தகுதிபெறாத ஏனைய 18 பேருக்கும் அன்றைய தினமே சான்றிதழும் கேடயமும் வழங்கப்படும்

இறுதிச்சுற்றில் முதலாம் பரிசு : 50,000 ரூபா ரொக்கப் பணமும், கேடயம் மற்றும் பதக்கமும் வழங்கப்படும். இரண்டாம் பரிசு: 25,000 ரூபா ரொக்கப்பணமும், கேடயம் மற்றும் பதக்கமும் வழங்கப்படும். மூன்றாம் பரிசு : 15,000 ரூபா ரொக்கப்பணமும், கேடயம் மற்றும் பதக்கமும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (இ-9)




# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு வட்டுக்கோட்டை ஆகாயக்குளம் விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. மாலை 5 மணிக்கு மூலஸ்தான வசந்த மண்டப பூஜைகளைத் தொடர்ந்து சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா இடம்பெறவுள்ளது. (இ

# குடமுழுக்கு பெருஞ்சாந்திப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் நாவலர் வீதியிலமைந்துள்ள "சீரடி சாயி மந்திர்" ஸ்ரீ ஜெகத்குரு சாயி நாதரின் அஷ்ட பந்தன ஏக குண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்திப் பெருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணி தொடக்கம் முற்பகல் 10 மணிவரை பால்காப்பு, கங்காபூஜை, மூர்த்தி கர்ண பந்தனம் நடைபெறும். தொடர்ந்து முற்பகல் 11.30 மணிக்கு தூபி அபிஷேகம், மூர்த்தி அபிஷேகம், மகா அபிஷேகம், அலங்காரம், ஆர்த்தி என்பன இடம்பெற்று பெருஞ்சாந்திப் பெருவிழா நிறைவு பெறும். (இ

# அலங்காரத் திருவிழா விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை அருள்மிகு சிவபூதவராயர் ஆலய அலங்காரத் திருவிழா விஞ்ஞாபனம் எதிர்வரும் 3ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி 12ஆம் திகதி புதன்கிழமை வரையான 9 தினங்கள் நடைபெறவுள்ளன. (இ

# நூல்கள் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மாலினி மாலாவின் நூல்கள் வெளியீட்டு விழா அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் நாளை பிற்பகல் 3.30 மணியளவில் ஓய்வு பெற்ற அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும். இதில் வடகோவை வரதராஜன், வேதநாயகம் தபேந்திரன் ஆகியோர் சிறப்புரைகளை வழங்குவர். (இ

# நம்பிக்கைச் சபையின் கலைவிழா

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சமூக மேம்பாட்டு நிறுவன நம்பிக்கைச் சபையின் கலை இலக்கியப் பண்பாட்டுக் குழுவினரின் ஏற்பாட்டில் கலைவிழா நாளை சனிக்கிழமை இரவு 7 மணியளவில் சண்டிலிப்பாய் மத்தி இளங்கதிர் சனசமூக நிலையத்தில் இடம்பெறும்.

சண்டிலிப்பாய் சமூக மேம்பாட்டு நிறுவன நம்பிக்கைச் சபையின் தலைவர் தா. கிருஸ்ணகுமார் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலைஞரும் எழுத்தாளருமான வை.திவ்வியராஜா, சிறப்பு விருந்தினர்களாக புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் வட பிராந்தியச் செயலாளரும், வலி.கிழக்கு பிரதேச சபை உறுப்பினருமாகிய கா. செல்வம் கதிர்காமநாதன், சட்டத்தரணி சோ. தேவராஜா, சட்டத்தரணி ஆ. இரகுபதி, சி.சந்திரசேனா, வலி.மேற்கு சமூக மேம்பாட்டு இணையத்தின் தலைவர் க. புஸ்பராஜா, காரைநகர் சமூக மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் கி.கோவிந்தராஜன், வடமராட்சி அபிவிருத்திச் சபையின் தலைவர் மா. லோகசிங்கம், யாழ்ப்பாணம் ஸ்ரீ அம்பாள் ரேடர்ஸ் உரிமையாளர் க. தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-7)

# வடக்கு சுகாதாரத் தொண்டர்களுக்கு செப்டெம்பர் மாதத்திற்குள் உரிய தீர்வு

## முதலமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களது பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு முன்னதாக தாம் தீர்வொன்றை பெற்றுத்தருவதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார தொண்டர்கள் செயற்பாட்டு குழு தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாண சுகாதார தொண்டர்களுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் இடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது. இச் சந்திப்பின் பின்னர் சுகாதார தொண்டர்செயற்பாட்டுக் குழுவில் கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேலும் இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில்,

கடந்த 16.08.2018 அன்று நாம் எமது பிரச்சினை தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து மத்திய சுகாதார அமைச்சரை சந்தித்து பேசியிருந்தோம்.

இதன்போது மத்திய சுகாதார அமைச்சர், நியமனங்களை மேற்கொள்வது தொடர்பாக 454 பேருக்கு அனுமதியளித்து வடக்கு மாகாண சபைக்குகொடுத்துள்ளதாகவும் ஆகவே மாகாண அமைச்சே இதனை செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கமைய எமது சங்கத்தினூடாக வடக்கில் உள்ள சுகாதாரத் தொண்டர்களை உறுதிப்படுத்தி தருமாறு முதலமைச்சர் கோரியிருந்தார். இதன்படி நாம் நேற்று முன்தினம் முதலமைச்சரிடம் வடக்கிலுள்ள 405 பேரது பெயர் விபரங்களை கொடுத்திருந்தோம்.

இப் பெயர்களை மத்திய அமைச்சரவையில் அனுமதி பெறுவதற்காக மாகாண அமைச்சரவை ஊடாக அனுப்புவதாகவும் அதன் கடித பிரதியை எமக்கு அனுப்புவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார். அத்துடன், எமது இப் பிரச்சினையை எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கு முன்னதாக தீர்த்து வைப்பதாகவும் முதலமைச்சர் கூறியதாக சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர். (இ-9)

# திருட்டுப்போன மோ.சைக்கிள் மீட்பு


(கரணவாய்)

வதிரி இரும்பு மதவடிப பகுதியில் தேசிக்காய் திருடியவர் கைவிட்டு சென்ற மோட்டார் சைக்கிள் பருத்தித்துறை பகுதியில் திருட்டுப்போன மோட்டார் சைக்கிள் என பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் வதிரி இரும்பு மதவடிப்பகுதியில் உள்ள காணி ஒன்றில் ஒருவர் திருட்டுத்தனமாக தேசிக்காய் பறிப்பதாக நெல்லியடி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து பொலிஸார் அப்பகுதிக்கு சென்ற போது தேசிப்பழங்களை பிடுங்கியவர் தான் கொண்டு வந்த மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு தப்பிச்சென்றுள்ளார்.

இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வந்த பொலிஸார் பருத்தித்துறை பகுதியிலுள்ள திருமண மண்டபத்திற்கு முன்னால் இரவுவேளை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது திருட்டுப்போன மோட்டார் சைக்கிள் என அடையாளம் கண்டுள்ளனர். (இ-60)

# இலங்கை வைத்தியர்களுக்கு பயிற்சிகளை வழங்கும் துருக்கி



(கொழும்பு)

மகப்பேறு, சிறுபிள்ளை பராமரிப்பு மற்றும் அவசர சிகிச்சை போன்ற பிரிவுகளில் இலங்கை வைத்திய அதிகாரிகளுக்கு பயிற்சிகளை வழங்குவதற்கு துருக்கி அரசு முன்வந்துள்ளது.

இது தொடர்பான முதற்கட்ட பேச்சுவார்த்தை இலங்கையிலுள்ள துருக்கி நாட்டு தூதரக அதிகாரிகளுக்கும் சுகாதார பிரதி அமைச்சர் பைஸல் காசிமுக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

இப்பேச்சுவார்த்தையின் போது பல விடயங்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது. அதன்படி இலங்கை வைத்திய அதிகாரிகள் மற்றும் வைத்திய ஆலோசகர்களை துருக்கிக்கு அனுப்பி அந்நாட்டில் வைத்து பயிற்சிகளை வழங்குவதற்கும் அதேபோல் துருக்கி வைத்திய அதிகாரிகள் இலங்கைக்கு வந்து பயிற்சிகளை வழங்குவதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுகாதாரத்துறையின் தரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் இலங்கை மக்களுக்கு தரமான சுகாதார வசதிகளை வழங்கும் நோக்கிலும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் இதுபோன்ற மேலும் பல திட்டங்கள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளன என்றும் சுகாதார பிரதி அமைச்சர் பைஸல் காசிம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (இ-7)

## மஹாபொல புலமைப்பரிசில் நிதியை வங்கிகளில் முதலீடு செய்ய அனுமதி

(கொழும்பு)

மஹாபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நிதியத்திலுள்ள அனைத்து நிதியையும் அரச வங்கிகள் மற்றும் பிணையுங்களில் முதலீடு செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

உயர் கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ முன்வைத்த பிரேரணைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மஹாபொல நிதியத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளமையால், இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## கேள்வி கோரல்
## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## வடக்கு மாகாண சபை

### கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

நாய்களுக்கான தடுப்பூசி ஏற்றுவதற்கான திட்டத்திற்காக மாத அடிப்படையிலான எரிபொருள் மற்றும் சாரதியுடனான வாகனம் வாடகைக்கு அமர்த்துவதற்கான கேள்வி கோரல்

9 பேர் பயணம் செய்யக்கூடிய வான், ஒருவர் பயணம் செய்யக்கூடிய நாய்கள் ஏற்றக்கூடிய ரக் வகை வாகனம், முச்சக்கர வண்டி.

கேள்வி இல: BID N0 – NP/AP&H/DD OFFICE/JAFFNA/PSDG/2018/VEHICLE HIRE

1. கீழே பட்டியலிடப்பட்ட உருப்படிகளுக்கான தகுதி வாய்ந்த தனிநபர் அல்லது நிறுவன விலைமனுதாரர்களிடமிருந்து 03 மாத காலப்பகுதிக்கான வாடகைக்கு அமர்த்துவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தலைவர் வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தின் சார்பாக பிரதிப் பணிப்பாளர் "கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்கள பெறுகைக்குழுத்தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| Item No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|
| 1 | Van 9 Seats | 2 | 6,000.00 |
| 2 | Single Cab (Semi Closed ) | 2 | 6,000.00 |
| 3 | Three Wheeler | 2 | 4,000.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

3. ஆர்வமுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பிரதிப் பணிப்பாளர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், இல 25, கருணாலய லேன், பலாலி வீதி, திருநெல்வேலி எனும் முகவரியில் அலுவலக நேரங்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி/ தொலைநகல் 021-222 2387. மின்னஞ்சல்: adaphjaffna@gmail.com.

4. 2018 ஆவணி 31ஆம் திகதியிலிருந்து 2018 புரட்டாதி 14ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 1000/= ரூபாவைச் பணமாகச் செலுத்திய பின்னர் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச்சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கிழேயுள்ள முகவரியிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம்.

5. விலை மனுக்கள் 2018 புரட்டாதி 17 ஆம் திகதி மு.ப 9.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனு இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும். உரிய நேரத்திற்கு பிந்தி கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உடனடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடன் ஒவ்வொரு வாகனத்திற்கும் தனித்தனியான விலைமனுப் பிணைமுறி இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

6. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு பிரதிப் பணிப்பாளர் அலுவலகம், கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம், இல 25, கருணாலய லேன், பலாலி வீதி, திருநெல்வேலி.

டாக்டர். திருமதி.வ.அமிர்தலிங்கம்
தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு
கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம், யாழ்ப்பாணம்.

(இ-3680)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை- உப அலுவலகம் கோப்பாய்
## ஆதன பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை கோப்பாய் உப அலுவலகத்திற்கு உட்பட்ட ஆதன பதிவேட்டின்படி வட்டாரம்-5 வீதி-இராசவீதி ஆதன இல-76/ 7 , 76/8 உரிமையாளர் - செல்லப்பா முத்தையாவும் மறுபேரும்- எனும் ஆதனத்திற்கு கோப்பாய் வடக்கைச் சேர்ந்த செந்தில்நாதன் குகநாதன் உரிமை கோருகின்றார்.

குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிசு கனகரத்தினம் கேசவன் அவர்களால் எழுதப்பட்ட 2013.02.16 ஆம் திகதிய 13767 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் பொன்னையா கைம்பெண் றுக்மணி தனது பிதா, மாதாவாயிருந்து காலம்சென்ற விஸ்வலிங்கமும் பெண் செல்லமுத்துவும் ஆகிய இவர்களால் தனக்கு வந்தடைந்த பிதா, மாதா வழி முதுசமும் தடையற்ற ஆட்சியுமானதென வெளிப்படுத்தி தனது பேரன் செந்தில்நாதன் குகநாதனுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

**ஆதன இடாப்பு**

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய்க் கோவிற்பற்று கோப்பாய் வடக்கிறை:

"கலாவயாமாணம் அல்லது இலந்தையமாணம்" நில.பர. 02 இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.ரி.பாலசுப்பிரமணியம் அவர்களால் அளந்து வரையப்பட்ட 5503/17.12.2012 ஆம் இலக்க படத்தின்படி நில. பர.01 ஒன்று குளி 16.5 பதினாறு தசம் ஐந்து. இதற்கு எல்லைகள்

கிழக்கு : அருமைநாயகம் பெண் இராசேஸ்வரிக்கும் தம்பையா தங்கராசாவுக்கும் உரிய ஆதனங்கள்.

வடக்கு: செல்லையா முத்தையாவின் ஆதனம்.

மேற்கு : பன்னிரண்டு அடி அகல ஒழுங்கை

தெற்கு : சுப்பிரமணியம் முத்துக்குமார சுவாமியின் ஆதனம். இதடங்கலும்

பிரதேச செயலகப் பிரிவு : வலிகிழக்கு, கோப்பாய்

கிராம அலுவலர் பிரிவு : J /261, கோப்பாய் மத்தி

பிரதேச சபை : வலி.கிழக்கு உப அலுவலகம், கோப்பாய்

இவ் ஆதனத்தை செந்தில்நாதன் குகநாதன் என்ற பெயருக்கு ஆதனப்பதிவேட்டில் பதிவது தொடர்பாக ஆட்சேபனைகள் தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் இன்றிலிருந்து மூன்று மாதங்களிற்குள் எழுத்துமூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது செந்தில்நாதன் குகநாதன் என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்வித பிரச்சினைகளுக்கும் வலி.கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத் தருகின்றேன்.

**தியாகராசா நிரோஷ்**
**தவிசாளர்,**
**வலி.கிழக்கு பிரதேச சபை,**
**புத்தூர்.**

(சி-3679)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம் செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:பிரான்ஸ் PR<br>தொ.இ: B/8820 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 43செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:HND, CBF, DBF/ வங்கியாளர்<br>தொ.இ: G/8863 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 42 செவ் 2 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Diploma/ கனடா PR<br>தொ.இ: B/8822 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/8869 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:BBA/ தனியார் தொழில்<br>தொ.இ: B/8823 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 94 சூரி செவ் 1 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/8870 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/8824 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 63 சூரிசெவ் 1 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/8871 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினத்தில்
# மன்னாரில் உறவினர்கள் இணைந்து கவனயீர்ப்பு பேரணி













(மன்னார்)

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோருக்கான தினமான நேற்று மன்னார் மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச விசாரணையை வழியுறுத்தி கவனயீர்ப்புப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து குறித்த பேரணி ஆரம்பமானது.

பேரணியில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் இருந்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை, அருட்தந்தையர்கள், மன்னார் நகர முதல்வர் ஞா.அன்ரனி டேவிட்சன் உட்பட பல ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் இருந்து ஆரம்பமான குறித்த பேரணி மன்னார் பொது வைத்தியசாலை பிரதான வீதியூடாக நகர்ந்து மன்னார் பஸார் பகுதியை சென்றடைந்தது.

அங்கிருந்து மன்னார் மாவட்டச் செயலகத்தை சென்றடைந்தது.

குறித்த பேரணியில் கலந்து கொண்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சர்வதேச விசாரணையை வழியுறுத்தி குறித்த பேரணியில் ஈடுபட்டிருந்தனர்.

பேரணியில் கலந்து கொண்டவர்கள் "வெள்ளை வானில் கடத்தப்பட்டவர்கள் எங்கே? வெள்ளைக் கொடியுடன் வந்தவர்கள் எங்கே? காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகள் எங்கே? இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் எங்கே? புதிய ஜனாதிபதியே இன்னும் ஏன் மௌனம்? காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம் எத்தனை காலத்திற்கு" என பல்வேறு வசனங்கள் எழுதிய பதாகைகளையும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் பதாகைகளையும் ஏந்தியவாறு பேரணியில் கலந்து கொண்டனர்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்ட அருட் தந்தையர்களான பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் மற்றும் நிகால் ஜிம்பிறவுண் அடிகளார் ஆகிய இருவரது படங்களையும் ஏந்தியவாறு பேரணியில் கலந்து கொண்டிருந்தனர்.

பின்னர் ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட மகஜர் வாசிக்கப்பட்டு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்ராஸிடம் கையளிக்கப்பட்டது.

மகஜரை பெற்றுக் கொண்ட அரசாங்க அதிபர் நான் ஒரு அரச அதிகாரி. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் படுகின்ற வேதனையை நான் நன்கு அறிகின்றேன். உங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களும் உண்மை.

ஆனாலும் ஜனாதிபதிக்கு உங்களின் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டு அதன் தகவல் உங்களுக்கு வழங்கப்படும். மேலதிக தகவல்களை ஜனாதிபதி உங்களுக்கு அனுப்பி வைக்க நாங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம் என தெரிவித்தார்.

குறித்த பேரணிக்கு மன்னார் மாவட்டத்தில் பணியாற்றுகின்ற பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையம், மன்னார் பிரஜைகள் குழு, மாதர் அபிவிருத்தி ஒன்றியம், மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் ஆகிய அமைப்புக்கள் மற்றும் மன்னார் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் என பல அமைப்புக்கள் தங்களது பூரண ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



## "சிறுவர் தொழிலாளர்களை இல்லாதொழிப்போம்" கிளிநொச்சி பொலிஸாருக்கு பயிற்சிப்பட்டறை





(கண்டாவளை)

"சிறுவர் தொழிலாளர்களை இல்லாதொழிப்போம்" என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றுகின்ற சுமார் 60 பொலிஸாருக்கான பயிற்சிப்பட்டறையொன்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

"சிறுவர் தொழிலாளர்களை இல்லாதொழிப்போம்" என்ற தொனிப்பொருளில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சிப்பட்டறையொன்று நேற்று முற்பகல் 10 மணிமுதல் கிளிநொச்சி மாவட்ட செயலக பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இதில் வவுனியா மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் டீ.ஆர். தர்மதாஸ வளவாளராக கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கியுள்ளார்.

நிகழ்வில் மாவட்ட உதவிப்பிரதேச செயலர் ரீ.பிருந்தாகரன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட உத்தியோகத்தர் செந்தூரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-315-312)

## பெண்களுக்கு எதிராக வவுனியாவில் போராட்டம்








(பனிக்கன்குளம்)

சமூகத்தைச் சீர்கெடுத்து வரும் பெண்களுக்கு எதிராக வடமாகாண பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவில் நேற்று காலை 9 மணியளவில் எதிர்ப்புப் போராட்ட ஊர்வலமொன்று இடம்பெற்றது.

தாயாகப் போற்றுகின்ற பெண்கள் இன்று கேவலமாக இழிவுபடுத்தப்படுகின்றார்கள். இவ்வாறு இழிவுபடுத்தப்படுகின்ற பெண்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தங்களுடைய ஆபாச படங்களை இணையத்தளங்களில் வெளியிட்டு வரும் பெண்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். மற்றும் பாடசாலை மாணவர்களிடையே நிலவுகின்ற போதைப் பொருள், சிமாட் போன் மற்றும் மாலைநேர வகுப்புக்கள் முற்றாக தடை செய்யப்பட வேண்டும். சமூகப் பாதிப்பிற்கு உள்ளாகாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வவுனியா நகரசபைக்கு முன்பாக ஆரம்பமான போராட்டமானது ஏ-9 வீதியூடாக வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் காரியாலயத்தை சென்றடைந்தது.

அங்கு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "இணையத் தளங்களில் பெண்கள் ஆபாச படங்களை பதிவிறக்கம் செய்வதை தடை செய்ய வேண்டும், மீண்டும் மீண்டும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள் எனில் மக்களாகிய நாம் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். பெண் பிள்ளைகளின் பாதுகாப்பு கருதி மாலைநேர வகுப்புக்களை தடை செய்ய வேண்டும், தமது லீலைகளை வெளியிடுவதால் ஏனைய பெண்களின் நிலை? பாடசாலை மாணவர்களின் போதைப்பொருள் பாவனையை முற்றிலும் தடுப்போம் என்ற பல்வேறு பாதாகைகளை தாங்கிய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர அபயவிக்கிரமவிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கோரிக்கைகளை பரிசீலனை செய்வதாகவும் உரிய தரப்பினருக்கு தகவலை வழங்கி தீர்வினை பெற்றுத் தருவதாகவும் உறுதிமொழி வாங்கினார். (2-281-250)

# 2018- 2019 ஆம் ஆண்டிற்கான காலபோக பயிர்ச்செய்கைக்கு தேவையான விதைகள் விநியோகம்

## வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி விவசாயப்பணிப்பாளர் அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா, மன்னார் மாவட்ட விவசாயிகள் எதிர்வரும் காலபோகம் 2018-2019ஆம் ஆண்டிற்கான விவசாய நடவடிக்கைகளுக்கு தயார்படுத்தலை மேற் கொள்வதற்கான காலம் ஆரம்பமாகியுள்ளதாக வவுனியா, மன்னார் மாவட்டங்களின் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள், நடுகைப் பொருட்கள்) அறிவித்துள்ளார்.

எனவே வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள், நடுகைப் பொருட்கள்) அலுவலகத்தில் தங்களின் விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான நெல் இனங்கள் விற்பனைக்காக கைவசமுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி,

| வயது | வர்க்கம் | இனம் |
|---|---|---|
| 2,1/2 மாதம் | Bg -250 | வெள்ளை நாடு |
| | Bg -251 | வெள்ளை நாடு |
| 03 மாதம் | Bg -300 | வெள்ளை நாடு |
| | Bg -310 | வெள்ளை நாடு |
| | At -307 | வெள்ளை நாடு |
| | At -308 | வெள்ளை சம்பா |
| 3,1/2 மாதம் | Bg -360 | கீரி சம்பா |
| | Bw -367 | வெள்ளை சம்பா |
| | Bg -352 | வெள்ளை நாடு |
| | Bg -358 | வெள்ளை சம்பா |
| | Ld -365 | சிவப்பு சம்பா |
| | Bg -370 | வெள்ளை சம்பா |
| | At -362 | சிவப்பு நாடு |
| | Bg - 406 | சிவப்பு நாடு |
| 4, 1/2 | Bg - 450 | வெள்ளை சம்பா |

அத்துடன் உழுந்து, கௌப்பி, பயறு, நிலக்கடலை, சோளம், குரக்கன் போன்ற பதிவு செய்யப்பட்ட, அத்தாட்சிப்படுத்தப்பட்ட செய்யப்பட்ட விதை வர்க்கங்கள் விதை உற்பத்தியில் ஈடுபடும் பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கும், சாதாரண விவசாய நடவடிக்கைளில் ஈடுபடும் ஏனைய விவசாயிகளுக்கும் வழங்குவதற்கு ஏற்ற வகையில் விற்பனைக்குத் தயாராக உள்ளன.

அத்துடன் மரக்கறி விதைகள், பழமரக் கன்றுகள் போன்றனவும் தற்போது விற்பனை செய்யப்படுகின்றன எனவும் வவுனியா, மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (2)




# பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தி கிளிநொச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம்

(பரந்தன்)

பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தியும் நேற்று முன்தினம் படுகொலை செய்யப்பட்ட யுவதிக்கு நீதி கோரியும் இன்று கிளிநொச்சியில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது. இது தொடர்பில் அவ்வமைப்பு விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,

அண்மைக்காலமாக எமது பிரதேசங்களில் பெண்களுக்கு எதிராக இடம்பெற்று வருகின்ற வன்முறைகளுக்கு எதிராகவும் பெண்களின் பாதுகாப்பை வலியுறுத்தியும் நேற்று முன்தினம் படு கொலைசெய்யப்பட்ட முறிகண்டியைச் சேர்ந்த கறுப்பையா நித்தியகலா விடயத்தில் விரைவாக குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு நீதி நிலைநாட்டப்படவேண்டியும் இன்று வெள்ளிக்கிழமை கிளிநொச்சி டிப்போச் சந்திக்கருகில் முற்பகல் 10 மணிக்கு கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

எனவே இதில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-312)

# பின்தங்கிய பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்தியரை நியமிப்பதில் பாரிய சிக்கல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஐயன்கன்குளம் வைத்தியசாலை மிகவும் பின்தங்கிய பிரதேச வைத்தியசாலையாக காணப்படுவதனால் நிரந்தரமான வைத்தியரை நியமிப்பதில் பாரிய பிரச்சினை காணப்படுவதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட ஐயன்கன்குளம் பகுதியில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கான வைத்தியர் ஒருவரை நியமிக்குமாறு பிரதேச மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வருகின்ற போதும், இதற்கான வைத்தியர் எவரும் இதுவரை நியமிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

இதனால் இங்குள்ள மக்கள் தமக்கான மருத்துவத் தேவையை பெறுவதில் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் கடந்த 13 ஆம் திகதி துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் போதும் பொது மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பிரதேச பொது அமைப்புக்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயம் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினால் குறித்த வைத்தியசாலை மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலையாக காணப்படுகின்றது. இதற்கான வைத்திய வெற்றிடத்தை வெளிப்படுத்தி வருகின்ற போதும், இதுவரை வைத்தியர்கள் எவரும் முன்வரவில்லை. நோயாளர் காவு வண்டி தொடர்பில் குறித்த பிரதேசத்தில் இருந்து மல்லாவி வைத்தியசாலை வரைக்குமான வீதிமிக மோசமாக சேதமடைந்திருப்பதனால் நோயாளர் காவுவண்டியும் பழுதடையும் நிலை காணப்படுகின்றது.

இருந்தபோதும், தற்போதுள்ள நோயாளர்காவுவண்டி நல்ல நிலையில் உள்ளது என்றும் மேற்படி திணைக்களத்தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# வாடிகள் தீக்கிரையாகியதால் பாதிக்கப்பட்ட 9மீனவக்குடும்பங்களுக்கு வலைகள் வழங்கல்



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் நாயாற்றுப்பகுதியில் வாடிகள் தீக்கிரையாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட ஒன்பது மீனவக்குடும்பங்களுக்கும் மீன்பிடி வலைகளை மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் நேற்று வழங்கி வைத்துள்ளார். முல்லைத்தீவு நாயாற்றுப் பகுதியில் கடந்த 13 ஆம் திகதி இரவு ஒன்பது தமிழ் மீனவக் குடும்பங்களுக்குச் சொந்தமான சுமார் ஐம்பது இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய மீன்பிடி உபகரணங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

இவ்வாறு நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான மீன்பிடி வலைகளை வழங்குகின்ற நிகழ்வு நேற்று நாயாற்றுப் பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதுடன், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஆறு வலைகளை வழங்கி வைத்துள்ளார்.

வலைகளை வழங்கி வைத்தபின் உரையாற்றிய அமைச்சர் சுவாமிநாதன், இந்த அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஒன்பது மீனவக் குடும்பங்களுக்கு தலா ஆறு வலைகள் வீதம் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் எனது அமைச்சின் ஊடாக மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மீன்பிடி உபகரணங்கள், வலைகள் போன்றவை வருடந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

இலங்கையின் கடற்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு வட கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்தது. பெரும்பாலான மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தில் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இவற்றை அறிந்து எமது அமைச்சின் மூலமாக மீனவர்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு உதவும். வரட்சியினால் விவசாயச் செய்கை, கால்நடை வளர்ப்பு என்பன பாதிக்கப்பட்டிருக்கின்றன.

வருண பகவானுக்கு ஒரு யாக பூசைசெய்யவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் மற்றும் கடற்றொழில்சங்கப் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (2-315)

# சமய நல்லிணக்க செயற்பாடுகளுக்கு மன்னாரில் ஐந்து கிராமங்கள் தெரிவு

(மன்னார்)

"சமய நல்லிணக்க செயற்பாடுகளை மக்களுக்கு கொண்டு செல்வதில் ஊடகங்களின் பங்களிப்பு" எனும்கருப்பொருளில் சர்வமத சகவாழ்வு கலந்துரையாடல் நேற்று முன் தினம் புதன்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் வாழ்வோதயத்தில் இடம் பெற்றது.

மன்னார் வாழ்வோதயத் திட்ட இணைப்பாளர் நீ.றொன்சன் தலைமையில் இடம் பெற்ற குறித்த கலந்துரையாடலில் வாழ்வோதய இயக்குநர்அருட்தந்தை செ.அன்ரன் அடிகளார்,திட்ட கண்காணிப்பு இணைப்பாளர் எஸ். றேசுதாசன் உட்பட மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது மன்னார் வாழ்வோதயத்தினால் கிராமங்களில் முன்னெடுக்கப் படவுள்ள சமய நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பிலும், மக்களுக்கு கொண்டு செல்வதில் ஊடகங்களின் பங்களிப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இலங்கையில் 12 மறை மாவட்டங்களில் 13 நிலையங்களில் குறித்த நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மூன்று வருட திட்டத்தின் போது மன்னார் மாவட்டத்தில் வட்டக்கண்டல், ஆண்டாங்குளம், அளவக்கை, அடம்பன், செம்மண் தீவு ஆகிய 5 கிராமங்கள் குறித்த நிகழ்ச்சி திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. குறித்த கிராமங்களில் பல்வேறு நிகழ்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இது தொடர்பிலும், அவற்றை மக்களுக்கு கொண்டு செல்வதில் ஊடகங்களின் பங்களிப்பு குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2)

# அபிவிருத்தி நிதிகளைப் பெற்று வவுனிக்குளத்தைப் புனரமைக்குக!

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு வவுனிக்குளத்தின் மேலதிக அபிவிருத்திகளுக்குரிய நிதிகளை துறைசார் அமைச்சுக்களிடமிருந்து பெற்று குளத்தின் கீழான கட்டுமானங்களை புனரமைத்து தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளன.

பாரிய நீர்ப்பாசன குளங்களில் ஒன்றான வவுனிக்குளம் கடந்த 2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் புனரமைக்கப்பட்டதுடன் 24 அடி நீர் கொள்ளளவைக் கொண்டதாக காணப்பட்டது. அதன் பின்னர் கொள்ளளவு மேலும் இரண்டு அடியால் உயர்த்தப்பட்டு குளம் முழுமையாக புனரமைக்கப்பட்டுள்ளது.

புனரமைக்கப்பட்ட போதும் குளத்திற்குட்பட்ட நீர்விநியோக வாய்க்கால்கள்,விவசாய வீதிகள், கழிவு வாய்க்கால்கள் என்பன புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

இதனால் பயிர்ச்செய்கை காலங்களில் விவசாயிகள் விளைபொருட்களையும் விவசாய உள்ளீடுகளை கொண்டு செல்வதிலும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

குறித்த குளத்தின் கீழ் உள்ள நீர்ப் பாசன வீதிகள் நீர்விநியோக வாய்க்கால்கள் என்பவற்றை புனரமைப்பதற்கான நிதி களை உரிய திணைக்களங்கள் அமைச்சுக்களிடமிருந்து பெற்று மேற்படி புனரமைப்பு பணிகளை முன்னெடுத்து தருமாறு விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மேற்படி குளத்தின் கீழ் 6 ஆயிரத்து 60 ஏக்கர் நெற்செய்கை காணிகளும் ஆயிரத்து 200 ஏக்கர் வரையான ஏற்று நீர்ப்பாசனத்திட்ட காணிகளும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-315)

# வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்

(கிளிநொச்சி)

நடப்பாண்டிற்கான தேர்தல் இடாப்பில் திருத்தம் செய்யப்பட்ட மற்றும் மீளாய்வு செய்து பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் பெயர்ப்பட்டியல்கள் அந்தந்தக் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இத்தேர்தல் இடாப்புகளில் தமது பெயர் இல்லாதவர்கள், புதிய பதிவுகளை தேர்தல்கள் இடாப்பில் பதிவு செய்யத்தவறியவர்கள் ஆகியோர் எதிர்வரும் 06.09. 2018 வியாழக்கிழமைக்கு முன்னதாக கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்திற்கு கடிதம் மூலமாகவோ தேர்தல்கள் அலுவலகத்திற்கு நேரடியாகவோ வருகை தந்து தமது பதிவுகளை தேர்தல்கள் இடாப்பில் சேர்த்துக் கொள்ளலாமென கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.சி.அமல்ராஜ் அறிவித்துள்ளார். (2-254)

# ஜனவரியில் தேர்தல் சாத்தியமற்ற விடயம்



## கூட்டு எதிரணி எம்.பி.செஹான் தெரிவிப்பு

(கொழும்பு)

**மாகாண சபை தேர்தலை பிற்போடும் நோக்கத்தில் பொது எதிரணியினர் எல்லை நிர்ணய அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்று அரசாங்கம் குறிப்பிடுவது அரசாங்கத்தின் குறைபாடுகளை மூடி மறைப்பதாகும். எல்லை நிர்ணய அறிக்கையினை நாம் ஆரம்பத்தில் இருந்தே எதிர்த்துள்ளோம்.இதுவொன்றும் புதிதல்ல என தெரிவித்த கூட்டு எதிரணியின் பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க, அரசாங்கத்தின் பிரதான நோக்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் நேரடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே. ஆகவே ஜனவரியில் மாகாண சபைத் தேர்தல் இடம்பெறும் என்று குறிப்பிடுவது சாத்தியமற்ற விடயம் எனத் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில்எல்லை நிர்ணய அறிக்கை நிராகரிக்கப்பட்டமை தொடர்பில் பொது எதிரணியின் நிலைப்பாடு தொடர்பில் கொழும்பில் நேற்று கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மாகாண சபைத் தேர்தலை புதிய முறையில் நடத்துவதற்கு பொது எதிரணியினர் இதுவரையில் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. எம்முறையில் தேர்தலை நடத்தினாலும் தேர்தலுக்கு முகம் கொடுக்க நாம் தயாராகவே உள்ளோம்.

ஆனால் அரசாங்கம் தாம் எவ்விதத்தில் தேர்தலை நடத்தினால் தமக்கு சாதகமான தீர்வு கிடைக்கும் என்று தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றது. புதிய தேர்தல் முறைமையும் அரசாங்கத்திற்கு சாதகமாக அமையும் என்ற நோக்கத்தில் கொண்டு வரப்பட்டது.

புதிய தேர்தல் முறைமை மாறுபட்ட தேர்தல் முறைமையாக காணப்பட்டாலும் அது பல நவீன விடயங்களை உள்ளடக்கியுள்ளமை வரவேற்கத்தக்கது. புதிய தேர்தல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாகவே பொது எதிரணியினர் இம்முறைமைக்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள்.

ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன அரசாங்கத்தின் குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நோக்கத்திற்கு ஆதரவாக செயற்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் புதிய தேர்தல் முறைமையினை நிறைவேற்றியது.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பெறுபேறுகளின் பின்னர் அரசாங்கம் புதிய தேர்தல் முறைமைக்கு செல்ல முயற்சிகளை மேற்கொண்டது.

இதற்காக எல்லை நிர்ணய ஆணைக்குழுவை நியமித்தது. ஒரு பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத்தரும் முகமாக உருவாக்கிய ஒரு ஆணைக்குழு பிறிதொரு குழு தோன்ற அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

புதிய தேர்தல் முறைமையில் காணப்படுகின்ற பாரிய குறைபாடுகளுக்கு அரசாங்கத்தின் முக்கிய தரப்பினரும் ஆதரவு வழங்கினார்கள். ஆனால் அவர்களே இன்று புதிய தேர்தல் முறைமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தார்மீக உரிமை கிடையாது.

பழைய முறையில் தேர்தலை நடத்துவதாக இருந்தால் மூன்று மாத காலத்திற்குள் தேர்தலை எவ்விதப் பிரச்சினைகளும் இன்றி திருத்தங்களை மேற்கொண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

ஆனால்இதற்கு ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 23 உறுப்பினர்களும், மக்கள் விடுதலை முன்னணியின் 6 உறுப்பினர்களும் எதிர்ப்பினை தெரிவிக்கின்றனர். இந்த 29 பேரின் நலன்களுக்காக மாத்திரமே அரசாங்கம் தேர்தலை முறையற்ற விதத்தில் காலம்தாழ்த்தி வருகின்றது.

எல்லை நிர்ணய அறிக்கையினை மீளாய்வு செய்ய பிரதமர் தலைமையிலான ஐவர் கொண்ட குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர். பிரதமர் தலைமையிலான குழு என்ற காரணத்தினால் குறித்த பரிந்துரைகள் ஸ்ரீகொத்தாவிற்கே சாதகமாக காணப்படும்.

ஆகவே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை போராட்டங்களின் மத்தியில் பெற்றுக் கொண்டதை போன்றே மாகாண சபைத் தேர்தலையும் போராட்டங்களின் மத்தியிலே பெற்றுக் கொள்ள வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# விசேட தேவையுடைய மாணவனை பொறுப்பேற்றார் கிழக்கு ஆளுநர்



(திருமலை)

திருகோணமலையின், சேருநுவர பகுதியைச் சேர்ந்த விசேட தேவையுடைய மாணவனை கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம பொறுப்பேற்றுள்ளார். இந்த விடயம்தொடர்பில்மேலும் தெரிய வருவதாவது.

கிழக்கு மாகாணசபையில் நேற்று முன்தினம் மாலை மக்கள் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது சோமபுர, புபுதுபுர பகுதியில் வசித்து வரும் ஒரு பிள்ளையின் தாயொருவர் தனக்கு ஏதாவது தொழில் வழங்குமாறு கோரியுள்ளார்.

எனது 12 வயது மகன் மதீஸ தேஷான், சோமபுர ஆதர்ஷ வித்தியாலயத்தில் 7ஆம் தரத்தில் கல்வி கற்று வருகிறார்.

அவரின் இரண்டு கைகளும் இயங்காத நிலையில், வாயில் பேனாவை பிடித்து எழுதி கற்றல் நடவடிக்கையினை மேற்கொண்டு வருகிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்.



மாணவனின் தாயின் கல்வித் தகைமையை கருத்தில் கொண்டு தொழில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதனையடுத்து கிழக்கு மாகாணத்தில் விசேட தேவையுடைய மாணவர்கள் பற்றியும் அவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தல் விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனவும் சமூக சேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த தாயின் மகனான மதீஸ தேஷானுடைய கல்விச் செலவுகள் உட்பட அவருக்கான அனைத்துச் செலவுகளையும் தான் பொறுப்பேற்பதாக கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம உறுதியளித்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் காலங்களில் தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும் போது சேவைகள் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை கிழக்கு மாகாண ஆளுநர் குறித்த மாணவனை பொறுப்பேற்றுள்ளமையானது அனைவரையும் நெகிழச் செய்துள்ளதுடன். இது அந்த மாணவனுக்கு கிடைத்த அதிர்ஷ்டம் எனவும் சமூக வலைத்தளங்களில் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (இ-7)

சந்தேகத்தின் பேரில்

# இந்தியர்கள் இருவர் இலங்கையில் கைது


(கொழும்பு)

இலங்கையில் நடைபெறும் உள்ளூர் 20க்கு 20 கிரிக்கெட் போட்டிகளின் போது சந்தேகத்துக்கு இடமான முறையில் செயற்பட்ட இரண்டு இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர்.

கண்டி பல்லேகல மைதானத்தில் காலி மற்றும் தம்புள்ளை அணிகளுக்கு இடையிலான போட்டியின்போது இவர்கள் ஸ்ரீலங்கா கிரிக்கெட் ஊழல் எதிர்ப்பு பிரிவினால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் அவர்கள் பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் தொலைபேசிகளில் கிரிக்கெட் அப்ஸ் தரவிறக்கம் செய்யப்பட்டிருந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7)

# சிறை வைத்தியசாலைக்கு ஞானசார தேரர் மாற்றம்



(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில், 6 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள, பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரை, சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அழைத்து செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், அங்கு அவருக்கான சிகிச்சை நிறைவடைந்துள்ளதையடுத்து, சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றுதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிய வருகிறது.

நீதிமன்ற தீர்ப்பின் போதும், ஞானசாரர் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தார். சிறுநீரகத்தில் இருந்த கல்லை அகற்றும் பொருட்டு அவருக்கு ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# புதைக்கப்பட்டிருந்த நிலையில் மட்டக்களப்பில் ஆயுதங்கள் மீட்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில்லிக்கொடியாறு பகுதியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகை ஆயுதங்கள் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சில்லிக்கொடியாறு பாலத்திற்கு அருகில் இருந்து குறித்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

ரி-56 ரக துப்பாக்கிகள் மூன்றும் அதற்குரிய மகசின்கள் ஐந்தும் ஒரு குழியில் பொலித்தீன் பைகளினால் சுற்றப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதாக தெரிவிக்கும் கொக்கட்டிச்சோலை பொலிஸார், இது தொடர்பில் அப்பகுதியில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (இ-7)

# கந்தபுராண எழுச்சி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், "கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" என்ற தொனிப்பொருளில், நல்லூர், கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2018 நிகழ்வுகளை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்திலும் சிறப்புற முன்னெடுத்து வருகிறது.

அந்தவகையில், பதினாறாம் நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில், பிற்பகல் 3 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை தம்பாட்டி ஸ்ரீ முத்துமாரி அம்மன் குழுவினரின் பஜனை நிகழ்வும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருமுன்னிலையில். இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில், கலாபூஷணம் பிரம்மஸ்ரீ ப.சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்க, சண்டிலிப்பாய் மற்றும் கோப்பாய் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் யாழ்.பல்கலைக்கழக மூன்றாம் வருடக் கலைத்துறை மாணவியும், ஆன்மீகப் பிரசாரகர் கற்கை மாணவியுமான தி.கிஷாந்தினியின் "எந்தை அருள் உண்டேல் எமக்கு என் குறை" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும், இசைக்கலைமாமணி திருமதி. கவிதா வாமதேவன் மாணவர்களின் வீணை இசை சிறப்பு நிகழ்வாகவும் இடம்பெறும்.

உற்சவ காலச் சிறப்புச் சொற்பொழிவின்போது பத்து வினாக்கள் அடங்கிய வினாக்கொத்து அன்றைய நிகழ்வுச் சொற்பொழிவினை உள்ளடக்கியதாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டு, அன்றைய தினமே விடைத்தாள்கள் மாணவர்களிடமிருந்து பெறப்படும். முதல் இருபது நாட்களிலும் விடையளித்த மாணவர்களில் முன்னிலை பெறும் ஐந்து மாணவர்களுக்கு ஐந்து துவிச்சக்கர வண்டிகளும் ஏனைய மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களும் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# நல்லூர் ஆலயச் சூழலில்

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் "தெய்வீக இசையரங்கு" நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.45 மணியிலிருந்து இரவு 8.15 மணிவரை நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று இசைக்கச்சேரி பாட்டு- நந்தினி உதயகுமாரன், வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம்- சதா.வேல்மறன், கெஞ்சிரா-ஸ்ரீ டிலுக்சன், முகர்சிங்- நி.மோகன் ஆகியோர் வழங்குவர். (இ)

# 'காவிரி தந்த கணபதி' தெய்வீக இசைப்பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நல்லை ஆதீன குருமகா சந்நிதானத்தின் அருளாசியுடன் நல்லூர் சைவ மகா சபை நடத்தி வரும் "கந்தவேற்புராணம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு, மாவை ஆஸ்தான வித்துவான், கானகதாவாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்தசர்மா "காவிரி தந்த கணபதி" பற்றி சிறந்த பக்கவாத்திய சகிதம் தெய்வீக தொடர் இசைப் பேருரை நிகழ்த்துவார். (இ)

# 'குருவாய் வருவாய்' அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் " குருவாய் வருவாய்" என்ற தலைப்பில் இன்று இரவு 7.30மணி முதல் 8 மணிவரை இல. 700, பருத்தித் துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் அருளுரை நடைபெறும். நல்லூர்க் கந்த சுவாமி கோவில் உற்சவ காலத்தில் தினந்தோறும் சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




## நீயே கதி

துதி செய்யடியார் கதி நீயே
திருமால் மருகனே நல்லூர்க் கந்தா
பாதி மதி நதி சூடிய விமலன் புதல்வா
ஆதியும் அந்தமும் அற்றவனே
அருவுருவாகிய அருட் பெருஞ் சோதியே
சரவணப் பொய்கை அரவணைத்த அற்புதனே
மரணத்தை வெல்லும் விதி செய்ய வாராய்- கதி நீயே

கலாநிதி சண்முகயோகினி ரவீந்திரன்.

## ஏற்றமதை ஈந்திடையா!



சிந்தை தெளிந் தென்றும்
சீத்துவத்தைப் பெய் றுயர
எந்தையா யிருந் தெமக்கு
ஏற்ற மதை யீந்திடையா!
கன்னித் தமிழ்க் குரலா!
காலமெலாம் காத் தெம்மை
உன்னியுயிர் காத்திடும் நல்
உத்தமத்தைத் தந் திடையா!
வித்தகனே வே லவனே!
வினை தீர்க்கும் சத்தியனே!
இத்தரைக்கு நாமு தவும்
சக்தி தனைத் தந்திடையா!
நாலும் கற் றுயர்ந்து
நல்லபடி நாம் வாழ
வேலால் எமைக் காத்து
வேட்கை தமை யீந்திடையா!
சொற் றுணை வேதியனே!
சோர்விலா மாண் பினனே!
நற்தொண்டை நா மாற்ற
நாளு மெமக் கருள்வாய்!



ஊத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்.

## நல்லைக் குமரப் "பா"

வலியோர் எளியோர் தமைவாட்டும்
வஞ்சச் செயல்கள் காண்கிலையோ
நலிவோர் நலிந்தே தூங்குவதோ
நாசச் செயல்கள் ஓங்குவதோ
பலியாய் வீழ்வது முறையாமோ
பார்த்தே நிற்பது இறையாமோ
கலியுகத் தெய்வம் நீயலையோ
காப்பாய் நல்லைக் குமரப்பா!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்




இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லை ஆதீனத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழாவின் 14 ஆம் நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை நல்லை ஆதீன கலாமண்டபத்தில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஓய்வுநிலை உபபீடாதிபதி கலாநிதி நிர்மலாதேவி நல்லையா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். செந்தமிழ்ச்சொல்லருவி ச.லலீசன் "எத்துக்கு மூத்தீர்" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அறநெறிப் பாடசாலைகளின் கலை நிகழ்வுகள் மற்றும் லண்டனில் இருந்து வருகை தந்த புண்ணியா செல்வமுருகானந்தனின் இசைக்கச்சேரி என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் பங்கு கொண்டு போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

# குடிநீர்ப் போத்தல் தொழிற்சாலையை தடைசெய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

(புல்லுமலை)

மட்டக்களப்பு பெரிய புல்லுமலையில் அமைக்கப்பட்டு வரும் போத்தல் குடிநீர்த் தொழிற்சாலையை தடை செய்யுமாறு வலியுறுத்தி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி மாவட்டம் தழுவிய ஹர்த்தால் போராட்டத்துக்கு தமிழ் உணர்வாளர்கள் அமைப்பு அழைப்புவிடுத்துள்ளது.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அந்த அமைப்பின் தலைவர் கணபதிப்பிள்ளை மேகான்,

புல்லுமலை தண்ணீர் தொழிற்ச்சாலைக்கு எதிரான போராட்டமானது ஒரு இனத்திற்கோ அல்லது மதத்திற்கோ எதிரானது அல்ல. புல்லுமலை கிராமமானது குடி தண்ணீர் இல்லாத மிகவும் வரட்சியான வானத்தை நம்பி வாழும் கிராமமாகும். இந்த நிலையில் நாளொன்றிற்கு 20 ஆயிரம் லீற்றருக்கு மேலான நீர் உறிஞ்சப்படுமானால் சிறு குளங்களும் வற்றி வரண்ட நிலமாக மாறி விடும் நிலை ஏற்படும்.

இந்த நடவடிக்கையை நிறுத்துமாறு ஜனாதிபதிக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பலமுறை எடுத்துக் கூறியும் அவர்கள் இதனைக் கவனத்திற் கொள்ளவில்லை.

ஆகவே, இவ்வாறான செயற்பாடுகளைக் கண்டித்தே எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி மாவட்டம் தழுவிய ரீதியில் ஹர்த்தால் போராட்டம் ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம்.

அத்துடன், அரசாங்க உத்தியோகத்தர்கள், வியாபாரிகள் அன்றைய தினம் போராட்டத்தில் கலந்து கொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறும், பொதுமக்கள் போக்குவரத்து நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் தெரிவித்தார். (இ-7)



# பாரதம்

# விசாரணைக்குழு அமைக்க பசுமை தீர்ப்பாயத்திற்கு அதிகாரம் இல்லை

## ஸ்டெர்லைட் வழக்கில் தமிழக அரசு மேன்முறையீடு

(டில்லி)

ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்வதற்கு நீதிபதி தலைமையில் விசாரணைக் குழு அமைக்க பசுமை தீர்ப்பாயம் உத்தரவிட்டதை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளது.

ஸ்டெர்லைட் ஆலையை மீண்டும் திறக்கக்கோரி வேதாந்தா நிறுவனம் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் முறையீடு செய்துள்ளது. இவ்வழக்கை விசாரித்த பசுமை தீர்ப்பாயம், ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்வதற்கு, ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஒருகுழுவை அமைத்து ஆய்வு செய்ய வேண்டும் என உத்தரவிட்டது.

இதைத்தொடர்ந்து ஸ்டெர்லைட் ஆலையை ஆய்வு செய்ய ஓய்வுபெற்ற நீதிபதி எஸ்.ஜே.வசீப்தர் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஸ்டெர்லைட் ஆலை விவகாரத்தில் ஓய்வுபெற்ற நீதிபதி விசாரிக்க உத்தரவிட்டதை எதிர்த்து தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் நேற்று மேன்முறையீடு செய்துள்ளது. தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில், இதுபோன்ற விசாரணை ஆணையம் அமைக்க தேசிய பசுமைத் தீர்ப்பாயத்திற்கு அதிகாரமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (7)

# ஸ்டெர்லைட் போராட்ட வழக்கில் திருமுருகன் காந்திக்கு பிணை


(தூத்துக்குடி)

தடையை மீறி ஸ்டெர்லைட்டுக்கு எதிராக பேசிய வழக்கில் மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்திக்கு தூத்துக்குடி நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியது.

மே 17 இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளராக இருப்பவர் திருமுருகன் காந்தி. இவர் மீது சென்னையில் தேசத் துரோக வழக்கு உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. இதில் திருமுருகன் காந்தி கைது செய்யப்பட்டார். குண்டர் சட்டத்திலும் அவர் கைது செய்யப்பட்டு சென்னை புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் ஸ்டெர்லைட் போராட்ட வழக்கில் தூத்துக்குடி நீதிமன்றில் ஆஜர் படுத்த நேற்று முன்தினம் திருமுருகன் காந்தி சென்னை புழல் சிறையில் இருந்து பாளை மத்திய சிறைக்கு அழைத்து வரப்பட்டார். நள்ளிரவு ஒரு மணியளவில் திருமுருகன் காந்தி வந்த வான் பாளை சிறையை வந்தடைந்தது.

பின்பு பாளை சிறையில் அடைக்கப்பட்ட திருமுருகன் காந்தி நேற்றுக் காலை பலத்த பாதுகாப்புடன் தூத்துக்குடிக்கு அழைத்து செல்லப்பட்டார்.



தூத்துக்குடியில் கடந்த மார்ச் மாதம் தடையை மீறி ஸ்டெர்லைட்டுக்கு எதிராக பேசியபோது அவர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கு தூத்துக்குடி 3 ஆவது ஜுடிசியல் நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு வந்தது. இந்த வழக்கில் திருமுருகன் காந்தி நீதிபதி தமிழ் செல்வி முன்னிலையில் நீதிமன் றில் ஆஜர்படுத்தப்பட்டார். (7)

# மத்திய அரசு கூறும் அனைத்துக்கும் தமிழக அரசு தலையாட்டுவதில்லை

## முதல்வர் பழனிச்சாமி கூறுகிறார்

(கடலூர்)

மத்திய அரசு சொல்லும் அனைத்துக்கும் தமது அரசாங்கம் தலையாட்டுவது இல்லை என, முதமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.



சிதம்பரம், கடலூர் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் புதன்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே தமிழக முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவிக்கையில்,

"மத்திய அரசு கூறுவதற்கு எல்லாம் தமிழக அரசு தலையாட்டவில்லை. எமது மாநில மக்களுக்கு தேவையான திட்டங்களையே பெற்று கொடுக்கிறோம். எதிர்க்கட்சிகள் எதை வேண்டும் என்றாலும் பேசலாம். ஆனால் முன்னைய ஆட்சியில் தமிழக மக்களுக்கு தேவையான எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

அந்த வகையில் தற்போதைய மத்திய அரசு, தமிழக மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அதை பொறுத்துக்கொள்ள முடியாமலேயே மத்திய எதிர்க் கட்சிகள் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துவருகின்றன" எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், தமிழகத்தில் பொதுப்பணித்துறை சார்ந்த ஏரிகள், உள்ளாட்சித்துறை சார்ந்த ஏரிகள் ஆக மொத்தம் 40 ஆயிரம் ஏரிகள் இருக்கின்றன.

இதில் பெரிய ஏரி, சிறிய ஏரி என எல்லாம் இருக்கின்றன. பருவ காலங்களில் பெய்கின்ற மழைநீர் முழுமையாக சேமித்து வைக்க வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில், குடிமராமத்து என்ற திட்டத்தை உருவாக்கி, முதல் கட்டமாக பரீட்சார்த்த முறையிலே 1,519 ஏரிகளை தேர்ந்து எடுத்து, 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அந்த பணியை ஆரம்பித்தோம். அது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தவேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, அம்மாவினுடைய அரசு, இந்த ஆண்டு 328 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,511 ஏரிகள் தேர்வு செய்யப்பட்டு, அந்த பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த குடிமராமத்து திட்டத்தை பார்வையிடுவதற்காகவும், ஆய்வு செய்வதற்காகவும், இந்திய ஆட்சிப்பணியாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இது முழுக்க, முழுக்க விவசாய பிரதிநிதிகளைக்கொண்ட அமைப்பின் மூலமாக இந்த திட்டம் எடுத்து செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்றார். (7)

ரோஹிஞ்யா அகதி

# மியன்மார் ...
# பதவி விலக...

## ஐ.நா.மனித உரிமை...

(ஜெனிவா)

மியன்மாரில் சிறுபான்மை ரோஹிஞ்யா முஸ்லிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு தொடர்பாக அந்த நாட்டின் அரச தலைவர் ஆங் சான் சூகீ பதவி விலக வேண்டும் என்று ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார்.

ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசைன் செய்தியாளர்களுடன் பேசிய போது, நோபல் பரிசு பெற்ற ஒரு அரச தலைவரின் முன்னெடுப்புகளுக்கு மன்னிப்பு வழங்குவதென்பது மிகவும் வருந்தத்தக்கது என்று தெரிவித்தார்.

இனப்படுகொலை குற்றச்சாட்டுகள் ...
பந்தமாக மியன்மாரின் இராணுவத் தல...
மைகள் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்...
வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் ச...
வெளியிட்ட அறிக்கையை தொடர்ந்...
ஆணையாளர் இந்தக் கருத்துக்களை மு...
வைத்துள்ளார்.

எனினும், இதனை மறுத்துள்ள மிய...
மார் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பா...
எந்தவித சகிப்புத் தன்மைகளும் இல்...
என்று தெரிவித்துள்ளது. இராணுவம் த...
தவறுதலான செயற்பாடுகள் தொடர்பா...
முன்னர் தன்னிலை விளக்கத்தை வழங்...
யுள்ளது.


எவ்வாறாயினும், கடந்த திங்கட்கிழமை ...
கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்ட அ...
கையில், ஜனநாயக சார்பு இயக்கத்தின் நீ...
காலத் தலைவரான ஆங் சான் சூகீ, வன்மு...

திடீர் பொருளாத...

# அணுவாயுத பரவல் தை...
# ஈரான் விரைவில் வெ...

(டெஹ்ரான்)

நாட்டுக்கு நன்மை தராத அணு ஆயுத பரவல் ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுவது தொடர்பாக ஈரான் அரசு முடிவு செய்ய வேண்டும் என அந்நாட்டின் ஆளும் கட்சி தலைவர் வலியுறுத்தியுள்ளார்.



மேற்காசிய நாடுகளில் ஒன்றான ஈரான், அணு ஆயுதங்களை தயாரித்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் மீது தாக்குதல் நடத்தப் போவதாக சில ஆண்டுகளுக்கு முன், ஐ.நா. சபையில் புகார் கூறிய அமெரிக்கா, அந்நாட்டின் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தது.

ஆனால், ஈரான், தங்களிடம் அணு ஆயுதங்கள் தயாரிப்பதற்கான தொழில்நுட்பம் இருந்தபோதிலும், அணு ஆயுதங்கள் எதையும் தயாரிக்கவில்லை என்றது.

இருப்பினும், உலக நாடு
கள், அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்...
ரஷ்யா, ஜேர்மனி ஆகிய நாடுகள் விதி...
பொருளாதாரத் தடையால் கடுமையா...
பாதிக்கப்பட்டதால், அணு ஆயுதப் பரவ...
தவிர்ப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ள...
தயாராக இருப்பதாக ஈரான் அறிவித்த...
ஈரானில் யுரேனியத்தை செறியூட்டி, அ...
குண்டாக மாற்ற பயன்படும் 'சென்ட் ரிபியூ...
எண்ணிக்கை மூன்றில் இரு பங்குக்கு...
குறைவாக குறைக்கப்படும், அடுத்த 15 ஆண்...
களுக்கு 3.67 சதவீதத்துக்கு அதிகமா...
யுரேனியத்தை செறிவூட்டக் கூடாது எ...
முடிவு செய்யப்பட்டது.

# வெனிசுவெலா புகலிடக்கோரிக்கையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடல்

(வெனிசுவெலா)

தென்மேற்கு அமெரிக்க நாடுகள் மற்றும் சிலி, ஆர்ஜென்டீனா ஆகிய தென்னமெரிக்க நாடுகள் இணைந்த அமைப்பான அன்டியன் நாடுகள் (Andean nations) ஒன்றுகூடி, வெனிசுவெலா புகலிடக் கோரிக்கையாளர்களின் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளனர். வெனிசுவெலாவிலிருந்து புகலிடம் கோரி தென் மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளுக்குப் இடம்பெயரும் மக்களுக்கான புகலிடம் மற்றும் ஏனைய சேவைகளை வழங்குதல் பற்றிக் கலந்து ரையாடும் முகமாக நேற்று முன்தினம் புதன்கிழமை அன்டியன் நாடுகளின் தலை வர்கள் மற்றும் பிரமுகர்கள் பெருநாட்டின் தலைநகர் லிமாவில் ஒன்று கூடியுள்ளனர்.

வெனிசுவெலாவில் ...
ஆண்டுகளாகத் தொடர்...
வரும் பொருளாதார நெரு...
கடி மற்றும் அரசியல் கு...
பங்களினால் அந் நா...
மக்கள் புகலிடம் கோரி, கட...
சிலவருடங்களாக பெரு, கொ...
ம்பியா, ஈக்குவடோர் முதல்...
நாடுகளுக்கு இடம் பெயர்...
வருகின்றனர்.

அந்த வகையில், கொல...
பியாவில் ஒரு மில்லிய...
க்கும் அதிகமான வெனி...
வெலா புகலிடக் கோரிக்...
யாளர்கள் வருகை தந்துள்...

# வெளிநாடு

அகதிகள் விவகாரம்

# ் ஜனாதிபதி
# கவேண்டும்

## டரிமை ஆணையாளர் வலியுறுத்து

ட்டுகள் சம்
வத் தலை
ட்படுத்தப்பட
டுகள் சபை
தாடர்ந்தே
களை முன்

ள்ள மியன்
தொடர்பாக
ம் இல்லை
வம் தனது
தொடர்பாக
தெ வழங்கி

கிழமை ஐக்
ப்பட்ட அறிக்
தின் நீண்ட
வன்முறை



களை தடுப்பதற்கு எந்தவித மான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்று சுட்டிக் காட்டியிருந்தது. (7)

# இயற்கையின் கோரத்தாண்டவம் வெள்ளக்காடானது மியன்மார்

(ரங்கூன்)

மியன்மாரில் அரசியல் நெருக்கடி நிலைமைகள் ஓய்ந்து தற்போது ரோஹிஞ்யா அகதிகளுக்கு எதிராக இடம்பெற்றதாக கூறப்படும் இனவழிப்பு வன்முறைகள் காரணமாக அங்கு தீவிர நிலைமை தோன்றியுள்ளது. இதனை சர்வதேச நாடுகள் மிக உன்னிப்பாக அவதானித்து வருகின்றன. அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையும் தமது பங்கிற்கு மியன்மார் மீது அழுத்தங்களை பிரயோகிக்க ஆரம்பித்துள்ளது.

இது இவ்வாறிருக்க அந்த நாட்டின் மீது இயற்கைக்கும் அனுக்கிரகம் இல்லாமல் போய்விட்டது. கடந்த சில நாட்களாக நிலவிய அசாதாரண காலநிலை மற்றும் இயற்கை சீற்றம் காரணமாக சுமார் 5 ஆயிரம் பேர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.



பிரதான நகரங்களான யன்கொன், மண்டலே மற்றும் நைபிடடேவ் ஆகிய இடங்களிலுள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்ந்த நிலையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு வீடுகள் மற்றும் பெருந்தெருக்களை மூழ்கடித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நகரங்களுக்கும் இரண்டு கிராமங்களுக்கும் நீரை விநியோகிக்கும் சுவார் நீர்ப்பாசன நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டுப்பகுதி உடைந்த நிலையில், பெருந்தெருவுக்கு அண்மையில் உள்ள இரண்டு நீர்த்தேக்கங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக மியன்மாரின் தீயணைப்பு படைத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, இருப்பிடங்களை இழந்த பொது மக்கள் தம்மை பாதுகாத்துக் கொள்வதற்காக வேறிடங்களுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். கிராமங்களில் உள்ள மக்கள் வெளியேறுவதற்கு தயாராகி வருகின்றனர். எனினும், இதுவரை பாரிய சேதங்களோ, உயிரிழப்புக்களோ ஏற்படவில்லை என்று அரசாங்க பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (7)

# ஈராக்கில் பயங்கரவாதிகள் தாக்குதல்; 5 வீரர்கள் உட்பட 11 பேர் உயிரிழப்பு

(பக்தாத்)

ஈராக் நாட்டின் அன்பர் மாகாணத்துக்குட்பட்ட சோதனைச்சாவடி மீது நேற்று பயங்கரவாதிகள் நடத்திய கார்க்குண்டு தாக்குதலில் 11 பேர் உயிரிழந்தனர்.

ஈராக் நாட்டின் தலைநகரான பக்தாத்தில் இருந்து சுமார் 340 கிலோ மீற்றர் தூரம் மேற்கில் சிரியா நாட்டின் எல்லைப் பகுதியை ஒட்டியுள்ள அன்பர் மாகாணம் அமைந்துள்ளது.

இந்த மாகாணத்துக்கு உட்பட்ட கைம் மாவட்டம், அல் கைம் நகரின் நுழைவு வாயில் பகுதியில் வழக்கம் போல் நேற்று பாதுகாப்பு படையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, அவ்வழியாக வேகமாக வந்த ஒரு கார் சோதனைச்சாவடியின் மீது மோதி பயங்கரமாக வெடித்துச் சிதறியது. இந்த தாக்குதலில் பாதுகாப்பு படையை



சேர்ந்த 5 வீரர்கள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 15 இற்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள்அனைவரும் அருகாமையிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (7)

ாதாரச் சரிவு

# நடை ஒப்பந்தத்திலிருந்து
# வெளியேறத் தீர்மானம்



. பிரான்ஸ்,
ள் விதித்த
டுமையாக
தப் பரவல்
கொள்ளத்
றிவித்தது.
ட்டி, அணு
ட் ரிபியூஸ்'
பங்குக்கும்
15 ஆண்டு
அதிகமாக
டாது என

இந்த ஒப்பந்தத்துக்கு முன்னதாக ஈரானில் சேமித்து வைக்கப்பட்டுள்ள யுரேனியத்தை கப்பலில் ஏற்றி வெளிநாடுகளுக்கு அனுப்பி விட வேண்டும் என்ற நிபந்தனைக்கும் ஈரான் சம்மதித்தது. அதன்படி, அதிகப்படியான இருப்பில் இருந்த யுரேனியம் கப்பல்களில் ஏற்றப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதைதொடர்ந்து ஈரான் மீது விதிக்கப்பட்ட பல்வேறு தடைகளை அமெரிக்கா மற்றும் அதன் நேசநாடுகள் விலக்கிக்கொண்டன.

ஆனால், இந்த ஒப்பந்தத்துக்கு பின்னரும் ஈரான் இரகசியமாக அணு ஆயுதங்களை தயாரிப்பதாக அண்மையில்இஸ்ரேல்ஜனாதிபதிபெஞ்சமின் நெதன்யாகு வீடியோ ஆதாரத்துடன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.


இதைத்தொடர்ந்து, அமெரிக்கா ஈரானின் மீது கடுமையான பொருளாதார தடைகளை விதித்துள்ளது. ஈரானின் பொருளாதாரம் கடும் பின்னடைவை சந்தித்திருப்பதால் விலைவாசி பன்மடங்கு அதிகரித்துள்ளதால் அந்நாட்டு மக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

ஈரான் சந்தித்து வரும் வரலாறு காணாத பொருளாதாரச் சரிவு, விலைவாசி உயர்வு தொடர்பாக ஜனாதிபதியின் பதில் திருப்தியளிக்காததால் நீதி விசாரணைக்கு பாராளுமன்றம் பரிந்துரைத்துள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய ஆளும்கட்சி தலைவர் அயாத்துல்லா கமேனி, 'நமது நாட்டின் நன்மைக்கு உதவாவிட்டால், அணு ஆயுத தடை ஒப்பந்தத்தில் இருந்து வெளியேற நாம் தயாராக இருக்க வேண்டும்' என தெரிவித்துள்ளார். (7)

லாவில் பல
தொடர்ந்து
தார நெருக்
சியல் குழப்
அந் நாட்டு
கோரி, கடந்த
பெரு கொல
டர் முதலிய
ம் பெயர்ந்து

பில், கொலம்
மில்லியனு
ன வெனிசு
கோரிக்கை
க தந்துள்ள



தோடு பெருவில் 4 இலட்சத்திற்கும் அதிகமான வெனிசுவெலா மக்களும் புகலிடம் கோரியுள்ளனர்.

இந்நிலையில், அதிகரித்து வரும் வெனிசுவெலா வருகையைக் கட்டுப்படுத்த கடந்த இரு வாரத்திற்கு முன்னர் பெரு, ஈக்குவடோர் ஆகிய இரு அரசாங்கங்களும் அடையாள அட்டை தவிர செல்லுபடியாகும் 'கடவுச் சீட்டுக்களுடைய புகலிடக் கோரிக்கையாளர்களை மாத்திரம் அனுமதிப்பதாக தீர்மானித்திருந்தன. இத்திட்டத்தின் அமுல்படுத்தலைத் தொடர்ந்து, வெனிசுவெலா புகலிடக் கோரிக்கையாளர்கள் பலர் குறித்த நாடுகளின் எல்லைவரை பயணித்து மீண்டும் தங்கள் நாட்டிற்கு திரும்பிச் செல்ல நேரிட்டது. மேலும், தற்போது வெனிசுவெலாவில் நிலவும் அசாதாரண நிலையில் கடவுச் சீட்டினைப் பெற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர்கள் முறைப்பாட்டினை முன்வைக்கின்றனர்இந் நிலையில், வெனிசுவெலா மக்களுக்குக் கடவுச் சீட்டினை விநியோகிக்கும் வேலைத்திட்டத்தினை ஒபெக்நாடுகள் பொறுப்பேற்பதாக ஒப்புக் கொண்டுள்ளன. இதனைத் தொடர்ந்து, பொருளாதார ரீதியாகத் துன்பப்படும் வெனிசுவெலா மக்களுக்கு தங்கள் வாழ்க்கையின் புதிய அத்தியாயத்தினை ஆரம்பிக்க மற்றுமொரு வாய்ப்புக் கிட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## என்னைப் பற்றிய நல்ல செய்திகள் இருட்டடிப்பு
# சமூக வலைத்தளங்கள் மீது ஜனாதிபதி ட்ரம்ப் பாய்ச்சல்

(வோஷிங்டன்)

கூகுள், டுவிட்டர் பேஸ்புக் போன்றவை தன்னைப் பற்றிய சாதகமான செய்திகளை இருட்டடிப்பு செய்வதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவின் எதிர்க் கட்சிகளுக்கு ஆதரவான பிரபல செய்தி நிறுவனங்கள் மற்றும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளுக்கு மட்டும்தான் கூகுள் முன்னுரிமை அளிக்கிறது. அரசுக்கு எதிர்மறையான செய்திகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தை கூகுள், பேஸ்புக் மற்றும் டுவிட்டர் போன்றவை ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பற்றிய சாதகமான செய்திகளை தருவதில்லை என ஜனாதிபதி ட்ரம்ப் குற்றம்சாட்டி இவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் எனவும் ட்ரம்ப் எச்சரித்திருந்தார்.

அவரது இந்த குற்றச்சாட்டுக்கு கூகுள் நிறுவனமான ஆல்ஃபபெட் இன்க் மட்டும் மறுப்பு தெரிவித்து



இருந்தார்.

நமது மக்களின் மீது ஆதிக்கம் செலுத்த சமூக வலைத்தளங்கள் நினைக்கின்றன. இவர்களின் செயற்பாடு பெரும்பான்மையான மக்களுக்கு நியாயமானதாக இல்லை. மிகவும் மோசமான பாதை வழியாக செல்ல நினைக்கும் ள்ள நிலையில், ஜனாதிபதியின் செய்திகள் இருட்டடிப்பு செய்யப்படுவது உண்மை தானா? என்ற விசாரணையில் வெள்ளை மாளிகை அதிகாரிகள் ஈடுபட்டு வருவதாக ட்ரம்ப்பின் நிதித்துறை ஆலோசகர் லேரி குட்லோவ் நேற்று தெரிவித்துள்ளார். (7)

### மனித உரிமைகள் தொடர்பான

# ஐ.நாவின் சிறப்பு நிபுணர் இலங்கைக்கு விஜயம்



(கொழும்பு)

வெளிநாட்டுக் கடன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு நிபுணர் ஜுவான் பப்லோ பொகோஸ்லாவ்ஸ்கி அடுத்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில், எதிர்வரும் செப்டெம்பர் 3 ஆம் திகதி கொழும்பு வரும் அவர், 11 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து நிலைமைகளை அவதானிப்பார்.

தனது பயணத்தின் நோக்கம், தகவல்களை சேகரித்து மனித உரிமைகள் நிலைப்பாட்டிலிருந்து கடன் மற்றும் பிற நிதிய கடப்பாடு தொடர்பான கேள்விகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கும் என்று ஐ.நாவின் சிறப்பு நிபுணர் ஜுவான் பப்லோ பொகோஸ்லாவ்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்க அதிகாரிகள், சிவில் சமூகம், கல்வியாளர்கள் மற்றும் அனைத்துலக சமூகம் உள்ளிட்ட அனைத்துப் பங்காளர்களுடனும் தான் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பயணத்தின் முடிவில், எதிர்வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு கொழும்பில் செய்தியாளர் சந்திப்பு ஒன்றையும் அவர் நடத்த திட்டமிட்டுள்ளார்.


இவர் தமது விரிவான அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2019 மார்ச் மாதம் சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதி மைத்திரிக்கு அமோக வரவேற்பு பிம்ஸ்டெக் மாநாட்டில் இன்று சிறப்புரை









(காத்மண்டு)

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான வங்காள விரிகுடாவின் வாயில் என்று அழைக்கப்படும் பிம்ஸ்டெக் அரச தலைவர்கள் உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக நேபாளம் பயணமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் நண்பகல் காத்மண்டுவில் உள்ள திரிபுவன் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

ஜனாதிபதியை நேபாளத்தின் பிரதிப் பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ஐஸ்வர் போக்ரெல் (Ishwar Pohkrel) உள்ளிட்ட விசேட பிரதிநிதிகள் குழுவினர் மிகுந்த மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

அந்நாட்டின் பூரண இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு வழங்கப்பட்டதுடன், இரு நாடுகளினதும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. ஜனாதிபதி பயணம் செய்த பாதையின் இருமருங்கிலும் இரண்டு நாடுகளினதும் தேசிய கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. இந்த வரவேற்பு நிகழ்வின்போது ஜனாதிபதியுடன் நேபாளத்தின் பிரதிப் பிரதமர் சுமுகமாக கலந்துரையாடினார்.

காத்மண்டுவில் நடைபெறும் மாநாட்டின் கருப்பொருள் "சமாதானம், சுபீட்சம் மற்றும் பேண்தகு தன்மைவாய்ந்த வங்காள விரிகுடாவை நோக்கி" என்பதாகும்.

பிம்ஸ்டெக் அமைப்பு பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மியன்மார், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய 7 தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளைக் கொண்ட வலயமைப்பாகும்.

இதன் முக்கிய நோக்கம் வங்காள விரிகுடாவை அண்மித்த தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையில் தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்துவதாகும்.

ஜனாதிபதி இன்று 31 ஆம் திகதி மாநாட்டில் உரையாற்றுவார்.

மாநாட்டுடன் இணைந்ததாக ஜனாதிபதி நேபாள பிரதமர் கே.பீ. ஒலி மற்றும் நேபாள ஜனாதிபதி பித்யா தேவி பண்டாரி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதுடன், இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு புரிந்துணர்வு உடன்படிக்கைகளும் கைச்சாத்திடப்படவுள்ளன.

மேலும் இலங்கைக்கு பொருளாதார சமூக ரீதியான பல்வேறு நன்மைகளை கொண்டுவரும் வகையில் மாநாட்டில் பங்குபற்றும் சில அரச தலைவர்களுடன் ஜனாதிபதி இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள உள்ளார். (இ-7)

# பதவி விலகினார் ஆறுமுகன் தொண்டமான்



(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிர்வாக சபை மற்றும் தேசிய சபை ஒன்றுகூடல் கொழும்பிலுள்ள இ.தொ.கா. தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

காங்கிரஸின் பொதுச் செயலாளரும் தலைவருமான ஆறுமுகன் தொண்டமான் தலைமையில் கூடிய தேசிய சபை மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களால் இந்த நிர்வாக மாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

அந்தவகையில் இது வரை காலமும் காங்கிரஸின் பொதுச் செயலாளர் மற்றும் தலைவராக பதவி வகித்த ஆறுமுகன் தொண்டமான் இனி தலைவராக மட்டும் செயற்படவுள்ளார்.

அத்தோடு, பொதுச் செயலாளராக அனுஷியா சிவராஜாவும், பிரதி பொதுச் செயலாளராக ஜீவன் தொண்டமான் மற்றும் உப தலைவராக பதுளை மாவட்ட மாகாண சபை உறுப்பினர் சிவலிங்கம் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### சீசனல் மனிதர்கள்

சிலர் திடீரென்று வருவார்கள். ஆய் ஊய் என்று அள்ளிவிடுவார்கள். அப்புறம் காணாமல் போய்விடுவார்.

இவர்கள் எங்கு இருந்தாலும் அந்த இடத்தில் கலகலப்பு இருக்கும்; வார்த்தை ஜாலங்கள் இருக்கும்; வாக்குறுதிகள் நிறைய இருக்கும். மிகப் பிரியமாய் நடந்து கொள்வார்கள். நான் தான் எல்லாம் என்பது போல் பேசுவார்கள். அத்தோடு சரி, அப்புறம் வருடக்கணக்கில் எட்டியே பார்க்க மாட்டார்கள்.

நான் அறிந்தவரை மனித இயல்புகள் என்பவை ஆண், வெண் இருபாலாருக்கும் பெரும்பாலும் பொதுவானவை என்றாலும், இத்தகைய இயல்பு பெரும்பாலும் ஆண்களிடம் தான் இருக்கக் காண்கிறேன். ஏன் இப்படி என்பதை உளவியல் நிபுணர்களின் கருத்திற்கே விட்டுவிடுகிறேன்.

சரி! இவர்களை எப்படிக் கையாள்வது? அல்லது இவர்களிடத்தில் எப்படி நடந்து கொள்ள வேண்டும்?

இவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா? இது தவறு. இவர்கள் போடுகிற இசைக்கெல்லாம் நீங்களும் ஆடுகிறீர்களா? கூடாது! இது மூடத்தனம். இவர்களுக்குப் பெரிய முக்கியத்துவம் கொடுக்கிறீர்களா? தேவையே இல்லை. இவர்களை நம்பி எதிலும் இறங்குகிறீர்களா? வேண்டாம்! மோசம் போய் விடவே வாய்ப்பு அதிகம்.

இத்தகையவர்கள் பெரும்பாலும் சாதனையாளர்களாக இருக்க மாட்டார்கள். சாதனையாளர்கள் தாம் என்றால் செயலைவிடப் பேசுவது அதிகமாக இருக்கும். இவர்கள் தங்களைப் முன்னிலைப்படுத்திக் கொள்ளவே இப்படிப் பேசுகிறார்கள். தங்களைப் பற்றி எல்லோரும் உயர்வாக நினைக்க வேண்டும் என்று நினைக்கிற மனப்பான்மை உடையவர்கள் இவர்கள்.

இவர்கள் அந்தந்த நேரத்து மனிதர்கள். இருக்கும் நேரம் தங்களைச் சுற்றியிருப்பவர்களை ஒரு கலக்குக் கலக்குவார்கள். இவர்கள் மிக வேண்டியவர்களாக அமைந்து விடும் போது அந்த நேரத்து அரட்டைக்கு நீங்களும் ஈடுகொடுங்கள்.

இவர்கள் சொல்கிற எதையும் அதிகம் பொருட்படுத்தாதீர்கள். இவர்கள் உருவாக்கும் உணர்ச்சிகளுக்கு இரையாகி விடாதீர்கள்; கேலி செய்தாலும் சரி; கோபித்துக் கொண்டாலும் சரி; பாராட்டினாலும் சரி! இவர்களைப் பொறுத்த அளவில் நமக்குள் ஒரு ஸ்டெபிலைசர் தேவை. இவர்கள் கூட்டினாலும் குறைத்தாலும் எம் பாட்டிற்கு 230 வோல்ட்ஸை வெளிப்படுத்தியபடி இருக்க வேண்டியது தான்.

**லேனா தமிழ்வாணன்**

# கொழும்பில் ஒருமுகம்; வடக்கில் ஒருமுகம் காட்டி இந்த மண்ணைக் காப்பாற்ற முடியாது!

## வரவு-செலவுத்திட்டத்தை நிபந்தனையின்றி ஆதரித்தவர்களுக்கு கஜேந்திரகுமார் இடித்துரைப்பு

(சாவகச்சேரி)

கொழும்பில் ஒரு முகம் இங்கே எங்களுடைய மக்களுக்கு முன்னால் இன்னொரு முகத்தைக் காட்டி இந்த மண்ணை நாங்கள் காப்பாற்ற முடியாது. இதுதான் இன்றைய யதார்த்தம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு சாவகச்சேரி -பெரியமாவடி சித்தி விநாயகர் கலை மன்றத்தில் இடம்பெற்ற முத்தமிழ் விழா இறுதி நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இந்த மண்ணிலே எம் மக்கள் ஒரு தேர்தலில் போய் வாக்களிப்பதாக இருந்தால் அது எந்தக் கட்சிக்கு வாக்களித்தாலும் அந்த மக்களுடைய உள்நோக்கம் இந்த இனமும் இனத்தினுடைய அடையாளமும், மண்ணும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதே. அந்த வகையில் இன்றைக்கு நாங்கள் இனப் பிரச்சினை என்று பேசுகின்ற போது அந்த இனப் பிரச்சினையின் அடிப்படையே எங்களுடைய தேச அந்தஸ்து திட்டமிட்டு அழிக்கப்படுகின்றமையால் அந்த தேச அந்தஸ்து பாதுகாக்கப்பட வேண்டும்,

அதற்கு ஒரு அங்கீகாரம் பெற்றெடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலேயே இனப் பிரச்சினையை நாம் நோக்குகின்றோம். ஒரு தேசத்தை அழிக்கின்றார்களாக இருந்தால் அந்த தேச அந்தஸ்தை வழங்குகின்ற நான்கு தூண்களை அழிக்கிறார்கள் என்பது தான் அதன் அர்த்தம்.

அந்த தேச அந்தஸ்தை வழங்குகின்ற நான்கு தூண்களாக மொழி,ஒரு தனித்துவமான கலாசாரம், நிலப்பரப்பு, எங்களுடைய கூட்டு வாழ்க்கையை தக்க வைக்கக் கூடிய பொருளாதார பலம் ஆகியன காணப்படுகின்றன.

இன்றைக்கு எங்களுடைய தேசம் அழிக்கப்படுகின்றதாக இருந்தால் அந்த நான்கு தூண்களும் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட நூற்றுக்கு நூறு சதவீதம் தமிழ் பேசும் மக்களாக இருக்கின்ற காரணத்தால் எங்களுடைய அடையாளம் கேள்விக்குறியாக்கப்படவில்லை.

ஆனால் யாழ்.மாவட்டத்தை விட்டு நீங்கள் சென்றீர்களாக இருந்தால் அனைத்து மாவட்டங்களிலும் எங்களுடைய தேசத்தினுடைய இருப்பு, அடையாளம் கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது.

உள்ளூராட்சி தேர்தல் இடம்பெற்ற போது இன்றைக்கு ஆட்சியில் இருக்கக்கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை எடுத்துப் பார்த்தால் அந்த தேர்தல் விஞ்ஞாபனத்துடைய கடைசி பக்கத்திலே அவர்கள் ஒரு வாக்குறுதி வழங்கியிருக்கிறார்கள்.



அதாவது ஆயிரம் புத்த விகாரைகளை வடகிழக்கில் கட்டுவதற்கு தாங்கள் உறுதிமொழி அளிப்பதாக. இந்த கலாசாரம் என்பது இன்றைக்கு யாழ்.மாவட்டத்தில் ஒரு வகையிலே பாதுகாப்பாக இருந்தாலும் கூட இந்ததென்மராட்சிமண்ணைச் சார்ந்த இன்னொரு பகுதியிலே அது ஒரு கேள்விக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறது.

எம்மை பொறுத்தவரை முத்தமிழ் விழா போன்றன வெறுமனே மன்றத்தினுடைய ஆண்டு விழாவாக மட்டும் மட்டுப்படுத்தி பார்க்காமல் இந்த இனத்தினுடைய, தேசத்தினுடைய அடையாளத்தை தக்க வைக்கக் கூடிய வகையிலே எங்களுடைய மக்களுக்கு கொண்டு சேர்க்கக் கூடிய விழாவாகத் தான் நாங்கள் இந்த விழாவைப் பார்க்கிறோம்.

எம்மை பொறுத்தவரை துரதிர்ஷ்டவசமாக எங்களுடைய இளம் சமூகம் இப்படிப்பட்ட நிகழ்வுகளில் இருந்து விடுபட்டு போவதற்கான வாய்ப்புகள் தான் அதிகரித்து வருகின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலையிலும் கூட ஏதோ ஒரு வகையிலே நாங்கள் தொடர்ந்தும் இந்த கலாசாரத்தை பேண வேண்டும் என்ற ஒரு உறுதிமொழியை எடுத்து முத்தமிழ் விழா போன்றன இடம்பெறுவது பாராட்டுதற்கு உரியது.

எங்களுடைய தேசம் இன்றைக்கு ஒரு கேள்விக்குறியாக மாறி விட்டது. முல்லைத்தீவில் மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றது. முல்லைத்தீவு மண் போரில் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட மண். அங்கே இருக்கக்கூடிய ஒவ்வொரு குடும்பத்திலும் ஆகக் குறைந்தது ஒரு நபர் ஆவது உயிரிழந்துள்ளனர்.

அந்தளவு தூரத்திற்கு அந்த பிரதேசம் போரால் பாதிக்கப்பட்டு அழிக்கப்பட்ட பிரதேசம்.

எமது உரிமைப் போராட்டத்திற்கு கூடுதலான உறுப்பினர்கள் அந்த வன்னிப் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தி போராடியமை பலருக்குத் தெரியும். அப்படிப்பட்ட சூழலில் இன்றைக்கு வன்னி பிரதேசத்தில் 4 பேருக்கு ஒரு இராணுவ சிப்பாய் இருக்கின்ற நிலை தான் உள்ளது. அங்கே எமது மக்கள் கண்காணிக்கப்படுகின்றனர்.

எமது உரிமைப் போராட்டத்திற்கு தியாகம் செய்தது அவர்கள். அந்த தியாகத்தினாலே அந்த மக்களை கண்காணித்து அடக்கி வைத்திருக்க வேண்டும் என்பதில் மாறி வந்த இரண்டு அரசாங்கங்களும் மிகத் தெளிவாக இருக்கின்றார்கள்.

அப்படி இருக்கவும் ஆயிரக்கணக்கான மக்கள் அவர்களுக்கு இருக்கக்கூடிய அச்சுறுத்தல்களையும் தாண்டி வீதியில் இறங்கி போராடுகிறார்கள் என்றால் எந்தளவு தூரத்திற்கு அந்த முல்லைத்தீவு மண் பறிபோகிறது. ஒட்டு மொத்த இனத்திற்கு சவாலாக இருக்கிறது என்பதை நாம் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

மகாவலி திட்டம் மண் பறிப்புச் செய்வது எப்படி என்றால் ஒரு அரசாங்கம் தனக்கு இருக்கக்கூடிய நிதியை பயன்படுத்தி தான் சிங்கள குடியேற்றங்களை அந்த இடங்களில் மேற்கொள்ளலாம்.

ஒரு அரசாங்கத்திடம் நிதி இல்லாமல் எந்த வகையிலும் அந்த அரசாங்கம் இயங்க முடியாது.

மகாவலி திட்டம் நடைபெறுவதற்கு ஜனாதிபதிக்கு வரவு-செலவுத் திட்டம் ஊடாக நிதி ஒதுக்கப்படுகின்ற போதுதான் அவர் அந்த சிங்கள குடியேற்ற வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம். வரவு-செலவுத் திட்டத்தை நாம் மிகக் கவனமாக படிக்க வேண்டும்.

ஏனென்றால் கடந்த 70 வருடங்களாக இந்த தமிழ் தேசம் அழிக்கப்படுகின்றதாக இருந்தால் அந்த அழிவிற்கு எடுக்கப்படுகின்ற ஒவ்வொரு முயற்சியும் வரவு-செலவுத் திட்டம் ஊடாகத் தான் அரசாங்கத்திற்கு அந்த அழிப்பிற்கு இடம் கொடுக்கிறது.

அந்த வரவு-செலவுத் திட்டத்தை நாங்கள் நிபந்தனை இல்லாமல் ஆதரித்து விட்டு முல்லைத்தீவு மண் பறிபோகிறது என்று கூறி போராடுவதில் எந்த அர்த்தமும் கிடையாது.

இன்றைக்கு இருக்கக்கூடிய யதார்த்தம் அதுதான். கொழும்பில்ஒரு முகம்இங்கே எமது மக்களுக்கு முன்னால் இன்னொரு முகத்தைக் காட்டி இந்த மண்ணை நாங்கள் காப்பாற்ற முடியாது. எங்களுடைய மக்கள் முல்லைத் தீவில் நடத்திய போராட்டத்தை வேறு எவரும் உரிமை கூற முடியாது.

போராட்டம் நடத்தி கொழும்பிற்கு மட்டும் அல்ல தங்களுக்காக குரல்கொடுக்க வேண்டிய அரசியலில் ஈடுபடுகின்ற எம்மவர்களுக்கும் கூட அந்த போராட்டத்தை நடத்தி தங்களுடைய தலைவிதியை தாங்களே கையில் எடுத்திருக்கிறார்கள் என்ற செய்தியை மக்கள் தெரிவித்திருக்கிறார்கள் என கஜேந்திரகுமார் மேலும் தெரிவித்துள்ளார். (இ-30)

# "என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா" கடந்த கால வெறும் கண்காட்சி போலல்ல -மங்கள

(கொழும்பு)

பாரிய செலவில் வெறும் கண்காட்சியாக மட்டும் கடந்த காலங்களில் நடத்தப்பட்டது போலன்றி பாரிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டதாக தேசிய அரசாங்கத்தின் "என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா" அமைவதாக நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.



2018இல் ஒரு இலட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும்நோக்கில்மொனராகலையில் இடம்பெறும் "என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா" கண்காட்சியை நேற்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"தேசத்திற்கு மகுடம்" போன்ற கண்காட்சிகள் வெறும் விழாக்களாக மட்டுமே அரசாங்கத்தின் பாரிய நிதி செலவில் நடத்தப்பட்டன.

அதனால் அந்த மாவட்டத்திலோ அல்லது சம்பந்தப்பட்ட மாகாணத்திலோ மக்கள் எதிர்பார்த்த எத்தகைய அபிவிருத்தியும் இடம்பெறவில்லை.

அதற்கு மாறாக "என்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா" கண்காட்சியையொட்டியதாக முழு மாவட்டமும் பாரிய அபிவிருத்தியடைவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கண்காட்சியை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்த அமைச்சர் அனைத்து கண்காட்சிக் கூடங்களையும் பார்வையிட்டதுடன் பொதுமக்களுடனும் கலந்துரையாடினார்.

இதன்போது கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் வீண் விரயங்கள் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் மக்களுக்கான அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விபரண காட்சிப்படுத்தலொன்றும் இடம்பெற்றது.

அமைச்சர்கள், நிறுவனங்களின் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் அரச அதிகாரிகளும் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். (இ-7)

# மகிந்தவுக்கு பிரதமர் பதவி வாசுதேவ விசித்திர கனவு

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார கனவில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவும், குளிர்காலத்தில் அவ்வாறான கனவுகள் வரும். ஆனால் வரட்சியான காலத்திலும் வாசுதேவ நாணயக்காரவிற்கு கனவு வருவது அதிசயமாக உள்ளது என அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு, பிரதமர் பதவியை வழங்க ஜனாதிபதி விருப்பத்துடன் இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார வெளியிட்டுள்ள தகவலில் உண்மையில்லை.

இது வெறும் கனவு மாத்திரமே. குளிர்காலத்தில் அவ்வாறான கனவுகள் வரும். ஆனால் வரட்சியான காலத்திலும் இவ்வாறான விசித்திர கனவு வாசுதேவ நாணயக்காரவிற்கு வருவது அதிசயமாக உள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மகிந்த ராஜபக்ஷவின் சகோதரரது மரண வீட்டுக்கு சென்றதாலேயே அவ்வாறான கருத்துக்களை வெளியிடுகின்றனர் என ராஜித தெரிவித்தார். (இ-7)

# இலங்கைக் கடற்படையிடம் அமெரிக்கக் கப்பல் ஒப்படைப்பு







(கொழும்பு)

அமெரிக்க கரையோர பாதுகாப்புப் படையின் "சேர்மன்" என்றழைக்கப்பட்ட 'ஹை என்டியூரன்ஸ் கட்டர்' கப்பல் வைபவ ரீதியாக இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஹவாய் - ஹொனொலுவில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற நிகழ்வின் போது இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சிறிமேவன் ரணசிங்க உத்தியோக பூர்வமாக சேர்மனை கையேற்று குறித்த கப்பலுக்காக நியமிக்கப்பட்டுள்ள கட்டளை அதிகாரி கப்டன் அருண தென்னகோனிடம் கையளித்துள்ளார்.

சேர்மன் கப்பலானது இலங்கைக் கடற்படையில் உள்ள மிகப் பெரிய கப்பலாக அமையவிருப்பதுடன் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பையும் வலுப்படுத்துகிறது.

இந்தக் கப்பலானது இலங்கை தமது பிரத்தியேக பொருளாதார வலயத்தில் மேற்கொள்ளும் ரோந்து நடவடிக்கைகளுக்கான ஆற்றலை அதிகரிக்கும் என்பதுடன் இந்து சமுத்திரத்தின் கப்பல் பயணப் பாதைகள் ஊடாக பயணிக்கும் ஏனைய நாடுகளின் கப்பல்களுக்கும் மேலதிக பாதுகாப்பை வழங்குவதாகவும் அமைந்திருக்கும்.

115 மீற்றர் நீளத்தைக் கொண்ட இந்தக் கப்பல் 167 பேர் கொண்ட பணிக்குழு தாங்கிச் செல்லக்கூடியது.

ஒரு மாதத்துக்கு மேலாக 110 இலங்கைக் கடற்படையினர் 'சேர்மன்' கப்பல் குழுவினருடன் இணைந்து இந்தக் கப்பலை செயற்படுத்துவது தொடர்பான பயிற்சிகளை முன்னெடுத்திருந்தனர்.

சேர்மனை 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முற்பகுதியில் இலங்கைக்கு கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது. அதுவரையில் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புப் பணிகள் அதேபோல் கப்பல் குழுவினருக்கான பயிற்சிகள் என்பன தொடரவுள்ளன.

இந்நிகழ்வில் ஹவாயிலுள்ள இலங்கைத் தூதுவர் பெடெ குரே, அமெரிக்காவுக்கான பசுபிக் கடற்படை கடல் சார் நடவடிக்கைகளுக்கான பணிப்பாளர், ரெட்ம் மார்க் எச்டெல்டன், சர்வதேச கையகப்படுத்துதலின் பிரதி பிரதம அதிகாரி டொட் ரொய்னாட் மற்றும் ஹவாயிலுள்ள இலங்கை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அழியும் அபாயத்தில் தமிழர் அடையாளம்

## த ரைம்ஸ் ஒப் இந்தியா சுட்டிக்காட்டு

(டில்லி)

தமிழர்களின் அடையாளமாக காணப்பட்ட கல்வெட்டு ஒன்று, அழிவடையும் அபாயத்தில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை த ரைம்ஸ் ஒப் இந்தியா வெளியிட்டுள்ளது.

இலங்கையின் புராதன மன்னர்களுக்கும், தமிழகத்தின் பல்லவ மன்னர்களுக்கும் இடையில் இருந்த இராஜதந்திர தொடர்புகளைக் குறிக்கும் கல்வெட்டே இவ்வாறு அழிவடையும் ஆபத்தில் உள்ளது.

பல்லவ மன்னரான 2 ஆம் நந்திவர்மனின் ஆட்சிக் காலத்தில் 8ஆம் நூற்றாண்டில் செதுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றும் துர்க்கை அம்மன் சிலை ஒன்றும் இந்த அபாய நிலையில் உள்ளன.

தமிழகம், செங்கல்பட்டு, ஒழாளூரில் உள்ள வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த இந்த கல்வெட்டும் கற்சிலையும் சில வருடங்களுக்கு முன்னர் கட்டுமானப் பணியின் போது கைவிடப்பட்டதாக கூறப்படுகிறது.

குறித்த கல்வெட்டில் இலங்கைக்கும் தமிழகத்துக்கும் இடையிலான பல்லவர் கால இராஜதந்திர மற்றும் நிர்வாக ரீதியான தொடர்புகள் தொடர்பான குறிப்புக்கள் உள்ளன.

அத்துடன் கி.பி.720-796ஆம் ஆண்டு வரையில் ஆட்சி செய்த இரண்டாம் நந்திவர்மன் காலத்துக்கு உரிய இந்த கல்வெட்டில் இந்த காலப்பகுதியில் தமிழகத்துக்கு விஜயம் செய்த இலங்கையின் இராஜதந்திரி தொடர்பான விபரங்கள் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கல்வெட்டையும், சிலையையும் பாதுகாக்குமாறு மரபுரிமை செயற்பாட்டாளர்களால் தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறதுடன், இந்திய தொல்லியலாளர்களால் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ-7)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்

## எண் 5 (புதன்)

## (வியாபார வித்தகன்)

**5ஆம் எண்காரர்களின் உடல் தோற்றம், நோய், உணவு மற்றும் மருத்துவ முறைகள்**

நல்ல உயரமும் சற்று பருமனான உடலமைப்பும் கொண்டவர்கள். வலது பக்கம் சற்று கொழுப்பு நிறைந்து காணப்படுவார்கள். சதைப்பற்று நிறைந்து காணப்படும். ஒளிவீசும் கண்கள் இருக்கும். எப்போதும் எதையாவது எதிர்பார்ப்பது போன்ற ஆவலுடன் கூடிய முகமிருக்கும். முகம் துருதுருவென்று இருக்கும். குறுகிய நெற்றியுடன் பரந்து விரிந்த மார்பும் உடையவர்கள். அகண்ட தோள்கள் இருக்கும். இவர்கள் பார்வையில் தனி வசீகரமிருக்கும். மற்றவரை எளிதில் கவர்ந்திழுக்கும் காந்தப் பார்வையுடைவர்கள். புதன் ஆதிக்கம் மிகுந்தவர்கள் மிகவும் உயரமாக இருப்பார்கள். அழகான புன்சிரிப்பு இருக்கும். முகம் பளிச்சென்று தெளிவு மிக்கதாக இருக்கும். இவர்களின் கையும் காலும் எதையாவது செய்து கொண்டேயிருக்கும். நடக்கும் போதும் ஓடும் போதும் நடனமாடுவது போலத் தோன்றும். இவர்களின் காதுகள் நேர்த்தியாக இருக்கும். தலைமுடி அடர்த்தியாக அழகுடன் இருக்கும். மூக்கு நீண்டு கூர்மையாக இருக்கும். புருவங்கள் இரண்டாக வெட்டுப்பட்டுக் காணப்படும். புதிதுபுதிதாக ஆடைகள் அணிவார்கள். எப்போதும் சுறுசுறுப்பாகவே காட்சியளிப்பார்கள். எலும்பு மண்டலம் உறுதியாக இருக்கும். மாறும் தன்மையுடைய பேச்சு இருக்கும். எளிதில் உடல் சோர்வடைந்து விடுவார்கள். கூர்மையான தலையும் வெளிர்நிற தோலும் உடையவர்கள். தவறான பழக்க வழக்கமிருந்தால் இவர்களின் நரம்பு மண்டலம் அதிகமாகப் பாதிப்புகள் அடையும்.

**புதன் ஆதிக்கத்தவர்களின் தொழில்கள்**

வியாபாரம்தான் சிறந்தது. எந்த வியாபாரமும் செய்து பொருள் ஈட்டலாம். வேலை செய்தால் முதலாளிக்கு இலாபம் கிடைக்கும். எழுத்தாளர்கள், ஏஜெண்டுகள், கமிஷன் கிடைக்கும் தொழில்கள், கலைத்தொழில்கள், கூட்டம் அதிகமுள்ள இடத்தில் செய்யும் தொழில்கள், அரசியல், பத்திரிகை, தத்துவம், விஞ்ஞானம், ஜோதிடம், மருத்துவம் போன்ற தொழில்களால் இலாபம் அடைவார்கள்.

**புதன் ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நாட்கள்**


5, 14, 23, 9, 18, 27 ஆகிய திகதிகள் அதிர்ஷ்ட நாட்களாகும். திகதி, மாதம், வருடம் மூன்றையும் கூட்டி வரும் கூட்டு எண் 5 வரும் நாட்களும் அதிர்ஷ்ட தினங்கள் ஆகும். மேற்கண்ட நாட்களில் ஈடுபடும் காரியங்கள் முழு வெற்றியைத் தரும்.

நீடித்து நிலைக்கக் கூடிய காரியங்களைக் கூட்டு எண் 5 வரும் நாட்களில் செய்து வர வேண்டும். அதேநேரத்தில் திகதி எண்ணும் சாதகமாக அமைய வேண்டும்.

**துரதிர்ஷ்ட நாட்கள்**

தாங்கள் மேற்கொள்ளும் எந்தவொரு புது முயற்றியையும் 4, 13, 22, 31 ஆகிய நாட்களிலும் 8, 17, 26 ஆகிய நாட்களிலும் செய்யக் கூடாது.

இந்த இரண்டு எண்களும் சந்திக்கும் நாட் களில் மிகப்பெரிய தோல் விகள் கிடைக்கும். பெரும் நட்டம் ஏற்படும். தவறான நாளில் பெற்ற வெற்றிகள் நிலைக்கா. உடனே பறி போய் விடும். ஆகாத நாட்களில் முக்கியமான காரியங்களில் ஈடுபடாமல் அமைதியாக இருந்தாலே போதும். அதிர்ஷ்டமடைய துரதிர்ஷ்ட நாட்களை விலக்கி அதிர்ஷ்ட நாட்களில் முக்கியமான காரியங்களை மேற்கொண்டாலே போதும். பன்மடங்கு அதிர்ஷ்டம் விருத்தியாகும்.




**அதிர்ஷ்டமான நிறங்கள்**

சாம்பல், பொன்னிறம், மஞ்சள், வெளிர் நீலம், வெளிர் பச்சை, சிமென்ட் கலர் போன்ற வர்ணங்கள் புதன் ஆதிக்கத்தினரின் அதிர்ஷ்ட நிறங்களாகும். அணியும் ஆடைகள், வசிக்கும் இடங்கள், பேனா, பென்சில், விசிடிங் காட்டுகள், வண்டி, வாகனம் போன்ற அனைத்து விதமான உபயோகப் பொருட்களையும் அதிர்ஷ்ட நிறங்களில் உபயோகித்து வந்தால் அதிர்ஷ்டம் விருத்தியாகும். அதிர்ஷ்ட நிற பேனாவால் அதிர்ஷ்ட நிற மையால் கையெழுத்திட்டு வர வேண்டும். விரைவான அதிர்ஷ்டம் கிடைக்கும்.

**துரதிர்ஷ்டமான நிறங்கள்**

கறுப்பு, கோப்பிகலர், இருண்ட நிறங்கள் இவர்களுக்கு வீண் அலைச்சலையும் மனக் குழப்பத்தையும் ஏற்படுத்தும். பல நிறங்கள் கலந்த இருண்ட நிறங்கள் இவர்களுக்கு காரியத் தடைகளையும் காரி யத் தோல்வியையும் ஏற்படுத்தும்.

**அதிர்ஷ்ட இரத்தினங்கள்**

வைரம், சிர்க்கான் (வெள்ளைக்கல்) போன்றவற்றை வலதுகை மோதிர விரலில் தோலில் உரசும்படி அணிந்து கொண்டால் நல்ல அதிர்ஷ்டம் விருத்தியாகும். அதிர்ஷ்ட இரத்தினங்களை தோஷமில்லாததாகப் பார்த்து அவரவர் அதிர்ஷ்ட நாளில் வாங்கி அணிந்துகொள்ள வேண்டும்.

**அதிர்ஷ்ட உலோகம்**

வெள்ளி இவர்களின் அதிர்ஷ்ட உலோகமாகும். அடுத்ததாகத் தங்கம் மற்றும் பிளாட்டினம் ஆகியவற்றையும் பயன்படுத்தலாம். மோதிரம், காப்பு, அட்சரங்கள் போன்றவற்றை அதிர்ஷ்ட உலோகங்களில் பதித்து வணங்கி வரலாம். அதிர்ஷ்ட இரத்தினங்களை வெள்ளி மோதிரத்தில் பதித்து வணங்கி வரலாம். அதிர்ஷ்டம் பன்மடங்கு விருத்தியாகும்.


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300– கி.பி.2000)

32

கலாநிதி மூ.குணசிங்கம்



திருகோணமலையில் அமைந்துள்ள திருக்கோணேஸ்வரம்

> "ஏற்கனவே கி.பி.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த, சமண மதங் களின் செல்வாக்கினை நிலை குலை த்து, சைவசமயம் புத்துணர்ச்சி பெற்று தமிழ்நாட்டில் மீண்டும் வளரத் தொடங்கியதைப் பல்லவர் ஆட்சிக்கால வரலாற்றுச் சான்றுகள், கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், கட்டட, சிற்ப, ஓவியக் கலைகள் போன்றவற்றினூடாக அறிய முடிகிறது"

## ஓர் இருண்ட வரலாற்றுக்காலம் (கி.மு. 300-கி.பி. 900)

மேலும் பதவியா, கந்தளாய் போன்ற பகுதிகளிலும் புராதன சைவவழிபாட்டுத் தலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுகளுக்கு முந்திய சைவத்தலங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில், வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கை மக்கள் மத்தியில் சைவசமயம் முக்கியமான, நிலையான, தொடர்ச்சியான நடைமுறையில் உள்ள சமயமாக இருந்து வந்திருக்கிறது என்பதனை அறிய முடிகிறது. ஆனால், கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி, சைவத்தின் வரலாற்றில் மிகவும் முக்கியமானதொரு காலப்பகுதியாகக் காணப்படுகிறது. ஏற்கனவே சுருக்கமாகக் கூறியதன்படி, இக் காலகட்டத்தில் தமிழ்நாட்டில் சைவசமயம் மிகவும் எழுச்சியுடன் மறுமலர்ச்சி அடைந்து, அங்கு ஒரு நிலையான இடத்தைப் பிடித்திருந்தது.

ஏற்கனவே கி.பி.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து செல்வாக்குப் பெற்றிருந்த பௌத்த, சமண மதங்களின் செல்வாக்கினை நிலை குலைத்து, சைவசமயம் புத்துணர்ச்சி பெற்று தமிழ்நாட்டில் மீண்டும் வளரத் தொடங்கியதைப் பல்லவர் ஆட்சிக்கால வரலாற்றுச் சான்றுகள், கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், கட்டட, சிற்ப, ஓவியக் கலைகள் போன்றவற்றினூடாக அறிய முடிகிறது.

இதன் தாக்கமும் செல்வாக்கும் புவியியல் ரீதியாக அண்மித்து இருந்த இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகளிலும் ஏற்பட்டன. கி.பி ஆறாம் நூற்றாண்டுகளின் இறுதிப் பாகத்தில் இருந்து தமிழ்நாட்டில் ஆரம்பமான நாயன்மார்களின் பக்தி இயக்கம், இலங்கையின் சைவம் மேலும் செழிப்புற்று வளர வழி அமைத்துக் கொடுத்தது.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு காலப் பகுதியில் நாயன்மார்களில் முக்கியம் வாய்ந்தவரான திருஞானசம்பந்தர் இலங்கையின் புராதன தலங்களான கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம் ஆகிய தலங்கள் மீது தேவாரப்பதிகங்கள் பாடி அவற்றைப் பெருமைப்படுத்தியிருந்தார்.

மேலும், கி.பி.எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாயன்மார்களில் ஒருவரான மாணிக்கவாசகரும் மன்னாரில் உள்ள மாதோட்டப் பெருந்துறைக்கு வந்து போனதாகவும் அப்பொழுது திருக்கேதீஸ்வர சிவனின்மேல் அவர் கொண்ட பக்தியினால் அவர் பாடியருளிய திருவாசகத்தில் பல முறை திருப்பெருந்துறை உறை சிவனே!- எனத் திருக்கேதீஸ்வரச் சிவனை முன்நிறுத்திப் பாடியுள்ளார் என்றும் கருதப்படுகின்றது.

அவர் பாண்டிய மன்னனுக்காகக் குதிரை வாங்க வந்த இடம் திருப்பெருந்துறை, மாந்தை அல்லது மாதோட்டம் எனக் கருதப்படுகின்றது. அதேபோன்று கி.பி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான சுந்தரமூர்த்தி நாயனாரும் திருக்கேதீஸ்வரம் மீது பாடல்களைப் பாடி சிறப்பித்திருக்கின்றார்.

இவ்வாறான சான்றுகளின் அடிப்படையில் வரலாற்றுக் காலம் தொடங்கி அல்லது வரலாற்றுக் காலத்துக்கு முன்பிருந்தே சைவசமயம் மக்கள் மத்தியில் இடம்பிடித்து, கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து குறிப்பாக வடக்கு-கிழக்கு, வடமேற்குத் தமிழ்ப் பிரதேசங்களில் செல்வாக்குடன் நிலை பெற்றுக் காணப்படுகிறது.

மேலும், அடுத்து வருகின்ற கி.பி ஒன்பதாம் நூற்றாண்டுகளிலிருந்து, குறிப்பாக சோழர் ஆதிக்கம் இலங்கையில் ஏற்பட்டதிலிருந்து, சைவ சமயம் அதன் உச்சகட்ட வளர்ச்சி அடைவதையும், இலங்கைத் தமிழர்களுக்கு மத ரீதியிலான ஒரு நிலையான அடையாளத்தை வழங்கியதனையும் காணமுடிகிறது.

அடுத்து, மேற்கூறப்பட்ட காலப் பகுதியில் சைவத்தைப் போன்று தமிழ்மொழியும் அதன் தொடர்ச்சியான வளர்ச்சியினைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால் தமிழ்மொழியின் தொடர்ச்சியான வளர்ச்சி பற்றி அறியப் போதிய கல்வெட்டு ஆதாரங்களோ, இலக்கிய ஆதாரங்களோ பரவலாகக் கிடைக்கப் பெறவில்லை. ஏற்கனவே கூறியதுபோல, அநுராதபுரப் பிரதேசத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளிலிருந்து பரவலாக அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்றதன் விளைவாக சில தமிழ் கல்வெட்டுகள் மேற்குறிப்பிட்ட காலகட்டத்தின் இறுதியில் கிடைக்கப் பெற்றிருக்கின்றன.

ஆனால் அநுராதபுரப் பிரதேசத்திற்கு வெளியே, வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களில், இக் காலத்துக்குரிய அவ்வாறான தமிழ் எழுத்துக்கள் கொண்ட கல்வெட்டுக்கள் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

ஆனால், இக்காலத்தில் பல்லவர்கள் பல்லவ கிரந்த எழுத்து முறையூடாக சமஸ்கிருத மொழியில் தென்பிராமி எழுத்துக்களைப் பயன்படுத்தித் தமது கல்வெட்டுக்களை எழுதினர். இதன் செல்வாக்கு இலங்கையிலும் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கையில் பொதுவாகப் பல்லவ கிரந்த எழுத்து அமைந்துள்ள சமஸ்கிருதமொழிக் கல் வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவை கூடுதலாக வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலேயே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே பல்லவ கிரந்த எழுத்தில் சமஸ்கிருத மொழியை இக்காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்கள் பயன்படுத்தியமை பற்றி அறிய முடிகின்றது. வரலாற்று காலத்தில் கி.மு. 3 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.3 ஆம் நூற்றாண்டுவரை அல்லது அடுத்து வருகின்ற ஒரு சில நூற்றாண்டுகளை உள்ளடக்கியதாக கல்மேல் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் பிராமிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

இந்தக்காலப் பகுதியை அடுத்து வருகின்ற நூற்றாண்டுகளிலிருந்து தமிழ், சிங்கள சமஸ்கிருத கல்வெட்டுகள் இலங்கையில் காணப்படுகின்றன. அநுராதபுரப் பிரதேசத்திலேயே, கி.பி 600-கி.பி 900 காலப்பகுதிக்குரிய பதினொரு கல்வெட்டுகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இக் கல்வெட்டுகள் தமிழிலும், கிரந்தஎழுத்திலான சமஸ்கிருதத்திலும் எழுதப்பட்ட கல்வெட்டுகளாக மொழிவிற்பன்னர்களாலும், தொல்லியல் வல்லுநர்களாலும் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஏற்கனவே குறிப்பிட்டது போல், இக்கல்வெட்டுக்களில் அநுராதபுர அரசு பற்றிய செய்திகளைக் காண முடியவில்லை.

அநேகமாக, வணிக கணங்கள் என வரலாற்று ஆசிரியர்களால் குறிப்பிடப்படும், வர்த்தக நிறுவனங்கள் பற்றியும், கோவில்களுக்குத் தானம் கொடுக்கப்பட்ட நிகழ்வுகள் பற்றியுமே காணப்படுகின்றன. எது எவ்வாறிருப்பினும், தமிழ் மொழி அக் காலகட்டத்தில் கல்வெட்டுகளில் பயன்படுத்தப்பட்டமை குறித்து இக் கல்வெட்டுகள் மிக முக்கியம் வாய்ந்தவையாகத் திகழ்கின்றன.

உதாரணமாக, "குமாரகணம்", "நான்கு நாட்டார்", என்ற வணிக கணங்களுடைய கல்வெட்டுகள் 1981ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆய்வின்போது அநுராதபுர நகரத்தின் வடக்குப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டன. இப் பிரதேசம் அக் காலத்தில் கூடுதலாகத் தமிழர்கள் வாழ்ந்த இடமாக ஆய்வுகள் காட்டி நிற்கின்றன.

இதே போன்று பங்குளிய விகாரைத் தமிழ்க் கிரந்தக் கல்வெட்டுக்கள், அபயகிரி விகாரை வளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் என்பன மிகவும் முக்கியமானவையாகும். பங்குளிய விகாரைக் கல்வெட்டு தானம் கொடுப்பது பற்றியும், அபயகிரி வளாகக் கல்வெட்டு அபயகிரி தலத்தில் அமைந்துள்ள ஒரு களபடை மற்றும் போதிமரம் பற்றியதுமாகும்.

இக் கல்வெட்டு இலங்கை யில் கிடைத்துள்ள தமிழ் சாசனங்களில் மிகப் பழைமைவாய்ந்ததாகும். துரதிர்ஷ்டவசமாக, அக் கல்வெட்டு தெளிவாக வாசிக்க முடியாதவாறு சிதைந்த நிலையில் காணப்படுகின்றது.

(தொடரும்)

# ஜனாதிபதி வெளிநாடு பயணம்

# காணாமல் போனோர் தொடர்பான அலுவலக இடைக்கால அறிக்கை வெளியீடு பிற்போடல்

## சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் தமது இடைக்கால அறிக்கை வெளியீட்டைப் பிற்போட்டுள்ளது.

அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சர்வதேச தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்ட நிலையில், காணாமல் போனோர் அலுவலகம் தமது இடைக்கால அறிக்கையை நேற்று வெளியிடும் என்றும் அந்த அறிக்கை ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் ஜனாதிபதி நாட்டில் இல்லாத நிலையில், குறித்த அறிக்கை வெளியீடு பிற்போடப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி குறித்த அறிக்கை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரிடம் கையளிக்கப்படும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் இந்த அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியாக்கப்படும் இதேவேளை பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சர்வதேச தினத்தை முன்னிட்டு, நேற்று கொழும்பு 07 இல் அமைந் துள்ள காணாமல் போனோர் அலுவலகம் விசேட நிகழ்வை ஒழுங்கு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மத்ரஸா மாணவர்கள் இருவர் நீரில் மூழ்கி மரணம்



(ஏறாவூர்)

நண்பர்களுடன் குளத்தில் குளிக்கச் சென்ற ஏறாவூர் மத்ரஸாவில் கல்வி பயின்ற மணவர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை மட்டக்களப்பு எல்லைக் கிராமமான வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் ஜெயந்தியாவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

ஏறாவூர் தக்காப் கிராமத்தினைச் சேர்ந்த முகம்மது அனஸ் முகம்மது சாகீர் (வயது-23) என்பவரும் அவரது நண்பரான மிச்சி நகர் ஏறாவூரைச் சேர்ந்த முகம்மது அசனார் முகம்மது சாதீக் (வயது-22) என்ற இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரும் ஜெயந்தியாவிற்கு சென்று அங்குள்ள தமது சக நண்பர்கள் இருவருடன் குளத்தில் குளிப்பதற்காக தோணியில் சென்றுள்ளனர்.

இதன்போது தோணி கவிழ்ந்ததினால் நால்வரும் நீரில் மூழ்கியுள்ளனர். குறித்த சம்பவத்தினை பார்வையிட்ட பொதுமக்கள் இருவரை காப்பாற்றியுள்ளனர்.

இருப்பினும் இருவரை காப்பாற்றமுடியாமல் போயுள்ளதாக அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (இ-7)

## காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சின்னவத்தைக் கிராமத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.


சின்னவத்தை கிராமத்தைச் சேர்ந்த, (47 வயது) இரண்டு பிள்ளைகளின் தந்தையான, தம்பிராசா குணராசா என்பவராவார்.

நேற்று முன்தினம் காலை, மாட்டுப் பட்டியடிக்குச் சென்ற வேளையில், காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே இவர் பலியாகியுள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1497

### லீலா

உன்னை மதிப்பவரிடம் மணக்கும் மலராகவும்



மிதிப்பவரிடம் குத்தும் முள்ளாகவும் இரு

### கஜினி

நம்கூட பழகுறவன் ஆடு மாதிரி தெரியலாம்...



நரியா இல்லையான்னு கண்டுபிடிக்கிற விளையாட்டுத்தான் வாழ்க்கை

### யசோ

தேவைப்படும் போது பழகுவதும் தேவையில்லாத போது எடுத்தெறிவதும் இருக்கும் வரை..



மனித உறவுக்குள் ஏமாற்றங்களும் மனப்போராட்டங்களும் தொடரத்தான் செய்யும்...!

### தர்மினி

நீ கீழே விழுந்துவிட்டால் உடனே எழுந்துவிடு கை கொடுத்து தூக்குவதற்கு இருக்கும் ஆட்களை விட உன்னைப் போட்டு மிதிக்க நினைக்கும் ஆட்களே அதிகம்



### கணேசா

அழகில்லை என யாரும் வருத்தப்படாதீங்க



நீங்கள் பார்க்கும் கண்ணாடி அழுக்காகக்கூட இருக்கலாம்

### ரூபி

சின்ன வயசுல பேய்னா ரொம்பப் பயம்... வளர்ந்ததும் தான் தெரிஞ்சுது



மனிதர்கள் அதைவிட பயங்கரமானவங்கன்னு!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான வர்த்தக உடன்படிக்கையை பலப்படுத்துவதற்கு இரு நாடுகளின் தலைவர்களும் இணக்கம்

(காத்மண்டு)

**இலங்கைக்கும் மியன்மாருக்கும் இடையிலான இணைந்த வர்த்தக உடன்படிக்கையை மீண்டும் செயற்படுத்தி இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார, வர்த்தக உறவுகளை புதியதோர் பாதையில் முன்னெடுக்க இரு நாடுகளின் அரச தலைவர்களும் இணக்கம் தெரிவித்தனர்.**

வங்காள விரிகுடா வலய நாடுகளின் பல்துறை தொழில்நுட்ப, பொருளாதார ஒன்றியம் எனப்படும் பிம்ஸ்டெக் (BIMSTEC) உச்சி மாநாட்டில் பங்குபற்றுவதற்காக நேபாளத்திற்கு சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மியன்மார் நாட்டின் ஜனாதிபதி வின் மைண்ட் (Win Myint) இடையில் சந்திப்பொன்று நேற்று முற்பகல் நேபாளத்தின் காத்மண்டு நகரில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போதே மேற்படி விடயம் குறித்து கலந்துரையாடப்பட்டது.

இலங்கைக்கும் மியன்மாருக்குமிடையில் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக 1999ஆம் ஆண்டு இந்த வர்த்தக உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. மிக நீண்ட வரலாற்றைக் கொண்ட மியன்மார் - இலங்கை இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்துவது குறித்து இதன்போது தலைவர்கள் விசேட கவனம் செலுத்தினர்.

இரண்டு நாடுகளும் தேரவாத பௌத்த தத்துவத்தை பின்பற்றும் நாடுகளாகவும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார நாடுகளாக இருப்பதன் காரணமாகவும் இரண்டு நாடுகளுக்குமிடையில் பல்வேறு ஒற்றுமைகள் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மைத்திரி அந்த வகையில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை இலகுவாக பலப்படுத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்காக மியன்மார் ஜனாதிபதி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களை பாராட்டிய ஜனாதிபதி மைத்திரி இலங்கை மியன்மாரின் நண்பன் என்ற வகையில் சர்வதேச மன்றங்களில்தேவையான எந்தவொரு உதவியையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் ஜனநாயகத்துக்காக பாடுபடும் தலைவியான ஆங் சான் சூகியின் நிகழ்ச்சித் திட்டம் குறித்து நினைவுகூர்ந்த ஜனாதிபதி மைத்திரி 2016ஆம் ஆண்டு அவரை சந்தித்ததையும் நினைவுகூர்ந்தார். இன்று இலங்கையில் ஜனநாயகத்தை பலப்படுத்துவதற் காக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து கருத்து தெரிவித்த ஜனாதிபதி நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படாத வகையில் நல்லிணக்கத்தை பலப்படுத்துவதை தமது முதன்மையான பொறுப்பாக மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டார்.

மேலும் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக சுயாதீன ஆணைக் குழுவை ஸ்தாபித்து, ஜனநாயகத்தை ஏற்படுத்தி, ஜனாதிபதி பதவியில் இருந்த எல்லையற்ற நிறைவேற்று அதிகாரத்தை பாராளுமன்றத்திற்கு வழங்க நடவடிக்கை எடுத்தது பற்றியும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், 2015ஆம் ஆண்டு தனது வேண்டுகோளின் பேரில் மியன்மாரிலிருந்து இலங்கைக்கு யானைக் குட்டியொன்றை வழங்குவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை குறித்தும் மியன்மார் ஜனாதிபதிக்கு மைத்திரி நன்றி தெரிவித்தார்.

இலங்கை மக்களின் கௌரவத்திற்குரிய வரலாற்று முக்கியத்துவமிக்க தலதா மாளிகைக்கு அந்த யானைக் குட்டியை அன்பளிப்புச் செய்து "புலதிசிராஜா" என்று அதற்கு பெயரிட்டுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இலங்கைக்கு வருகைதரும் சந்தர்ப்பத்தில் அந்த யானைக்குட்டியை பார்வையிடுவதற்கு வருகை தருமாறு மியன்மார் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மியன்மார் ஜனாதிபதி, மிக விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக தெரிவித்தார். 60 வருடங்களுக்கும் மேற்பட்ட இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளையும் நினைவுகூர்ந்த மியன்மார் ஜனாதிபதி, தொடர்ச்சியாக இலங்கை மியன்மாருக்கு வழங்கிவரும் உதவிகளைப் பாராட்டினார்.

இலங்கையை சேர்ந்த சுமார் 300 பிக்குகள் மியன்மாரில் பல்வேறு பௌத்த நிலையங்களில் உள்ளதாக குறிப்பிட்டார்.

தேரவாத பௌத்த தத்துவத்தை பலப்படுத்தி அதனை முன்கொண்டு செல்வதற்கு இரண்டு நாடுகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட தலைவர்கள் உறுதியளித்தனர்.

இரண்டு நாடுகளுக்குமிடையிலான சுற்றுலாத் துறையை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் மியன்மார் முதலீட்டாளர்களை எதிர்காலங்களில் அதிகளவில் இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் மியன்மார் ஜனாதிபதி தெரிவித்தார்.


விவசாய நாடுகள் என்ற வகையில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான விவசாயத்துறை ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் தலைவர்கள் கலந்துரையாடினர்.

இலங்கையில் ஜனநாயகத்தை பலப்படுத்தி சுதந்திரம் மற்றும் சுபீட்சமான நாடாக முன்னெடுத்துச் செல்வதற்காக ஜனாதிபதி மைத்திரி முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களை பாராட்டிய மியன்மார் ஜனாதிபதி, இலங்கைக்குத் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உதவியையும் வழங்குவதற்கு மியன்மார் தயாராக உள்ளதாகவும் தெரிவித்தார். (இ-7)

## காத்தான்குடியில் பாடசாலை மீது தாக்குதல்

(காத்தான்குடி)

மட்டக்களப்பு மத்திய கல்வி வலயத்திலுள்ள காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் வித்தியாலயத்தின் மீது இனந்தெரியாதோர் நேற்று மேற்கொண்ட தாக்குதலில் பாடசாலைக்குச் சேதமேற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



குறித்த தாக்குதல் சம்பவம் தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வழமைபோன்று புதன்கிழமை இயங்கிய பாடசாலை நேற்று முன்தினம் பிற்பகல் மூடப்பட்ட பின்னர் வியாழக்கிழமை கல்வி நடவடிக்கைகளுக்காக திறக்கப்பட்ட பொழுது அதன் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது தெரிய வந்ததனை அடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

குறித்த தாக்குதல் சம்பவத்தினால் பாடசாலையின் ஜன்னல் கண்ணாடிகள் நொருங்கியுள்ளதோடு தளபாடங்கள் உட்பட இன்னும் பல உடைமைகளுக்கும் சேதமேற்பட்டுள்ளதாக பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்டுள்ள பொலிஸார் குறித்த பாடசாலையை அண்டியுள்ள சி.சி.ரி.வி காணொலிக் கமரா பதிவுகள் மூலமும் மற்றும் அக்கம்பக்கத்திலுள்ளோர் ஆகியோரிடமும் இச் சம்பவத்தின் தகவல்கள் பற்றி அறிய நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ-7)

## திருகோணமலையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பிரபாகரனின் மகனின் மோட்டார் வாகனம்



(திருமலை)

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் சாள்ஸால் பாவிக்கப்பட்டதாகக் கூறப்படும் மோட்டார் வாகனம் ஒன்று காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

All Terrain Vehicle (ATV) எனப்படும் இந்த மோட்டார் வாகனமும், அதன் விபரங்களும் காட்சிப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மோட்டார் வாகனத்தை அட்மிரல் ஜெயந்த கொலம்பகே முல்லைத்தீவு கடற்படை தளத்திற்கு ஒப்படைத்து, பின்னர் கிழக்கு மாகாண கடற்படை தலைமையக அருங்காட்சியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

40" அகலமும், 77" நீளமும், 43" உயரமும் கொண்டு குறித்த மோட்டார் வாகனம் காணப்படுகின்றது.

இங்கு வரும் பலரும் குறித்த மோட்டார் வாகனத்தை பார்வையிட்டு செல்வதுடன், புகைப்படங்கள் எடுத்தும் வருகின்றனர். (இ-7)

# செய்தித்துளிகள்

## கனகரத்தினம் சுவாமிகளின் குருபூசை

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் மகாதேவா சுவாமிகள் ஆச்சிரம வேதாந்த மடத்தில் ஸ்ரீமத் கனகரத்தினம் சுவாமிகளின் 96ஆவது வருடக்குருபூசை எதிர் வரும் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. பஜனை, சமாதி அபிஷேகம், பூசை வழி பாடுகள் என்பன நடைபெற்று மகேஸ்வர பூசையுடன் நிறைவு பெறும். (இ)

## ஹெரோயினுடன் இருவர் கைது

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற சுற்றிவளைப்புகளின் போது இருவேறு பகுதிகளிலிருந்து இருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. இதன்போது, பேலியகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 90 ஆம் இலக்க தோட்ட பகுதியில் வைத்து பேலியகொட மேல்மாகாண வடக்கு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் 15 கிராம் 200 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோல், வெலிக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகா வீதியில் வைத்து மேல்மாகாண குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் 10 கிராம் 760 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயினுடன் வெலிக்கடையைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப் பட்டுள்ளார். (இ-7)

## திருட்டில் ஈடுபட்ட குடும்பம் சீசீரிவி கமராவில் சிக்கியது



(கொழும்பு)

எஹலியகொட-பரகடுவ பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் ஆட்டோவில் வந்த குடும்பம் ஒன்று பொருட்களை திருடும் காட்சி அங்கு பொருத்தப்பட்டிருந்த சீசீரீவி கமரரவில் பதிவாகியுள்ளது. அவர்கள் அங்கிருந்து சுமார் 8000 ரூபாவுக்கும் அதிக பெறுமதியர்ன பொருட்களை திருடிச் சென்றுள்ளதாக வர்த்தக நிலைய உரிமையாளர் தெரிவித்தார். (இ-7)

## வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை 63 வரை நீடிப்பு

(கொழும்பு)

விசேட வைத்தியர்கள் ஓய்வு பெறும் வயது எல்லை 63 வரையில் நீடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், அரச நிர்வாக மற்றும் சட்ட ஒழுங்குகள் அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டாரவினால் கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டுள்ளது.

இது கடந்த வருடம் ஜீலை மாதம் 6ஆம் திகதியில் இருந்து செல்லுபடியாகும் எனவும் அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவரையில் விசேட வைத்தியர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை 60 ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## தாய் கொலை! மகன் கைது

(கொழும்பு)

தாயை கொலை செய்த சந்தேகத்தின் பேரில் மகன் ஒருவரை வீரகெடிய பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளனர். வீரகெடிய, ஹகுருவெல பகுதியை சேர்ந்த 33 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வீரகெடிய, ஹகுருவெல பகுதியில் கடந்த 27 ஆம் திகதி கொலை செய்யப்பட்ட பெண்ணின் மரணத்தில் சந்தேகம்இருப்பதாகஅன்றைய தினம் வீரகெடிய பொலிஸாருக்கு தொலைபேசி அழைப்பொன்றின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து இச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் உயிரிழந்த பெண்ணின் மூத்த மகனை கைது செய்துள்ளனர்.

கடந்த 27 ஆம் திகதி உணவு பரிமாறிக்கொண்டிருக்கும் போது குறித்த பெண்ணின் மூத்த மகனால் தாக்கப்பட்டு பின்னர் கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்டதாக உயிரிழந்த பெண்ணின் இளைய மகன் பொலிஸாரிடம் வாக்குமூலம் வழங்கியுள்ளார். காணிப்பிரச்சினை காரணமாக இந்த கொலை இடம் பெற்றதாக தெரியவந்துள் ளது. (இ-7)




# தண்ணீர்

பெருந்துறவியான கோபோ ஓரிடத்தில் தங்க மாட்டார். ஒவ்வொரு ஊராகச் சென்று கொண்டிருப்பார். ஒருமுறை அவர் கடுமையான வெயிலில் நடந்து வந்தார். தாகம் அவரை வாட்டியது. அருகில் இருந்த ஊர் ஒன்று அவருக்குத் தெரிந்தது. அங்கே சென்ற அவர் ஒரு வீட்டின் முன் நின்றார்.

"அம்மா தாயே! தாகமாக இருக்கிறது. தண்ணீர் கொடுத்தால் குடித்துவிட்டுச் செல்வேன்" என்று குரல் கொடுத்தார்.

பெண்மணி ஒருத்தி வெளியே வந்தாள். "ஐயா! சிறிதுநேரம் பொறுமையாக இருங்கள். குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்து வருகிறேன்" என்று இனிமையாகச் சொன்னாள் அவள். ஒரு குடத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள்.

நேரம் சென்று கொண்டே இருந்தது. அவள் வரும் அறிகுறியே தெரியவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பொறுமை இழந்தார் கோபோ. "நான் யார் என்பதை அறியாமல் என்னிடமே விளையாடுகிறாளா? அவள் வரட்டும் நான் யார் என்பதை அவளுக்குக் காட்டுகிறேன்" என்று உள்ளுக்குள் பொருமினார்.



இடுப்பில் தண்ணீர்க் குடத்துடன் மெல்ல நடந்து வந்தாள் அவள். வீட்டிற்குள் சென்ற அவள், ஒரு பாத்திரத்தில் தண்ணீருடன் வந்தாள். அதை அவரிடம் நீட்டினாள்.

"தண்ணீர் கொண்டு வருவதற்கா இவ்வளவு நேரம்?" என்று கோபத்துடன் கேட்டார் கோபோ.

"ஐயா! இங்கே அருகில் எங்கும் தண்ணீர் இல்லை. ஐந்து கல் தொலைவில் உள்ள குளத்திற்குச் சென்று தண்ணீர் எடுத்து வருகிறேன்!"

அப்போதுதான் கோபோ அவளைக் கவனித்தார். வெயிலில் நடந்ததால் அவள் உடல் எங்கும் வியர்வை வழிந்தது. அவருடைய கோபம் போன இடம் தெரியவில்லை. "இந்த வெயிலில் ஐந்து கல் நடக்க வைத்து விட்டோமே" என்று வருந்தினார்.

"இதை ஏன் என்னிடம் முன்னரே சொல்லவில்லை?" என்று கேட்டார்.

"ஐயா! மழை பெய்யாததால் இங்கே உள்ள கிணறுகளும் குளங்களும் வற்றிவிட்டன. ஐந்து கல் தொலைவில் உள்ள குளத்தில் தான் தண்ணீர் உள்ளது. நாங்கள் எல்லாரும் நாள்தோறும் அவ்வளவு தொலைவு சென்று தான் தண்ணீர் எடுத்து வருகிறோம். நீங்கள் கேட்டபோது வீட்டில் தண்ணீர் இல்லை. அதனால்தான் அங்கே சென்று தண்ணீர் கொண்டு வந்தேன்!" என்று பணிவுடன் சொன்னாள் அவள்.

அவள் தந்த தண்ணீரைக் குடித்தார். அவர் உள்ளம் குளிர்ந்தது.

"அம்மா! உங்கள் அன்பிற்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை. உங்களால் இந்த ஊர் மக்கள் தண்ணீர்ப் பஞ்சம் இல்லாமல் வாழப்போகின்றனர்!" என்றார் கோபோ.

அங்கேயே தியானத்தில் ஆழ்ந்தார். நீண்டநேரம் அவர் உதடுகள் மந்திரங்களைச் சொல்லியபடி இருந்தன. தியானம் கலைந்து எழுந்தார். தன் கையில் இருந்த தடியால் தரையில் தட்டினார். என்ன வியப்பு! அங்கே தரை பிளவுபட்டு நீரூற்று ஒன்று வேகமாக வெளியே வந்தது.

"அம்மா! இந்த இனிமையான நீரூற்று என்றும் வற்றாது. நீங்களும் இந்த ஊர் மக்களும் வளமாக வாழ்வீர்கள்!" என்று வாழ்த்திவிட்டு அங்கிருந்து புறப்பட்டு விட்டார்.

சிந்திக்க: குட்டீஸ்! ஒரே ஒரு பெண்ணின் உபசரிப்பு, நல்ல குணத்தால் அந்தக் கிராமமே நன்மை பெற்றுக் கொண்டதைப் பார்த்தீர்களா?

# அறிவியல் பொதுஅறிவு

✦ மின்சாரத்தைக் கடத்தும் அலோகம் - கிராபைட்

✦ எப்சம் உப்பின் வேதிப்பெயர் - மக்னீசியம் சல்பேட்

✦ செயற்கை இழைகளுக்கு உதாரணம் - பொலியெஸ்டர், நைலோன், ரேயான்

✦ கேண்டி திரவம் என்பது - பொட்டாசியம் பெர்மாங்கனேட்

✦ மோர்ஸ் உப்பின் வேதிப் பெயர் - சோடியம் சல்பேட்

✦ அதிக அளவு பொட்டாசியம் அயோடைடில் கரைக்கப்பட்ட மெர்க்குரிக் அயோடைடு கரைசல்- நெஸ்லர் கரணி எனப்படும்

✦ பார்மால்டிஹைடுடன் அம்மோனியாவினை புரிந்து கிடைக்கும் கரிமச் சேர்மத்தின் பெயர் - யூரோட்ரோபின்.

✦ சலவைப் பொருட்களின் அயனிப்பகுதி - $-SO_3^-Na^+$

✦ சலவை சோடா தயாரிக்கப் பயன்படுவது - சோடியம் கார்பனேட்

✦ ஒரு எரிபொருள் எரிய தேவைப்படும் குறைந்தபட்ச வெப்பநிலையே - எரிவெப்பநிலை

✦ எரிசோடா எனப்படுவது - சோடியம் ஹைட்ராக்சைடு

✦ எரி பொட்டாஷ் எனப்படுவது - பொட்டாசியம் ஹைட்ராக்சைடு

நீரில் கரையும் காரங்கள் - அல்கலிகள்

✦ பருப்பொருள்களின் நான்காவது நிலை - பிளாஸ்மா

✦ கற்பூரம் எரியும் போது உருவாகும் வாயு - காபனீரொட்சைட்

✦ தூய்மையான நீரின் PH மதிப்பு - 7

✦ அதிக ஆற்றல் மூலம் கொண்டது - லிப்பிடு

✦ இயற்கையில் கிடைக்கும் தூய்மையான கார்பன் - வைரம்

✦ எண்ணெயினால் பற்றி எரியக்கூடிய தீயை எதைக் கொண்டு அணைக்க வேண்டும் - நுரைப்பான் (ஃபோம்மைட்)

✦ ஐஸ் தயாரிக்கும் கலத்தில் குளிர்விப்பானாகப் பயன்படுவது - நீர்ம ஹைட்ரஜன்

✦ வெள்ளை துத்தம் எனப்படுவது - ஜிங்க் சல்பேட் $ZnSO_4$

✦ உலகில் அதிக வலிமை மிக்க அமிலம் - ஃபுளுரோ சல்பியூரிக் அமிலம் $HFSO_3$

✦ திரவங்களின் கன அளவைக் காண உதவும் கருவி - கொள்கலன்

✦ காஸ்டிக் சோடா எனப்படுவது - சோடியம் ஹைட்ராக்சைடு

✦ அமில நீக்கி என்பபடுவது - மெக்னீசியம் ஹைட்ராக்சைடு

✦ காஸ்டிக் பொட்டாஷ் எனப்படுவது-பொட்டாசியம் ஹைட்ராக்சைடு.

✦ குளிர் பானங்களின் PH மதிப்பு 3.0

✦ சீமெந்து கெட்டிபடுவதைத் தாமதப்படுத்த அதனுடன் சேர்க்கப்படுவது - ஜிப்சம்

✦ ஐஸ்கிரீம் உருகுதல் எத்தகைய மாற்றத்திற்கு உதாரணம் - இயற்பியல் மாற்றம்

✦ புரதச் சேர்க்கையில் பயன்படுவது - நைதரசன்.

# வாழ்க்கைத் தத்துவங்கள்

➢ அழுது நீ கோழையாகாதே! உனக்கு நண்பன் நீயே! உன்னை காப்பற்ற வருபவர் எவர் உளர்? நீயே உன் காவலன்.... ஆதலினால் யாரையும் எதற்கும் எதிர்பார்க்காதே!

➢ உனது வாழ்க்கைக்கு எல்லை அமைத்து வாழ்! ஆனால் எல்லைக்குள் ஒருபோதும் வாழ்க்கையை அமைத்து விடாதே....!

➢ இதுவரை ஆராய்ச்சிக்கு உட்படுத்தாத ஒன்று எது தெரியுமா அன்பு. காரணம் அன்பென்றால் அகிலமும் அடங்கிவிடும் என்பதனால்.

➢ ஒருவனின் வார்த்தை தரும் வலியை விட அவன் செய்யும் செயலின் வலி அதிகம்.

➢ அன்பானவர்களிடம் உன் மனதை மறைத்து விடாதே. உன் மனதில்உள்ளதை மறைப்பதாயின் அன்பாய் இருப்பது போல்நடித்து வாழாதே.

➢ கற்பனையில் சித்திரத்தை வரைந்து விடலாம். ஆனால் ஒருவனின் மனதை புரிந்து கொள்ளாமல் நண்பன் ஆகி விட முடியாது.

➢ ஒரு மனிதனின் அதீத அன்பானது தாயிடம் மட்டுமே உள்ளது.. ஒன்றை நாம் பார்க்கும் விதத்தில் அது சரி தப்பு என்று முடிவு எடுத்து விடுகிறோம். அதை நாம் எப்போது சரியா? தவறா?என்று ஆராய்ந்து பார்ப்பதில்லை அப்படி நாம் ஆராய்ந்து பார்த்து விட்டால் சந்தேகங்கள் மனிதர் இடையே தோன்றாது.




❖ 1957-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து மலாயா கூட்டமைப்பு விடுதலை பெற்றது.

❖ 1962-ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து திரினிடாட் டொபாகோ விடுதலை பெற்றது.

❖ 1968-கார்ஃபீல்ட் சோபர்ஸ் கிரிக்கெட் போட்டியொன்றில் ஒரு ஓவரில் 6 ஆறு ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்தார்.

❖ 1978-இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய புதிய அரசியல் யாப்பு வெளியிடப்பட்டது.

❖ 1986-கலிபோர்னியாவில் இரு விமானங்கள் வானில் மோதிக்கொண்டதில் 67 பேர் வானிலும் 15 பேர் தரையிலும் கொல்லப்பட்டனர்.

❖ 1986-சோவியத் பயணிகள் கப்பல் "அட்மிரல் நகீமொவ்" கருங்கடலில் மூழ்கியதில் 423 பேர் கொல்லப்பட்டனர்.

❖ 2007-அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை நடிகர் சரத்குமார் ஆரம்பித்தார்.

**பிறப்புகள்**

❖ 1896-மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, தமிழகப் பதிப்பாசிரியர், படைப்பாளர் (இ. 1985)

❖ 1905-எஸ்.ஆறுமுகம், ஈழத்துப் பொறியியலாளர், எழுத்தாளர் (இ. 2000)

❖ 1923-வை.அநவரத விநாயகமூர்த்தி, ஈழத்து எழுத்தாளர் (இ. 2009)

❖ 1919-அம்ரிதா பிரீதம், இந்தியக் கவிஞர் (இ. 2005)

❖ 1955-லாலுபாய் பட்டேல், இந்திய அரசியல்வாதி

❖ 1963-ரிதுபர்னோ கோஷ், இந்திய நடிகர், இயக்குநர் (இ. 2013)

❖ 1969-ஜவகல் ஸ்ரீநாத், இந்தியத் துடுப்பாட்ட வீரர்

❖ 1979-யுவன் சங்கர்ராஜா, இந்திய இசையமைப்பாளர், பாடகர்

**இறப்புகள்**

❖ 1950-சு.சி.பிள்ளை, இந்தியக் கணிதவியலாளர் (பி. 1901)

❖ 1953-மங்கலங்கிழார், தமிழகத் தமிழறிஞர்(பி. 1895)

❖ 1989-புதுவை சிவம், புதுவை எழுத்தாளர், கவிஞர், இதழாளர் (பி. 1908)

❖ 1997-டயானா, வேல்ஸ் இளவரசி (பி. 1961)

❖ 2000-கே.கே.பாலகிருஷ்ணன், கேரள அரசியல்வாதி (பி. 1927)

❖ 2009-வை. அநவரத விநாயகமூர்த்தி, ஈழத்து எழுத்தாளர், ஊடகவியலாளர் (பி. 1923)

❖ 2014-சத்திராசு லட்சுமி நாராயணா, இந்திய இயக்குநர் (பி. 1933)

**சிறப்பு நாள்**

❖ விடுதலை நாள் (கிர்கிசுத்தான் 1991)

❖ தேசிய மொழி நாள் (மல்தோவா)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 100 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 100 | 95 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 120 | 130 | 120 | 140 |
| தக்காளி | 50 | 50 | 60 | 60 | 80 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 | 40 | 30 |
| கோவா | 140 | 130 | 140 | 60 | 160 | 160 |
| கரட் | 300 | 300 | 360 | 150 | 400 | 400 |
| பூசணி | 80 | 60 | 60 | 40 | 80 | 50 |
| புடோல் | 50 | 60 | 60 | 40 | 80 | 60 |
| வாழைக்காய் | 100 | 110 | 80 | 80 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 100 | 80 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 95 | 120 | 120 |
| பாகற்காய் | 100 | 160 | 120 | 120 | 120 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 50 | 30 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 70 | 80 | 60 | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 60 | 60 | 50 | 80 | 40 |
| லீக்ஸ் | 140 | 100 | 120 | 100 | 120 | 160 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 60 | 80 | 100 |
| கறிமிளகாய் | 120 | 150 | 140 | 120 | 160 | 160 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 80 | 50 | 80 | 80 |
| போஞ்சி | 200 | 160 | 180 | 120 | 160 | 300 |
| கத்தரிதம்புள்ள | 100 | 80 | – | 70 | 100 | 50 |
| கீரை-1பிடி | 30 | 25 | 20 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 80 | 70 | 70 | 80 | 20 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 45 | 30-50 | 30-60 |
| இராசவள்ளி | 160 | 140 | 140 | 120 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 100 | 120 | 120 | 100 | 160 | 100 |
| முள்ளங்கி | 50 | 50 | 40 | 30 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 70 | 50 | 120 | 80 | 40 |

அநேகர் தங்கள் காலத்தில் பெரும் பாகத்தைப் பிறரை அவலத்துக்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர். - லா புரூயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண சபை அமர்வுகளை மக்கள் உன்னிப்பாக பார்க்க வேண்டும்

வடக்கு மாகாண சபை அமர்வுகள் இறுதி அந்தலையை நெருங்கிக் கொண்டிருக்கிறது. நேற்றைய தினம் 130ஆவது அமர்வு இடம் பெற்றது.

வடக்கு மாகாண சபையின் அமர்வுகளை சில தொலைக்காட்சி சேவைகள் நேரடியாக ஒளிபரப்புகின்றன.

இவ்வாறு ஒளிபரப்பப்படுவதை எங்கள் மக்கள் பார்க்க வேண்டும். அங்கு எப்படியெல்லாம் பேசுகிறார்கள், கதைக்கிறார்கள் என்பதை உன்னிப்பாக அவதானிக்க வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

வடக்கு மாகாண சபையின் அமர்வுகளைப் பார்க்கும்போது ஒரு குறிப்பிட்ட ஆளுங்கட்சி உறுப்பினர்கள் முதலமைச்சரை எதிர்ப்பதையே தமது தொழிலாகக் கொண்டுள்ளனர்.

அதில், தமிழினத்தை வேரறுக்க வேண்டும் என்று இன்றுவரை உறுதியாக இருக்கின்ற; வன்னிப் பெருநிலப்பரப்பில் தமிழின அழிப்பில் ஈடுபட்டவர்களுடன் சேர்ந்து நிற்கின்றவர்கள் முதன்மையானவர்கள்.

அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் என்ற பெயரில் வடக்கு மாகாண சபையில் இருக்கும் முஸ்லிம் உறுப்பினர் ஒருவர் முதலமைச்சரை எதிர்த்து அதன் மூலம் தமிழினத்தை சிதைக்கக் கடுமையாகப் பாடுபடுகிறார்.

இவற்றுக்கெல்லாம் கௌரவமாகவே இடம் கொடுக்கப்படுவதைப் பார்க்கும்போது, அடுத்து வரும் மாகாண சபை அமர்வுகள் முதலமைச்சர் என்று ஒருவர் இல்லை என்பதுபோல நினைத்து சபையை நடத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எனவே வடக்கு மாகாண சபையின் இத்தகைய போக்குகளை தமிழ் மக்கள் நிச்சயமாக அவதானித்து தங்களின் தீர்ப்புரைகளை எழுதுவதற்குத் தயாராக வேண்டும்.

தவிர, முதலமைச்சரை எதிர்த்து வடக்கு மாகாண சபையின் நேரத்தையும் காலத்தையும் வீணடிப்பவர்கள் தாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உதவுவதாக நினைத்துக் கொள்ளலாம். ஆனால் உண்மை அதுவன்று.

மாறாக வடக்கு மாகாண சபையில் இருந்து கொண்டு முதலமைச்சருக்கு எதிராகச் செயற்படுபவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை - இலங்கைத் தமிழரசுக் கட்சியை சாகடிக்கின்றனர் என்பதே உண்மை.

ஆம், வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் விக்னேஸ்வரன் தமிழ் மக்களுக்கான புதிய அரசியல் தலைமையை உருவாக்கி அதில் நீதியான; நேர்மையான, தமிழ்ப்பற்றாளர்களை இணைத்துக் கொண்டு களமிறங்கினால், நாங்களே அரசியல் தலைமை என்று கூறுபவர்கள் இருந்த இடம் தெரியாமல் போகவேண்டி வரும்.

இதனை உணராதவர்கள்தான் இவர்கள் என்றால் அவர்களால்தான் கூட்டமைப்புக்கும் தமிழரசுக் கட்சிக்கும் ஆபத்தானவர்கள் என்பதையாவது புரிந்து கொள்வதற்கு கூட்டமைப்பின் தலைமையில் யாரேனும் இருப்பார்களா? என்பதுதான் தெரியவில்லை.

# துன்பியல் வாழ்க்கை வாழும் சிரிய அகதிகள்

## ஐ.நா. முகவரகம் தகவல்

லெபனானில் வாழும் சிரிய அகதிகள் வறுமைக் கோட்டின் கீழ் துன்பியல் வாழ்க்கையை வாழ்வதாக ஐ.நா.வின் அகதிகளுக்கான முகவரகம் தெரிவித்துள்ளது.

சிரியாவில் நிலவும் உள்நாட்டு போர் காரணமாக இடம்பெயர்ந்த அகதிகளில் பெரும்பாலானோர் லெபனானிலேயே வாழ்கின்றனர்.

குறிப்பாக கடந்த 2015 ஆம் ஆண்டு 1.20 மில்லியன் சிரிய அகதிகளை லெபனான் ஏற்றுக்கொண்டது. அவர்கள் 2,500 அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. குறிப்பிட்டுள்ளது. எனினும், அகதிகளை பராமரிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலை காரணமாக கடந்த 2015ஆம் ஆண்டுமுதல் அகதிகளை ஏற்கும் விடயத்தை லெபனான் நிறுத்திக் கொண்டது.

இந்நிலையில் ஏற்கெனவே அங்கு அகதிகளாகச் சென்றவர்கள் இன்னும் வறுமைக் கோட்டின் கீழ், சிரமத்திற்கு மத்தியில் வாழ்வதாக ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.

அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதென்றும், 76 சதவீதமான அகதிகள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வதாகவும் ஐ.நாவின் அகதிகளுக்கான முகவரகத்தின் தொடர்பாடல் மற்றும் தகவல் திணைக்கள பணிப்பாளர் லிஸா அபுகாலெத சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதன் பிரகாரம் 175 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான உதவிகள் மாதாந்தம் வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

33 ஆயிரம் குடும்பங்கள் இந்த உதவியை பெறவுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

ஐ.நாவின் இவ்வருட ஆரம்ப அறிக்கையின் பிரகாரம் 90 வீதமான சிரிய அகதிகள் தாய்நாட்டிற்கு திரும்ப முடியுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் அந்நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் காரணமாக நாடு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஐ.நாவின் அகதிகளுக்கான முக்வரகத்தின் அறிக்கையின பிரகாரம், லெபனானில மொத்தமாக 9 இலட்சத்து 70 ஆயிரம் அகதிகள் வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## மோகனதாஸ் சுவாமிக்கு இன்று பாராட்டு விழா

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம பொறுப்பாளர் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகளுக்கு பாராட்டு விழா இன்று நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவின் 2018ஆம் ஆண்டுக்கான "யாழ்விருது" பெற்றதற்காக இந்தக் கௌரவிப்பு இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாண மாநகர சைவ சமய கலாசாரக் குழுவினருக்கான கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மூத்த விரிவுரையாளர் அ.குமாரவேல் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் செல்வி தி.ஜென்சிகாவின் வரவேற்பு நடனமும் கு.அருணகிரிநாதனின் வரவேற்புரையும் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் போஷகர்களான வல்வெட்டித்துறை சிறிமுத்துமாரி அம்மன் கோவில் முதன்மைக்குரு சோ.தண்டகபாணிக தேசிகர், வல்வெட்டித்துறை சிவன் கோவில் முதன்மைக் குரு பிரம்மசிறி ப.மனோகரக் குருக்கள் ஆகியோரின் அருளுரைகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

அச்செழு மத்தி

## மதுரை மீனாட்சிக்கு இன்று தேர்த் திருவிழா

(புன்னாலைக்கட்டுவன்)

அச்செழு மத்தி திருவருள் மிகு நாகதம்பிரான் ஸ்ரீ மதுரை மீனாட்சி அம்மன் தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவப் பெருவிழா கடந்த 22ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெற்றுள்ளது.

பத்தாம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை பகல் 10 மணிக்கு தேர் உற்சவம் இடம்பெறவுள்ளதோடு நாளை சனிக்கிழமை பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறவுள்ளதாக ஆலய தர்மகர்த்தா எஸ். இராசேந்திரம் தெரிவித்துள்ளார். (ம-78)

## நல்லூர் கார்த்திகைத் திருவிழாவில் பகல் இசை அர்ச்சனை

நல்லூர் கந்தசுவாமி கோவில் கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு வழமைபோல் நடைபெறும் இசை அர்ச்சனை நிகழ்வு இம்முறை பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலய உள் வீதியில் எட்டுத் திசைகளில் ஈழத்து இசைக் கலைஞர்கள் பங்குபற்றும் இச்சிறப்பு நிகழ்வு கார்த்திகைத் திருவிழாவான ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு நடைபெறும். (ம)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உங்கள் வீட்டில் எப்போதும் பணம் குறையாமல் இருக்கவேண்டுமா?

பின் மீண்டும் கொஞ்சம் அரிசி இட்டு ஐந்து ரூபாய் நாணயம். அதன்மேல் கொஞ்சம் அரிசி போட்டு பத்து ரூபாய் நாணயம் ஒன்று போட்டு அதன்பின். அரிசி போததல நறையும வரை அரிசியையோ நெலலையோ போட்டு நிரப்புங்கள்.

பின் போத்தலை நன்கு இறுக்கமாக மூடி போட்டு மூடுங்கள். அந்த மூடியில் சிறிது சிறிதாக ஆறு துளைகள் போடுங்கள்.

இப்படி அரிசியும் நாணயமும் நிரம்பிய அந்த பாட்டிலை வீட்டின் அலுவலக அறை. பூஜை அறை. வரவேற்பறையில் வைக்கலாம்.

தொழில் செய்கின்ற வணிக சம்பந்தப்பட்ட இடங்கள் உங்களுக்கு இருந்தால் அங்கேயும் வைக்கலாம். பீரோ பக்கத்தில் வைப்பது இன்னும் சிறப்பு.(தொடரும்)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### என்னைப் பின்பற்றாதீர்கள்

எனனைப பினபறறாதாகள. உணமையில நஙகள எனனைப பினபறற முடியாது. ஏனெனில நான உஙகள பின்னே இருந்து உங்களை முன்னே தள்ளுகிறேன்!

எல்லாவற்றையும் விட்டுவிட்டு நீங்கள் முன்னோக்கிச் செல்லவேண்டும். உங்களுடைய அனுபவங்கள், உங்களுடைய உறவுகள், எல்லாமே கடந்த காலத்தின் பகுதி, உங்களுடைய கடந்த கால நினைவுலகத்தை விட்டுவிடுங்கள். என்னையும் சேர்த்துத்தான். எல்லாவற்றையும் விட்டுவிடுங்கள். நான் உங்கள் பின்னே இருக்கிறேன். முன்னேறிச் செல்லுங்கள். மேலும் மேலும் வேணடும எனனும அவாவை அறுதது சுதநதிர மாயிருங்கள்! அப்போது உங்களிடமிருந்து பரிவு பெருகும்.

**கேள்வி:** சாதாரணமாக அச்சத்தால் அல்லது கிளர்ச்சி மனப்பான்மையால் அல்லவா மக்கள் ஒருவரைப் பின்பற்றுவதில்லை.

**ஸ்ரீஸ்ரீ:** பின்பற்றாதே என்பது அச்சத்தால் அல்லது கிளாசசி மனபபானமையால வருவது ஒருவகை. உயாநத விழிப்புணர்வால் வருவது மற்றொரு வகை.

நீங்கள் என்னைப் பின்பற்ற முடியாது. ஏனெனில் நான் உங்கள் பின்னே இருக்கிறேன், உங்களில் இருக்கிறேன்.

நீண்டகாலமாக நீங்கள் செம்மறியாடாகவே இருந்திருக்கிறீர்கள்.

இப்போது நீங்கள் சிங்கமாக இருக்கவேண்டிய காலம்.




### யாரை சொர்க்கம் தேடுகிறது?

✦ ஒரு அநாதை அழுகின்ற சமயம், அவன் அழுவதற்கு காரணமானவனுக்காக நரகம் விரிவடைகிறது. அவனை சிரிக்க வைப்போருக்காக சொர்க்கம் விரிவடைகின்றது என்று இறைவன் கூறுகின்றான்.

✦ மோசடி செய்பவன், கஞ்சன், கொடுத்த தர்மத்தைச் சொல்லிக்காட்டுபவன் ஆகியோர் சொர்க்கம் நுழைய மாடடாரகள.

✦ உங்களைப் படைத்த இறைவனை நேசிக்கிறர்களா? முதலில் உங்களைப் போன்ற மனிதர்களை நேசியுங்கள்! அப்பொழுது தான் உங்களுக்கு இறைவன் நேசம் கிடைக்கும்.

✦ ஒரு மனிதனைப பறறி வசாரககாதர. அவனுடைய நண்பனை தெரிந்து கொள்ளுங்கள்! ஏனென்றால் ஒவ்வொருவரும் தனது நண்பனைத் தான் பின்பற்றுவான்.

✦ இவர்களை சொர்க்கம் தேடுகிறது. 1. திருக்குர்ஆனை ஓதுபவர், 2. தேவையற்ற பேச்சை பேசாமல் தம் நாவை பேணுபவர், 3. பசித்தவர்களுக்கு உணவளிப்பவர், 4. ரமலான் மாதத்தில் நோன்பு நோற்றவர்.

# இரண்டாவது ஒருநாள் போட்டி
## ஆப்கானிஸ்தானை வீழ்த்தியது அயர்லாந்து



ஆப்கானிஸ்தான் அணி அயர்லாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. முதலில் விளையாடிய இருபது-20 தொடரில் ஆப்கானிஸ்தான் 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

இதையடுத்து, 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்றது. முதல் ஒருநாள் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி வென்றுள்ளது.

இந்நிலையில் ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அந்த அணியின் முன்னிலை வீரர்கள் சொதப்பினர். நஜ்புல்லா சத்ரான் 42 ஓட்டங்களும், கப்டன் அஷ்கர் ஆப்கான் 39 ஓட்டங்களும் ரஹ்மத்ஷா 32 ஓட்டங்களும் எடுத்தனர்.

இறுதியில், ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 182



ஓட்டங்கள் எடுத்தது. அயர்லாந்து அணி சார்பில் டிம் முர்டாக் 4 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 183 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அயர்லாந்து அணி களமிறங்கியது. ஆண்ட்ரூ பால்பிரினி சிறப்பாக ஆடி அரை சதமடித்தார். அவர் 60 ஓட்டங்களிலும், பால் ஸ்ரிலிங் 39 ஓட்டங்களிலும் அவுட்டாகினர்.

சிமி சிங் இறுதிவரை போராடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். அவர் 36 ஓட்டங்களுடன் அவுட்டாகாமல் இருந்தார். அயர்லாந்து அணி 43.5 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 183 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தான் சார்பில் ரஷித் கான் 3 விக்கெட்டும், மொகமது நபி 2 விக்கெட்டும் எடுத்தனர்.

இதையடுத்து, ஒருநாள் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. தொடரை கைப்பற்றும் இறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளது. (சு)

# அமெரிக்க ஓபின் டென்னிஸ்
## அண்டி முர்ரே அதிர்ச்சித் தோல்வி

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது.

இதில் இரண்டாவது சுற்று போட்டிகள் நடைபெற்று வருகிறது. இதில் பிரிட்டிஷ் வீரர் ஆண்டி முர்ரேவும், ஸ்பெயின் நாட்டை சேர்ந்த பெர்னாண்டோ வெர்டஸ்கோவும் மோதினர்.

ஆட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே ஆண்டி முர்ரேவுக்கு கடும் சவாலாக விளங்கினார் வெர்டஸ்கோ. இதனால் முதல் செட்டை 7-5 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக ஆண்டி முர்ரே இரண்டாவது செட்டை 6-2 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

ஆனால் அதற்கு அடுத்த இரு செட்களையும் வெர்டஸ்கோ



அபாரமாக ஆடிய வெர்ட்ஸ்கோ 6-4, 6-4 என்ற கணக்கில் வென்றார்.

இறுதியில், வெர்ட்ஸ்கோ ஆண்டி முர்ரேவை 7-5, 2-6, 6-4, 6-4 என்ற கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றார். முன்னணி வீரரான ஆண்டி முர்ரே இரண்டாவது சுற்றில் அதிர்ச்சி தோல்வி அடைந்து தொடரில் இருந்து வெளியேறினார். (சு)

# பூம்பூம் இரகசியத்தை உடைத்த அப்ரிடி



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி யின் முன்னாள் வீரரும் அதிரடி ஆட்டக்காரருமான ஷகித் அப்ரிடி, ஒருநாள் போட்டிகளில் 351 சிக் சர்களும் இருபது-20 போட்டிகளில் 73 சிக்சர்களும் அடித்துள்ளார். தற்போது கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்ற அவர் சமீபத்தில் ரசிகர்களின் கேள்விக்கு டுவிட் டரில் பதிலளித்தார்.

அப்ரிடியின் மிகவும் பிரபல மான பூம்பூம் என்ற பட்டைப் பெயரை யார் வைத்தது? என ரசிகர் ஒருவர் கேட்டிருந்தார். அதற்கு ரவி சாஸ்திரி என அப்ரிடி பதில் அளித்துள்ளார்.

எனினும், அவர் எப்போது, எதற்காக அந்தப் பெயரை வைத் தார் என அப்ரிடி கூறவில்லை.

ரவி சாஸ்திரி தற்போது இந்திய அணியின் பயிற்சியாளராக உள் ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

# மாபெரும் தாச்சிச்சுற்றுப் போட்டி

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்கம் நடத்தும் 22 ஆவது ஆண்டையொட்டிய மாபெரும் தாச்சிச்சுற்றுப்போட்டி நாளைமறுதினம் பிற்பகல் 3 மணியளவில் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தலைவர் வை.ஆனந்தஜெஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர் த.குருகுலராசா, யாழ்.யூ.ஆர்.பிரண்ட் பவுண்டேன் தலைவர் க.செவ்வேள் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண சபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, யாழ். மாவட்ட விளையாட்டதிகாரி கே.விஜிதரன், வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன், யாழ்ப்பாண கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன், கௌரவ விருந்தினர்களாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எஸ்.ஆர்.சேனநாயக்கா, சுந்தர்மடம் ஜனசக்தி முன்னாள் தலைவர் து.யோகராசா, பண்டத்தரிப்பு சாந்தை விளையாட்டுக் கழகத் தலைவர் ந.ரசீகரன், பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் சன சமூக நிலையத் தலைவர் அ.பாலச்சந்திரன், பண்டத்தரிப்பு சாந்தை சிற்றம்பலம் வித்தியாசாலை அதிபர் பொ.கமலநாதன், யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க காப்பாளர் நா.பேரம்பலம் ஆகியோர் கலந்து கொள்வர். (சு)

# கரிபியன் ரி-20
## கெயிலின் அணி தோல்வி



கரிபியன் பிரிமியர் லீக்கின் 19 ஆவது ஆட்டம் நேற்று முன்தினம் செயின்ட் கிட்சில் நடைபெற்றது. இதில் செயின்ட் கிட்ஸ் அண்டு நேவிஸ் பேட்ரியாட்ஸ் - கயானா அமேசான் பேட்ரியாட்ஸ் அணிகள் மோதின.

டாஸ் வென்ற கயானா பந்து வீச்சு தேர்வு செய்தது. அதன்படி செயின்ட் கிட்ஸ் அண்டு நேவிஸ் பேட்ரியாட்ஸ் அணியின் கிறிஸ் கெய்ல், எவின் லெவிஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். லெவிஸ் 22 பந்தில் 28 ஓட்டங்களும் கிறிஸ் கெய்ல் 27 பந்தில் 40 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அதன்பின் வந்த அன்டோன் டேவ்சிச் 35 ஓட்டங்களும், பென் கட்டிங் 19 ஓட்டங்களும் அடிக்க செயின்ட் கிட்ஸ் அண்டு நேவிஸ் பேட்ரியாட்ஸ் 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 168 ஓட்டங்கள் சேர்த்தது. கயானா அணி சார்பில் இம்ரான் தாஹிர் 4 ஓவரில் 22 ஓட்டங்களும் விட்டுக்கொடுத்து நான்கு விக்கெட்டுகள் கைப்பற்றினார். (சு)

# வேக மனிதன் உசைன் போல்ட் கால்பந்தாட்டத்தில் திணறுகிறார்

உலகின் அதிவேக மனிதனாக கருதப்படும் ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட், கால்பந்தாட்டத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் திணறுவதாக தெரிவித்துள்ளார்.

ஜமைக்காவைச் சேர்ந்த ஒலிம்பிக் நாயகன் உசைன் போல்ட், ஓய்வுபெற்றதில் இருந்து தற்போது கால்பந்து விளையாட்டில் ஈடுபட்டு வருகிறார்.

உசைன் போல்ட் ஒலிம்பிக்கில் 8 முறை சம்பியன் ஆவார். இவருக்கு கால்பந்து விளையாட்டில் ஆர்வம் அதிகம். இதனை அறிந்த அவுஸ்திரேலியாவின் சென்ட்ரல் கோஸ்ட் மரைனர்ஸ் அணி, உசைன் போல்ட்டிற்கு வாய்ப்பளித்தது.

இதனைத் தொடர்ந்து, கால்பந்து போட்டிக்காக உடற்தகுதியை மேம்படுத்த உசைன் போல்ட் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

இந்நிலையில், உசைன்போல்ட் பந்துகளை பாஸ் செய்வது சரியாக இருந்தாலும் அவரால் எதிர்பார்ப்புக்கு இணங்க ஓட முடியவில்லை.

கால்பந்தாட்டத்திற்கான உடற்தகுதி இல்லாததால் விரைவாகவே அவர் களைப்படைந்து ஓய்வுக்கு சென்று விடுகிறார் என அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதனை உசைன் போல்ட்டும் ஒப்புக்கொண்டுள்ளார். இது தொடர்பாக அவர் கூறுகையில்,

'பெரிய சவால் என்னவெனில்,

நின்று பிறகு செல்ல வேண டும். பிறகு நிற்க வேண்டும் என்ற முறை எனக்கு போராட்டமாக இருக்கிறது.

இதற்கு நான் தயாராகி விட்டேன். இப்போது வழிமுறைகளைக் கற்று விட்டேன். இனி இப்படியே மேம்படுத்த வேண்டிய துதான்' என தெரிவித்துள்ளார். (சு)

# ரோகித்தைக்கண்டு பயப்படுகிறாரா ஹோலி
## கேள்வி எழுப்பும் ரசிகர்கள்

இந்திய அணியின் துவக்க ஆட்டக்காரரான ரோகித் சர்மாவைக் கண்டு ஹோலி பயப்படுவதன் காரணமாகவே ஹோலி அவரை டெஸ்ட் போட்டியில் எடுக்க மறுக்கிறார். அவரை ஓரங்கட்டி வருகிறார் என்று ரசிகர்கள் கூறி வருகின்றனர்.

இந்திய அணியின் ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் ரோகித் சர்மா, டெஸ்ட் போட்டிகளில் அந்தளவிற்கு ஆட்டத்தை வெளிப்படுத்துவதில்லை.

இதனால் இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

கடந்த 2013 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர்தான் ரோகித்திற்கு அறிமுக டெஸ்ட் தொடர்.

அந்த தொடரின் முதல் இரண்டு போட்டிகளிலும் மிடில் ஆர்டரில் இறங்கி சதமடித்தார் ரோகித் சர்மா. அதன்பிறகு 23 போட்டிகளில் ஆடி ஒரு சதம் மட்டுமே அடித்துள்ளார்.

மொத்தமாக இந்திய அணிக்காக 25 டெஸ்ட் போட்டிகளில் ஆடி, 3 சதங்கள், 9 அரைசதங்களுடன் 1479 ஓட்டங்கள் அடித்துள்ளார்.

இந்த ஆண்டின் துவக்கத்தில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தான் ரோகித் சர்மா ஆடினார். அதன் பின் ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒரு டெஸ்ட் போட்டியிலும் ரோகித்திற்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை.

தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளில் துவக்க வீரர்கள் அந்தளவிற்கு சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாத காரணத்தினால், நான்காவது, ஐந்தாவது போட்டியில் ரோகித்திற்கு இடம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

அதுமட்டுமின்றி ரோகித் கூட, தான் டெஸ்ட் கிரிக்கெட்டில் துவக்க வீரராக இறங்க தயாராக இருப்பதாகவும் கூறினார். (சு)

## காணாமல்போனோர்...

தால் குறித்த நாளில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பில் மேற்குறித்த கோரிக்கையை முன்வைப்பதாக அவை தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

சர்வதேச காணாமல் போனோர் தினம் நேற்றாகும். இத் தினம் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியமானதாகும்.

காணாமற்போனோர் தினத்தை முன்னிட்டு உலகளாவிய ரீதியாக பல விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனடிப்படையில் பல ஆய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் பாரியளவில் காணாமலாக்கப்பட்டும் காணாமல் போனதுமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவர்களை மீட்டுத் தரக் கோரி உறவினர்கள் தொடர்ச்சியான போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். அவ்வாறு போராடிக் கொண்டிருக்கின்ற அத்தனை மக்கள் சார்பிலும் நாங்கள் அரசிடம் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

அதாவது காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் இனியும் காலம் தாழ்த்தாது விசேட கவனமெடுத்து அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுக்க வேண்டும். இதனூடாக காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தில் உறவினர்களுக்கு ஒரு தீர்வை வழங்க வேண்டுமென்றும் சபை சார்ந்து கோரிக்கை ஒன்றை முன்வைப்பதாக தெரிவித்தார். (ம-9)

## அனந்தி சசிதரனுக்கு...

வடக்கு மாகாணசபையின் 130ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது.

அதில் அவையின் சிறப்புரிமை மீறல் தொடர்பாக கருத்து தெரிவித்த அவைத் தலைவர் மேற்படி அமைச்சரின் கருத்தைக் கண்டித்ததுடன், இது சபையின் சிறப்புரிமையை மீறுகின்ற செயலென்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவைத்தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்தின் வெடுக்குநாறி மலைக்கு அண்மையில் சென்ற அமைச்சர் அனந்தி சசிதரன் மாகாண சபையையும் அதன் செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சித்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. இக் கருத்துக்கள் தொடர்பில் உறுப்பினர் லிங்கநாதன் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தார்.

சபையின் ஒரு உறுப்பினருக்கு கருத்துக் கூறுகின்ற சுதந்திரமும் உரிமையும் இருக்கின்றது. அதற்காக பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கக் கூடாது. இங்கு அனந்தி சசிதரன் கூறிய கருத்துக்களில் மிகவும் பாரதூரமான பல விடயங்கள் இருக்கின்றன. அவரது இந்த உரைகள் தொடர்பில் நான் முதலமைச்சருக்கும் தெரியப்படுத்தியிருக்கின்றேன்.

பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்று சொல்லக்கூடிய அனந்தி சசிதரன் சபைக்கு வெளியே சென்று குழப்பமான, சண்டை பிடிக்கின்ற சபை என்றும் கூற முடியாது. அவருடைய கருத்துக்கள் பொருத்தமானவை அல்ல. அவ்வாறான கருத்தை சபையும் ஏற்றுக்கொள்ளுமென்றும் நான் நினைக்கவில்லை. ஆகையினால் அவரது கருத்துக்கள் கண்டிக்கத்தக்கவை என்பதுடன் சபையின் சிறப்புரிமையையும் மீறுவதாகவே அமைந்துள்ளது என தெரிவித்தார். (ம-9)

## முச்சக்கரவண்டி...

வில்லை எனவும் இயந்திரப் பகுதியில் பெற்றோல் கசிவு ஏற்பட்டு தீப் பிடித்திருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இச் சம்பவம் நேற்று முற்பகல் 9.45 மணியளவில் இடம்பெற்றதாகவும் சாரதி வண்டியை பாடசாலைக்கு முன்பாக நிறுத்திவைத்துவிட்டு பாடசாலைக்குள் சென்றுள்ளார்.

அவர் நிறுத்திவைத்து சுமார் 20 நிமிடங்களில் முச்சக்கர வண்டியில் தீ பரவி எரிந்ததாக சாரதி தெரிவித்தார். (ம)

## 5 மாத கர்ப்பிணியான...

பட்டுள்ளதுடன் குறித்த பெண் ஐந்து மாதக் கர்ப்பிணி எனவும் வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்திருக்கலாம் என்று சந்தேகித்த நிலையில் கொலைசெய்யப்பட்ட அன்று அவர் வன்புணர்வுக்கு உட்ப்படுத்தப்படவில்லை எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இடது புற கண்ணுக்கு மேற்பகுதியில் குத்தப்பட்ட உட்காயம் ஒன்று இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

உடற்கூற்று பரிசோதனை முடிவடைந்த நிலையில் இறுதிக் கிரியைகளுக்காக அவரது சடலம் தந்தையாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அத்துடன் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பெயரில் அமைக்கப்பட்டுள்ள விசேட பெரும் குற்றப் பிரிவு குழுவினர் விசாரணைகளை தீவிரப்படுத்தியுள்ளனர்

அதன் அடிப்படையில் குறித்த பெண் பயன்படுத்திய கைத்தொலைபேசியின் தரவுகள் மற்றும் பொலிசாரால் சந்தேக நபர்களாக கணிக்கப்பட்டுள்ளவர்களின் கைத்தொலைபேசியின் தரவுகள் மற்றும் பொலிஸாருக்கு தேவையான இடங்களில் உள்ள கண்காணிப்புக் கமராக்களின் பிரதியினைப் பெறுவதற்கான நீதிமன்ற அனுமதியினை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.(ம-315,312,281)

## அரசு தமிழரை ஏமாற்றி...

ங்கம் நல்லிணக்கத்தை செயற்படுத்துகிறது என்றால், வடக்கில் சிங்களவர்களை பலவந்தமாக குடியேற்ற முடியாது எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் 16 பேர் அணியின் நாடாளுமன்ற உறுப்பினரான முன்னாள் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவும் கலந்துகொண்டார்.

அங்கு கருத்து வெளியிட்ட டிலான் பெரேரா மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் நல்லிணக்கத்தை செயற்படுத்தி வருகின்றது என்றால், பலவந்தமாக வடக்கில் சிங்களவர்களை அழைத்துச் சென்று குடியேற்ற முடியாது.

நல்லிணக்கத்தை செயற்படுத்துவதாக கூறும் அரசாங்கம், வடக்கில் சிங்களவர்களை அழைத்துச் சென்று குடியேற்றுமாயின் அரசாங்கம் நல்லிணக்க செயற்பாடுகளில் தோல்வியடைந்துள்ளது என்றே அர்த்தம்.

அரசாங்கம் தண்ணீர், மின்சாரம் ஆகியவற்றை வழங்குவதில்லை. அபிவிருத்தி செய்வதில்லை. வீதிகளை அமைப்பதில்லை. நல்லாட்சியும் இல்லை. தமிழ் மக்களின் கண்களை மூடிவிட்டு, சிங்கள மக்களை அழைத்துச் சென்று குடியேற்றுகிறது.

நல்லிணக்கத்தில் தோல்வியடைந்துள்ள இந்த அரசாங்கத்திற்கு, சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகள் இல்லாமல் போயுள்ளது. செப்டம்பர் 5ஆம் திகதி அதனை வீதியில் பார்க்க முடியும் என்றார். (ம)

## உட்கட்சி அரசியலாலே...

விடயம் தொடர்பாக மீண்டும் குழப்ப நிலை ஏற்பட்ட போது மேற்குறித்த கருத்தை தவநாதன் முன்வைத்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கூட்டமைப்புக்குள் கட்சி ரீதியாக இருக்கின்ற பல பிரச்சினைகள் வேறு விதமாக திசை திருப்பப்பட்டுச் செல்கிறது. அதனால் தான் மாகாண சபையிலும் இந்த நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அமைச்சர்கள் விவகாரத்தில் ஊழல் நடந்ததா இல்லையா என்று பார்த்தால் அது கட்சிப் பிரச்சினைகளாகவே காணப்படுகின்றது.

மேலும் முதலமைச்சரை அதனைச் செய் இதனைச் செய்யாதே என சொல்ல முடியாது. ஏனெனில் இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கின்ற கூட்டமைப்பிற்குள் தான் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே அதனைத் தீர்த்து வைக்க வேண்டியது கூட்டமைப்பும் அதன் தலைமையும் தான். ஆனால் அதனைச் செய்யாமல் விட்டுவிட்டு இந்தச் சபையில் வந்து அடிபிடி சண்டையிட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இதேவேளை கூட்டமைப்பின் தலைமை மீளவும் இன்றைய முதலமைச்சர் விக்னேஸ்வரனையே அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக கொண்டு வரவிருப்பதாகவும் தெரிய வருகின்றது. ஆகையினால் தொடர்ந்தும் முரண்பட்டுக் கொள்ளாமல் செயற்பட வேண்டியது கூட்டமைப்பினரே என தெரிவித்தார்.(ம-9)

## சபை அமர்வில்...

யார் அமைச்சர்கள் என்பதில் கடும் வாதப் பிரதிவாதங்களும் இடம்பெற்றன.

வடக்கு மாகாணசபையின் 130 ஆவது அமர்வு நேற்று இடம்பெற்றது. அதில், முதலமைச்சர் விக்னேஸ்வரன் சார்பாக நியதிச் சட்டமொன்றை சபையில் வாசித்துக் காட்டுவதற்கு அமைச்சர் க.சர்வேஸ்வரனுக்கு அவைத் தலைவர் அனுமதி வழங்கினார்.

அப்போது சபை ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய எதிர்க்கட்சித்தலைவர், முதலமைச்சர் சார்பாக ஒரு அமைச்சர் தான் அதனை வாசித்துக் காட்ட முடியும். இங்கு சர்வேஸ்வரன் அமைச்சர் என்றால் சபையில் எத்தனை அமைச்சர்கள் இருக்கின்றனர். யார் யார் அமைச்சர்களாக இருக்கின்றனர் என்பதை அவைத் தலைவர் வெளிப்படுத்த வேண்டுமென கோரினார்.

நான் சர்ச்சைகளுக்கு உள்ளாக விரும்பவில்லை. அவ்வாறான சர்ச்சைகளைத் தவிர்த்துக் கொண்டு செயற்படவே விரும்புகின்றேன் என அவைத்தலைவர் தெரிவித்தார்.

கடந்த சில அமர்வுகள் சங்கடமான அமர்வாக இருப்பதாக தெரிவித்த அவைத்தலைவர், கூட்டுப் பொறுப்பை உணர்ந்தே தான் செயற்பட்டு வருவதாகவும் இந்தச் சபை குழப்பமான சபை அல்ல என்றும் அவ்வாறான குழப்பங்களுக்கு தான் அனுமதிக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார். மேலும் அடுத்த அமர்விற்கு முன்னதாக நீதிமன்ற வழக்குகளுக்கான தவணைகள் முடிவடைந்து விடும் என்பதால் அடுத்த அமர்வில் சுமுகமாக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என தெரிவித்தார். (ம-9)

## மாகாண சபையை...

என வடக்கு மாகாண சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 130ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் உறுப்பினர் ஜெயசேகரம் மேற்குறித்த பிரேரணையை சபையில் முன்மொழிந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபைகளுக்குப் பாரப்படுத்தப்பட்ட விடயங்கள் குறிப்பாக வீடமைப்பு, புனர்வாழ்வு, நீர்ப்பாசனம், கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற இன்னும் பல விடயங்கள் வட மாகாண சபைக்கு பாரப்படுத்தப்பட்ட விடயங்களாக இருக்கின்றது. அப்படியான விடயங்களில் மத்திய அமைச்சுக்கள் தன்னிச்சையாகச் செயற்படுவதும், இனரீதியாக அபிவிருத்திகள் மேற்கொள்வதும் கண்டிக்கத்தக்கது.

தமிழ் மக்களை முற்றாகப் புறக்கணித்து அபிவிருத்தி மேற்கொள்வதும் பாரதூரமான பாரபட்சமான விடயமாக நாம் கருதுகின்றோம். ஆகவே வட மாகாணத்தைப் பொறுத்தளவில் மாகாணசபைக்குப் பாரப்படுத்தப்பட்ட விடயங்களில் மத்திய அமைச்சுக்கள் தன்னிச்சையாகச் செயற்படுவதை விடுத்து மாகாண அமைச்சுக்களுடன் இணைந்து பாரபட்சம் இல்லாத முறையில் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எனவே மத்திய அரசு இந்த விடயத்தைக் கருத்தில் எடுக்கவேண்டும் என ஜனாதிபதி, பிரதம மந்திரி உட்பட மத்திய அமைச்சர்களையும் கோருவதாக தெரிவித்தார்

குறித்த பிரேரணை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ம-9)

## ஜனநாயகம், சுதந்திரத்தை...

பெற்றுவரும் வங்காள விரிகுடா வலய நாடுகளின் பல்துறை தொழில்நுட்ப பொருளாதார ஒன்றியம் பிம்ஸ்டெக் அமைப்பின் அரச தலைவர்கள் மாநாட்டில் பங்குபற்றுவதற்காக நேபாளத்திற்கு சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்குமிடையில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற சந்திப்பின்போதே இந்திய பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதியுடன் சுமூக கலந்துரையாடலில் ஈடுபட்ட இந்திய பிரதமர் எதிர்வரும் செப்ரெம்பர் 03ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதியின் பிறந்த தினத்திற்கும் தனது நல்வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மேலும் மிகுந்த அனுபவமுடைய அரசியல் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் பிம்ஸ்டெக் அமைப்பு பெரிதும் பலப்படுத்தப்படும் என நம்பிக்கை தெரிவித்த இந்திய பிரதமர் அதனூடாக பிம்ஸ்டெக் மாநாட்டின் நோக்கினையும் குறிக்கோளையும் அடைவதற்கான வாய்ப்பு ஏற்படும் எனவும் குறிப்பிட்டார். (ம)

## காற்றாலையால்...

293 கோடி ரூபாய் வருமானம் பெறும் நிலையில், அந்த நிறுவனங்களிட மிருந்து வணிக நிறுவனாங்களுக்கான சமூக கடப்பாட்டு நிதி 2 கோடி ரூபாயை மட்டும் வடக்கு மாகாணசபை பெற்றுக் கொண்டது என்ன அடிப்படையில்?. வடக்கு மாகாண சபை அந்த நிறுவனாங்களுடன் அவசர அவசரமாக ஒப்பந்தம் செய்ய வேண்டிய அவசியம் என்ன?

வடக்கு மாகாண சபையில் நேற்று மேற்கண்டவாறான கேள்விகளை ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன்வைத்தனர்.

வடமாகாணசபையின் 130ஆவது அமர்வு பேரவை செயலகத்தின் சபா மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசா மற்றும் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் முன்னாள் அமைச்சர் பொ.ஐங்கரநேசனை நோக்கி மேற்படி கேள்விகளை முன்வைத்தனர். (ம-9)

## சர்வதேச நீதிமன்றத்தில்...

களும் அதை அங்கீகரிப்பதாக தெரிவித்தனர். சில உறுப்பினர்கள் குறித்த பிரேரணையில் சில சொற்பதங்கள் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றும் சிறந்த முறையில் திருத்தம் செய்யப்பட்டு அடுத்த அமர்வில் பிரேரணை நிறைவேற்றப்பட வேண்டும் என கோரியிருந்தனர்.

அதனடிப்படையில் குறித்த பிரேரணையின் தார்ப்பரியம் உணர்ந்து அதனை சீராக்குவதற்கு சபையின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை இணைத்து ஒரு குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

அதனடிப்படையில் அவர்கள் சில திருத்தங்களை, மேற்கொண்டு அடுத்த அமர்வில் கொண்டு வந்து தீர்மானமாக நிறைவேற்றுவதென அவைத்தலைவரால் அறிவிக்கப்பட்டது. (ம-9)

## நிலையான சமாதானத்தை...

நாடாக இலங்கை உள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா உள்ளடங்கலாக 45 நாடுகளின் பங்குபற்றுதலுடன் சர்வதேச ரீதியிலான 8ஆவது பாதுகாப்பு செயலமர்வு நேற்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இதன்போதே ஜனாதிபதியின் பதிவுசெய்யப்பட்ட உரை இச் செயலமர்வில் திரையிடப்பட்டது. (ம)

## உழவு இயந்திரத்தின்...

ழுந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை பூநகரி தம்பிராய் சந்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் உழவு இயந்திரத்தின் சாரதியான நாகலிங்கம் கணேஸ் (வயது 73) என்பவர் உடல் நசியுண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, வீடுகளுக்கு வழங்கப்பட்டுள்ள குடிநீர் தாங்கிகளில் நீர் ஏற்றுவதற்கு உழவு இயந்திரத்தில் குடிநீரைக் கொண்டு சென்றவேளை தம்பிராய் சந்திப்பகுதியில் உள்ள ஏற்றத்தில் இயந்திரம் நின்றுள்ளதால் சாரதி கீழே இறங்கிப் பார்த்துள்ளார். அப்போது உழவு இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள குடிநீர் தாங்கி கழன்று சரிந்துள்ளது. இதற்குள் அகப்பட்டே சாரதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். (ம-84)


மஹஜன சம்பத
திகதி 2018/08/30
சீட்டிழுப்பு இலக்கம் 3735
ஆங்கில எழுத்து: T
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 8 3 4 0 2 1

நீரோகா
திகதி 2018/08/30
சீட்டிழுப்பு இலக்கம் 440
லக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 05 22 40 43
போனஸ் இலக்கம்: 04

கொவிசெத
திகதி 2018.08.30
சீட்டிழுப்பு இலக்கம் 1867
ஆங்கில எழுத்து: M
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 12 66 70 80

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1507
திகதி 2018/08/30
A B I
வெற்றி இலக்கங்கள்: 18 20 29 31
போனஸ் இலக்கம்: 57




வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்

## நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். **நிறஞ்சன் நகைமாடம்** தொடர்பு:
சந்தை வீதி, உடுப்பிட்டி. **0763836129**
(5525)



## நீரிழிவு (சலரோகம்), மூட்டுவாதம், முட்டு (வீசிங்) போன்ற 16 வகையான நோய்களுக்கு மூன்று மாதங்களில் நிரந்தர தீர்வு

**நோயாளிகளின் கோரிக்கைக்கு அமைய**

37 வருடங்களாக மாத்தளையில் சேவையாற்றிய பிரபல ஹோமியோபதி வைத்திய நிபுணரின் சேவை தற்போது பரந்தனிலும் யாழ்ப்பாணத்திலும் உங்களுக்காக...

(இலங்கையில் உள்ள ஐந்து பிரபல ஹோமியோபதி நிபுணர்களில் ஒருவர்)

**கிளினிக் நடைபெறும் திகதி:**
யாழ்ப்பாணத்தில் 01.09.2018 (நாளைய தினம்)
பரந்தனில் 08.09.2018
(C-3683)

90 நாட்களில் உங்கள் நோய்களில் இருந்து முற்றாக விடுபடலாம்

**I.A.S. HOSPITAL ஐ.ஏ.எஸ் மருத்துவமனை**

ஒமெகா இன்,
இல.101, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்
(2ஆம் குறுக்குத் தெரு சந்தியில்)

பல நோக்கு கூட்டுறவு
சங்க கட்டடம்,
பரந்தன் சந்தி, பரந்தன்

தொடர்பு: 0774405969. 0774441082


## வவுனி...

பொலிஸார் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மேலும் தெரிய வருகையில்,

வவுனியா, மடுகந்த குளத்தில் அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையில் தமது வழமையான பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது வெடிக்காத நிலையிலிருந்த கைக்குண்டு ஒன்று அப்பகுதியில் காணப்பட்டுள்ளது. இதையடுத்து மடுகந்த பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன் குள அபிவிருத்திப்பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் நீதிமன்ற அனுமதியைப் பெற்று கைக்குண்டை செயலிழப்பதற்கு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.(ம-250)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

தொழிற் துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat (Sri Lanka)**
[ AA 1 , AA 2, AA3 ]
Qualification :- G.C.E. o/L 06 Passes
Medium : Tamil & English

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
IABF & DABF
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths.

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Executive Level & Business level
(Tamil & English Medium)
Qualification:- G.C.E. A/L 3 Passes
Note :- 2018 பரீட்சை எடுத்த மாணவர்களும் பதிவு செய்யலாம்.

**Certificate Course in English**
Students Awaiting (A/L) Results Enrich your Proficiency in English
17th Batches have successfully Completed the course. Register your names.

**Pharmacist (External)**
Qualification:- G.C.E O/L Ordinary Pass in English Language G.C.E.(A/L) Ordinary Pass in 03Subjects including Chemistry.

Further Details: Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0212229149
(சி-3587)



## A/L-2019
**புவியியல் - N.BABU**
**PAPER CLASS**

- அலகு ரீதியான மீட்டல்
- அலகு ரீதியான பரீட்சைகள்
- பாடம் மாறி கற்பவர்களும் இணைந்து கொள்ளலாம்
- புதிய வெளிமாணவருக்கு அனுமதி உண்டு

ஆரம்பம் 01.09.2018 சனி - 12 மணி
⇨ சனி, ஞாயிறு – 12 மணி (C-3685)
**DMI** (ஆரியகுளம்) யாழ்ப்பாணம்.



## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கிலப் பாடநெறி

**DIPLOMA IN ENGLISH with PERSONALITY DEVELOPMENT**
(06 மாதங்கள்)
ஆரம்பம் : 01.09.2018 காலை 10.30 மணி
(வார இறுதி நாட்களில் நடைபெறும் பாடநெறி)
(C-3684)

வடக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான
மாணவர்களின் ஒரே தெரிவு

**E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT**
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளி அம்மன் கோவில் அருகில் )
Tel : 0212217106 / 0770610271
0773400418 / 0774924166
web: www.ecitycollege.lk



2018 தரம் 5 புலமைப்பரிசில் தோற்றிய மாணவர்களுக்கானது

**CLOUDS ACADEMY OF ENGLISH**
Date of Commencement 2018.09.01
சனிக்கிழமை 9.30 மணி
யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர் பொ.துஜீவ் நேரடி வழிகாட்டலில் (3மாத பாடநெறி)
0772247650 - நல்லூர் தெற்கு (Stanley College அருகில்)
தரம் 6 - 11 வகுப்புக்கள் நடைபெறுகின்றன (5498)



## விரைவு பொதிகள் சேவை
**விசேட விலை குறைப்பு**




UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
0768226240
(C-3569)
- மானிப்பாய்
- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

V2 TRAVELS



## New Science World

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

**Navalar Road Junction, Brown Road, Jaffna.**

## 2019 A/L DAY CLASSES

2018 August பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது.

**Physics**
திரு. R.குகன்
திரு. R.குமரன் } 11.30 am - 1.30 pm

**Chemistry**
திரு.டயஸ்
திரு.K.T.சிவகுமார் } 9.30 am - 11.30 am

**Biology**
திரு.N.T.கஜேந்திரன் - 7.30 am - 9.30 am

**Com. Maths**
திரு.S.கிருஷ்ணா - 7.30 am - 9.30 am
(முன்னாள் முன்னணி ஆசிரியர்)
திரு.S.S.செந்தில்றாஜ் செவ்வாய், புதன், வெள்ளி - 4.30 pm - 6.00 pm
திரு.T.சஞ்ஜீவன் சனி, ஞாயிறு
(English Medium) - 10.00 am - 12.00 pm
(C-3686)

**ஆரம்பம் : 05.09.2018 புதன் காலை 7.30**

**தொடர்பு: 0773364055, 0212216690**

www.newscienceworld.net



## மாபெரும் மாட்டுவண்டி சவாரி போட்டி - 2018

புளியங்கூடல் மகாமாரி சனசமூக நிலையமும் புளியங்கூடல் மகாமாரி விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் மாட்டுவண்டி சவாரிப் போட்டி.

**இடம் : புதுவெளி சவாரித் திடல், புளியங்கூடல்**
**காலம் : 02.09.2018 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : பிற்பகல் 1.00 மணி**

அ, ஆ, இ, ஈ பிரிவுகளில்
1-ம் இடம் பெறும் காளைகளுக்கு தங்கப்பதக்கங்கள் (ஒரு பவுண்)
2-ம் இடம் பெறும் காளைகளுக்கு தங்கப்பதக்கங்கள் (அரை பவுண்)
3-ம் இடம் பெறும் காளைகளுக்கு 24" LED தொலைக்காட்சிகள்
4-ம் இடம் பெறும் காளைகளுக்கு மிக்ஷிகள்
என்பவற்றுடன் மேலும் பல ஆறுதல் பரிசுகள்.

வடக்கு மாகாணத்தின் தீரமிகு காளைகளின் ஆக்ரோஷமான போட்டியைக் காண புதுவெளி சவாரித்திடலுக்கு அணிதிரள்வீர்! தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களை மேம்படுத்தும் எமது முயற்சிக்கு கரம் கொடுப்பீர்!

- **பங்குபற்றும் காளைகளுக்கு பதிவுக்கட்டணம் இல்லை.**
- **தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**





தொடர்பு:
077 732 2488,
077 236 5642
(5522)

மகாமாரி சனசமூக நிலையமும்
விளையாட்டுக்கழகமும்
புளியங்கூடல்.



## The Science Corner
**Clock Tower Lane, Jaffna.**

**2019 A/L DAY CLASS**
Con.: 0774307829

| CHEMISTRY | BIOLOGY | PHYSICS | COM.MATHS |
|---|---|---|---|
| K.சுபீசன் | K.கலைவாணன் | R.ராகுலன் | G.ஜங்கரன் |

ஆரம்பம்: 01.09.2018 காலை 7.00am (5523) **Nothing is Impossible**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.